# ஐந்து தமிழ் மணிகள்

ரம்போலா மாஸ்கரேனஸ்
தமிழ்த் துறைத் தலைவர்
செயின்ட் ஜோசப் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

OXFORD UNIVERSITY PRESS
With Compliments

ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்
1957

**Aintu Tamil Manigal**

(*Five Gems of Tamil Literature*)

By Rampolla Mascarenhas

*Paper used :* Double crown 30lb. Super calendered

Printed in India at the Brilliant Printers, Madras 14, and published by John Brown, Oxford University Press, Madras 2

# முன்னுரை

ஐந்து தமிழ் மணிகள் என்னும் இந்நூல் உயர்படிவ மாணவர்களுக்குத் துணைப்பாடப் புத்தகமாக அமையத் தக்க வகையில் இயற்றப் பெற்றுள்ளது. இதனுள் அழகுமணி, கவிமணி, கலைமணி, பண்டிதமணி, ரசிக மணி, என்னும் மகுடங்களில் ஐந்து தமிழ்ச் சான்றோர் களின் வாழ்க்கை வரலாறுகள் வரையப் பெற்றுள்ளன.

அழகுமணி எனக் குறிக்கப் பெற்றுள்ளவர் ஆசிரியர் திரு. வி. க. அவர்கள். அழகிய கருத்து, சொல், செயல் ஆகியவைகளையுடையவர். ஆதலின் அழகுமணி என் னும் பெயர் நன்கு பொருந்தியது. கவிமணி என்றது திரு. தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் என்பது யாவ ரும் அறிந்துகொள்ளக் கூடியது. சிறு குழந்தை முதல் பெரிய பண்டிதர் வரை யாவருக்கும் ஏற்றவகை யில் கவிகளை இயற்றிக் கவிமணி என்னும் பட்டம் பெற்றவர் தேசிக விநாயகம் பிள்ளை. திரு.வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் தமது பெயரைப் பரிதிமாற் கலைஞன் என்று துணிந்து மாற்றியவர். இவர் ஆங்கி லத்திலும் தமிழிலும் ஆழ்ந்த புலமையுடையவர். நாடக நற்றமிழ் வளர்ச்சியில் தனிப் பேரார்வம் உடையவராக அத்துறையில் அரிய சேவை செய்தவர் எனவே கலைமணியாவார். பண்டிதமணி திரு. கதிரேசன் செட்டியாரவர்கள் வடமொழி தென்மொழியில் நிரம்பிய பாண்டித்தியம் பெற்ற இளஞாயிறென அறிவொளி பரப்பிய இவரை அறியாதார் யார்? அழகும் கவிதையும் கலையும் புலமையும் இருந்தாலும் அவற்றை ரசிப்பவர் இல்லையாயின் பயனும் இல்லையன்றோ? பொதுவாகக்

கலை நூல்களையும் சிறப்பாக ராமாயணத்தையும் தாமும் சுவைத்துப் பிறரையும் சுவைக்கச் செய்த ரசிகமணி டி. கே. சி. இந்நூலுக்கு நிறைவு தருகின்றார்.

இந்த ஐந்து மணிகளுடைய வரலாறுகளும் நம் மாணவர்களுக்குக் கல்வியில் ஊக்கத்தையும் நல்லொழுக்கத்தில் நாட்டத்தையும் ஊட்டும் என்று நான் கூறத் தேவையில்லை. ஆகவே, கல்வித்துறையினர் இந்நூலை வரவேற்பார்கள் என நம்புகின்றேன்.

இப் புத்தகத்தை அச்சிடுவதில் ஒப்பு நோக்கி உதவி புரிந்த என் நண்பரும் எங்கள் கல்லூரித் தமிழ் விரிவுரையாளருமான திரு. P. R. கந்தசாமி அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றி உரியதாகும்.

**ரம்போலா மாஸ்கரேனஸ்**

## அட்டவணை


1. அழகுமணி - திரு.வி.க. 9

2. கவிமணி - தேசிக விநாயகம் பிள்ளை 33

3 கலைமணி - சூரிய நாராயண சாஸ்திரியார் 55

4. பண்டிதமணி - கதிரேசன் செட்டியார் 79

5. ரசிகமணி - டி. கே. சி. 101

6. பயிற்சி வினாக்கள் 122

## படங்கள்


| | |
|---|---|
| 1. திரு. வி. க. | 8 |
| 2. தேசிக விநாயகம் பிள்ளை | 32 |
| 3. சூரிய நாராயண சாஸ்திரியார் | 54 |
| 4. கதிரேசன் செட்டியார் | 78 |
| 5. டி. கே. சி. | 100 |


RMD

# அழகு மணி

## திரு. வி. க.

### அழகு மணியின் உதயம்

பொன்னி நாட்டின் புகழ் மிக்க பழம் பதி திருவாரூர். அவ்வூரில் தாளாண்மை குன்றாத வேளாண்குடி விளங்க வந்த பெருந்தகையார் விருத்தாசல முதலியார் என்பார். விருத்தாசல முதலியார் அவர்களின் பெயர் விளங்க வந்த குலக்கொழுந்து கலியாண சுந்தரர். விருத்தாசல முதலியாரும் சின்னம்மாளும் செய்த தவப்பயனாக 1883ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 26ஆம் தேதி சுந்தரனார் பிறந்தார். பிறந்த சிற்றூர் சைதாப் பேட்டைத் தாலுகாவில் நூம்பலுக்கும் செட்டியாவரத்திற்கும் இடையிலுள்ள துள்ளம். அச்சிற்றூரிலே பனை ஓலையால் வேயப் பெற்றிருந்த குடிசையில், வாழ்க்கை வசதிகள் அருகியிருந்த ஒரு சிறு மனையில் நாடெல்லாம் போற்றும் மாண்புமிக்க நம் அழகு மணி உதயமாயிற்று.

சுந்தரனாரின் தந்தை ஒரு வணிகர். தமிழ்ப் பற்று நிரம்பியவர். இசையிலும் நாடகத்திலும் தேர்ந்தவர். தம் பிள்ளைகளுக்குத் தாமே முந்திய ஆசான். வணிக அலுவல்களுக்கிடையே குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்தார். அவரால் கண்ணுங்கருத்துமாகப் பரிபாலிக்கப் பெற்ற பன்னிரு மக்களில் அறிஞர் உலகம் போற்றும் அழகு மணியென ஒளிர்கின்றவர் நம் சுந்தரனார்.

### அஞ்சா நெஞ்சம்

சுந்தரனார்க்கு ஆறு வயது. ஒருநாள் தமது நண்பர்களோடு விளையாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவ்வழியாய் ஒருவர் வந்தார். அவர் அமீனா முத்து

சாமிப் பிள்ளை. நண்பருக்கு நண்பர். வம்பர்க்கு வம்பர். அவரைக் கண்டால் எவருக்கும் அச்சம். அவரைக் கண்டதும் சிலர் எழுந்தனர். சிலர் விலகி நின்றனர். சிலர் வீட்டுக்குள் மறைந்தனர். குழந்தைக் கூட்டம் 'இதோ அமீனு! அமீனு!' என்று சொல்லிக் கொண்டே ஓட்டம் எடுத்தது. கலியாண சுந்தரர் இதனைக் கண்டார். அவர் இயல்பான துடுக்குடையவர். பிள்ளைகளின் அச்சம் அவருக்கு அர்த்தமாகவில்லை. 'அமீனுவுக்குத் தலையில் கொம்பு முளைத்திருக்கிறதா? ஏன் பயப்படுகிறீர்கள்?' என்று அதட்டிக் கேட்டார். இச்சொற்களை அமீனுவும் கேட்டார்; ஆச்சரியமுற்றார். சிறுவனின் கையைப் பற்றிக் கொண்டே திரு. விருத்தாசல முதலியாரை அடைந்தார். நடந்த நிகழ்ச்சியைச் சொல்லி 'ஐயா முதலியாரே! இச்சிறுவன் சமர்த்தன். இவன் பிற்காலத்தில் சிறந்த அறிஞனாகத் திகழ்வதற் குரிய அறிகுறிகள் இப்பொழுதே தோன்றுகின்றன. இவனைக் கருத்துடன் பேணி வளர்க்க வேண்டும்!' என்றார். தேவையற்ற அச்சம் சுந்தரனாரின் வாழ்க் கையில் எத்துறையிலும் இடம் பெறவில்லை.

இவரது வீட்டுக் கொல்லையில் ஒரு கொன்றைமரம் வானுற ஓங்கி வளர்ந்திருந்தது. அதன் உச்சியில் ஒரு காற்றாடி அகப்பட்டுக் கொண்டது. அதனை எடுக்கச் சிறுவர் பலரும் முயன்றனர். முயற்சி பலிக்கவில்லை; மனஞ் சோர்ந்து முயற்சியைக் கைவிட்டனர். இதனைப் பார்த்த சுந்தரர் திடுமெனப் பாய்ந்து மடமடவென மரத் தில் ஏறினார். காற்றாடி நூலைப் பற்றினார். இதற்குள் இவரது அன்னையார் 'அடா! அடா!' என்று கூக்குர லிட்டார். அன்னார் தமது முதுகில் அறைவது போலக் கருதியவராய் மரத்தைப்பற்றிய கரங்களை விட்டார். கரணம்போட்டுக் கிளைகளில் உராய்ந்து தரையில்விழுந் தார். முறிந்த கிளையின் கூரிய முனை இவரது விலாவில்

குத்தியது. காயம் ஏற்பட்டுக் குருதி குபீரெனப் பாய்ந்தது. சிறுவர் மெய்ம்மறந்தார். அன்னையாரும் பிறரும் இவரது துன்பநிலை கண்டு மிக வருந்தினர். பையனைப் பாயில் கிடத்தினர். பரிகாரம் செய்தனர். மருத்துவர் பச்சிலைச் சாற்றைப் பிழிந்து காயத்தின்மேல் தடவினர். இலையை அரைத்துப் பூசினர். உடம்பில் ஒரே எரிச்சல். சுந்தரர் கதறினர். அன்னை அளித்த காய்ச்சிய பாலைப் பருகினர். அயர்ந்து தூங்கினர். நாட்டு வைத்திய முறையிலேயே காயம் ஆற்றப் பெற்றது. அதன் வடு இறுதிவரை இருந்தது.

### பள்ளிப் படிப்பு

பிள்ளைகளின் பள்ளிப் படிப்பை முன்னிட்டு விருத்தாசல முதலியார் துள்ளம் கிராமத்தை விட்டுக் குடும்பத்துடன் சென்னைக்கு வந்தார். இராயப்பேட்டையில் குடியேறினர். தம் பிள்ளைகளை 'ஆரியன் பிரைமரி பாடசாலை'யில் சேர்த்தார். சுந்தரனர் இரண்டாம் வகுப்பில் சேர்க்கப் பெற்றனர். ஒவ்வொரு வகுப்பிலும் சுந்தரனர் முதன்மையாகத் தேர்ந்து பரிசுகள் பல பெற்றனர். ஐந்தாம் படிவத்தில் இவர் பயிலும்போது தமிழாசிரியர் யாழ்ப்பாணம் கதிரைவேல் பிள்ளையவர்களுடனும் தமிழ்ப் பேராசிரியர் கிருஷ்ணமாச்சாரியாரவர்களுடனும் நெருங்கிப் பழகி அவர்களுடைய அன்பையும் ஆசியையும் நிரந்தரமாகப் பெற்றனர். கதிரைவேல் பிள்ளைமீது தொடுக்கப் பெற்றிருந்த ஒரு வழக்கின் தொல்லையால் அவரது அலுவலுக்கு இடர் நேர்ந்தது. தமது உளங்கவர்ந்த ஆசிரியருக்கு வேலை போனதால், இவருக்கு ஒரு காலத்தில் தேனென இனித்த பள்ளிப் படிப்பு இப்பொழுது வேம்பெனக் கைத்தது. பள்ளிப் படிப்புக்குப் புள்ளி வைத்துக் கொண்டார். சில நாட்களில் தந்தையார் இறந்தார். உறவினர் வற்புறுத்தலுக்கு இசைந்து வணிகக் கல்லூரியில் சேர்ந்தார்.

வணிகக் கல்வியில் 'புக்கீப்பிங்' பகுதியில் தேர்ச்சியும் பெற்றார்.

**பொங்கிப் பெருகிய பல்கலை அறிவு**

சுந்தரனாரின் பள்ளிப் படிப்புத்தான் வெதும்பி வீழ்ந்தது. அவருடைய பல்கலை அறிவு பற்பல வகையில் விரிந்தும் பெருகியும் வளர்ச்சியே கண்டது; அதற்கு எக்காலத்தும் எவ்விடத்தும் தளர்ச்சி ஏற்பட்டதில்லை. கதிரைவேல் பிள்ளை பள்ளிக்கூட அலுவலோடு நில்லாமல் கந்தசாமி கோவில் வசந்த மண்டபத்திலும் அங்காள பரமேஸ்வரி கோவில் நிலையத்திலும் புராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்தார். இச்சொற்பொழிவுகள் வெறும் பழங்கதைப் பேச்சு என்று தள்ளத்தக்கனவாய் இல்லை. வேதாந்தம், சித்தாந்தம், இலக்கணம், இலக்கியம், விவகாரம், பனுவல் என்னும் பல கலைகளும் பெருக்கெடுத்துவரும் சொற்கலை விருந்தில் நம் சுந்தரனார் திளைத்துத் திளைத்துத் தேர்ந்த அறிவு செழிக்கப் பெற்றார். மயிலை மகா வித்வான் தணிகாசல முதலியாரவர்களிடம் திருவருட்பயன், சிவஞான சித்தியார், சிவஞான போதம் முதலிய நூல்களை முறையாகப் பாடங்கேட்டார். அவருடைய தொடர்பினால் ஓரளவு சமஸ்கிருத ஞானமும் வாய்த்தது. திருக்குறள் சிதம்பர முதலியார் என்ற திருக்குறள் கலைஞர் திரட்டி வைத்திருந்த குறிப்புக்கள் பல பேராசிரியர்கள் துணை செய்வன போல இவருக்குத் துணை செய்தனவாம். மறைமலை அடிகளாரிடம் ஐயப்பாடுகளை அவ்வப்போது கேட்டுத் தெளிந்தார். சென்னை செயின்ட் எப்பாஸ் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் தேவப்பிரசாதம் பண்டிதருடன் கம்பராமாயணம் வில்லி பாரதம் முதலிய இலக்கிய ஆராய்ச்சி செய்தார். வடமொழியில் வல்ல பாம்பன் சுவாமிகளிடம் உபநிடதக் கருத்துக்களைக் கேட்டு உளத்தமைத்தார். சமண சித்தாந்தங்களைப்

பார்சுநாத நயினர், சக்கரவர்த்தி நயினர் முதலியவர் களைக் கொண்டும் பௌத்தக் கொள்கைகளை அக்காலத் தில் சென்னைக்கு வந்திருந்த ஒரு பிக்குவினைக் கொண் டும் இஸ்லாமியக் கோட்பாடுகளை அப்துல் கரீம் என்ற முஸ்லீம் அறிஞரைக் கொண்டும் தெரிந்து கொண்டார். வெஸ்லி கல்லூரியில் படிக்கப் போந்த நாள் முதல் இவருக்குப் பைபிலுடன் தொடர்பு உண்டாகியது. வகுப்பில் அதையும் ஒரு பாடமாகப் படித்தார். ஞாயிறு வகுப்பில் அதன் போதனையைக் கேட்டார். பள்ளிப் படிப்பில் முற்றமுடிந்த முறையான பயிற்சி பெருமலும் பட்டம் பெருமலும் ஆங்கிலத் தத்துவ நுட்பங்களையும் விஞ்ஞானத்தின் விழுமிய கருத்துக்களையும் தெரிந்து கொள்ளலாம் என்பதை நிலைநாட்டுவார் போல ஆங் கிலக் கலைச் சொற்பொழிவுகளின் வாயிலாகவும் உரை யாடல்கள் வாயிலாகவும் பெரும் பயன் பெற்ருர். 'மதராஸ் டைம்ஸ்' என்ற ஆங்கிலத் தினத்தாளின் ஆசிரியர் கிளின் பார்லோ நடத்திய இலக்கியக் கழகக் கூட்டங்களுக்குச் சென்று ஷேக்ஸ்பியர், மில்ட்டன், வோர்ட்ஸ் வொர்த், ஷெல்லி, கீட்ஸ், பைரன், காலரிட்ஜ் முதலிய புலவர் பெருமக்களைப் பற்றிய ஆய்வுரைகளை அமைவுடன் கேட்டார். பச்சையப்பன் கல்லூரித் தலைவர் களாக விளங்கிய ரோலோ, ரென், போன்ற ஆங்கிலப் பேராசிரியர்களின் பேருரைகளும் சுந்தரரின் பல்கலை அறிவைப் பெருக்கின. காவியக் கலையைப் போலவே ஓவியக் கலையும் இசைக்கலையும் இவரை ஈர்த்தன. இவர் சலிப்பற்ற பேரார்வத்துடன் இவற்றில் ஈடு பட்டுப் பல்கலைக் குரிசிலாகப் பரிமளித்தார்.

**இல்லறவாழ்க்கை**

கலியாண சுந்தரனர் 1912ஆம் ஆண்டு கமலாம்பிகை என்னும் மங்கை நல்லாளை மணந்தார். வள்ளுவர் கூறும் வாழ்க்கைத் துணை நலத்தின் எடுத்துக்காட்

டாக அம்மையார் விளங்கினுர். இன்சொல், பணிவு, அன்பு, பொறுமை முதலிய அணி கலன்களேயே விழைந் தணிந்திருந்தார். தங்கம், வெள்ளி, இரத்தினம் முதலிய வற்ருல் ஆன நகைகளே விரும்பிடாத நல்ல பெண்மணி மனமாட்சியுடையவளாக, வீட்டின் மங்கலமாக, மனே விளக்காக, ஒளி செய்தார். அந்த மகிழ்ச்சி நிரம்பிய மங்கல மனேயின் நல்ல கலன்களாக ஆண் பெண் மகவு கள் சுடர் விட்டன. ஆனுல் அவ்விரண்டும் அடுத் தடுத்து விரைந்து மறைந்தன. கமலாம்பிகையும் காலஞ் சென்ருர். ஆறு ஆண்டளவில் சுந்தரனுரின் திருமண வாழ்வும் நிறைவுற்றது. நண்பர்களும் உறவினரும் மறுமணஞ் செய்து கொள்ள யோசனே சொன்னுர்கள் ; வேண்டுதல் விடுத்தார்கள். 'எனது இதயத்தில் இடம் பெறுதற்குரியார் ஒருவரே' என்று உறுதியாகச் சொல்லி அவர் தம் யோசனேகளேயும் வேண்டுதல்களேயும் திற மாகப் புறக்கணித்து விட்டார் நம் சுந்தரனுர்.

**வேலேகள்**

குடும்பப் பாதுகாப்பின் பொருட்டு சுந்தரனுர் பார்த்து வந்த ஊதியம் கருதிய சொந்த அலுவல்களே வேலேகள் என்று குறித்துச் சொல்வோம். முதன் முதலாகப் 'பின்னி' கம்பெனியில் வேலே கிடைத்தது. அந்தக் கம்பெனியின் சூழ்நிலே அவருக்குப் பொருந்தி வரவில்லே. முற்பகல் வேலே செய்தவர் பிற்பகலே அதனே விட்டு விலகினுர். 'வால்கார்ட் பிரதர்ஸ்' கம்பெனியை நண்ணினுர். அங்கே கணக்கு வேலே இல்லே ; 'காப்பியிஸ்ட்' வேலே இருந் தது. அதையும் அவர் விரும்பவில்லே 'ஸ்மித்' கம்பெ னிக்குப் போனுர். அங்கே கதிரைவேல் பிள்ளேக்கு வேண்டாத ஒருவர் செய்த சூழ்ச்சியால் இவருக்கு வேலே கிடைக்கவில்லே. இறுதியாக 'ஸ்பென்சர்' கம்பெனி யில் வேலே கிடைத்தது. அதுவும் நெடுங்காலம் நிலேக்க வில்லே. ஏன்? இவர் அதில் நெடுங்காலம் நிலே

கொள்ளவில்லை. விபினசந்திரபாலர், அரவிந்தர் என்னும் பெரியார்கள் தொடங்கி வைத்த சுதேசி இயக்கத்தில் இவருக்கு வேட்கையுண்டாயிற்று. அந்த இயக்கத்தின் செய்திகளை இவர் தம்மைச் சார்ந்தவர்களிடம் எடுத்துரைப்பார். அரவிந்தர் நடத்திய வந்தேமாதரம் பத்திரிகை படிப்பார். வந்தேமாதரம் என்ருல் வெள்ளையரைக் கட்டியடித்தல் என்று யாரோ ஒரு குறும்பன் திரித்துப் பொருள் உரைத்தான். இது ஸ்பென்சர் கம்பெனி வெள்ளைக்கார முதலாளிகளை அச்சுறுத்தியது. கலியாண சுந்தரர் சுதேசி இயக்கத்தில் தொடர்பு காட்டக்கூடாது என்று அவர்கள் எச்சரித்தார்கள். சுதந்தர மனப்பான்மையுடைய சுந்தரர்க்கு இந்த எச்சரிக்கை எரிச்சலை உண்டு பண்ணியது. வேலையை ராஜிஞமா செய்தார். முதலாளிகள் ராஜிஞமாவைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வற்புறுத்தினர். ஆனுல் சுந்தரனுர் அதற்கிணங்காமல் பதவியிலிருந்து விலகினுர். கம்பெனித் தலைவர் அவருக்கு வாழ்த்துக் கூறி ஒரு நற்சாட்சிப் பத்திரம் வழங்கி வழியனுப்பினுர். கம்பெனி அலுவலை விட்டதும் சொந்தத் தொழிலில் மனஞ் சென்றது. தமையனுர் உலகநாத முதலியார், நண்பர் சிவசங்கர முதலியார் இவர்களோடு சேர்ந்து உமாபதி குருப்பிரகாசம் அச்சகம் உருவாக்கினுர். சில வெளி வேலைகளோடு சுந்தரனுரின் பெரிய புராணக் குறிப்புக்களை சஞ்சிகை சஞ்சிகையாக வெளியிடும் வேலையும் திருமந்திரப் பதிப்பு வேலையும் நடைபெற்றன். இரண்டு ஆண்டுகளில் சுந்தரனுர் அவரது சகோதரர் ஆகிய இருவரின் பங்குப் பொருளும் விரயமானதே தவிரக் கண்டபலன் ஒன்றுமில்லை. அச்சகம் வேறு கைக்கு மாறியது. சுந்தரனுரும் மற்றெரு பணியை நாடினுர்.

## ஆசிரியப் பணி

அக்காலத்தில் ஆயிரம் விளக்கில் நிறுவப் பெற்றிருந்த வெஸ்லியன் மிஷன், ஆதித்திராவிடர்களுக்கென ஒரு நடுத்தரப் பள்ளி நடத்தியது. ஜான் ரத்தினம் பிள்ளை அதன் தலைமை ஆசிரியர். இந்தப் பள்ளியில் ஆசிரியராக இருக்க இசைந்து திரு. வி. க. அலுவலை ஏற்றுக் கொண்டார். 1910இல் முதல்படிவ ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினர். தலைமை ஆசிரியர் முதல் வாரத்திலேயே இவருடைய அறிவாற்றலையும் கற்பிக்கும் திறனையும் கண்டு, இவரை இரண்டாம் மூன்ரும் படிவங்களுக்கும் ஆசிரியராக நியமித்தார். வெஸ்லியன் தொழில் நுட்பப் பள்ளி என்று ஒரு புதிய ஸ்தாபனம் அங்கு ஏற்பட்டபோது அந்தப் பள்ளியில் சுந்தரனர் 'புக்கீப்பிங்' கற்றுக்கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார்.

முதல் மூன்று ஆண்டுகளாய்ச் சோதனைக்கு வந்த பள்ளிக்கூட ஆய்வாளர்* தமிழறிஞர் திரு. வி. க. வின் கற்பிக்கும் ஆற்றலை ஒரு முறை கண்டுகொண்ட பின்னர் சோதனை செய்ய வந்ததில்லை. அவரோடு தமிழைப் பற்றி உரையாடி மனநிறைவு கொள்வார். நான்காம் ஆண்டு சோதனைக்கு வந்தவர் கடுமையாக நடந்து கொண்டார். சுந்தரனர் மனக் கணக்குக் கற்பித்துக் கொடுக்கும் போது அவர் வகுப்பில் நுழைந்தார். மனக் கணக்குத் தாமும் கொடுத்தார். மாணவர்கள் விடை அளித்தனர். 'எம் முறையில் விடை கண்டாய்?' என்று ஒரு மாணவனைக் கேட்டார். அவன் ஒரு முறையைச் சொன்னன். இன்னொரு மாணவனைக் கேட்டார். அவனும் அதே முறையைச் சொன்னன். மாணவர் சொன்ன முறையே சரி என்று ஆதரித்தார், திரு. வி. க. அந்த முறை தவறு, தமது சொந்த முறையே சரி என்று தர்க்கித்தார் ஆய்வாளர். 'தங்கள் முறை

* Inspector.

இந்த வகுப்பிற்கு ஏற்றதல்ல' என்று அஞ்சாது மாற்றம் விடுத்தார் திரு. வி. க. ஆய்வாளர் சினங்கொண்டு, வேறு வகுப்பிற்குப் போய்விட்டார். 'என்னுடைய முறையே சிறந்தது என்று எவ்விடத்தும் வாதிட்டு நிறுவச் சித்தமாயிருக்கிறேன். நான் அன்பிற்குப் பணிவேன்; அதிகாரத்திற்குப் பணியேன்; தாங்கள் என்னைப் பள்ளிக்கூடத்தை விட்டு விலக்கலாம். அதைப் பற்றி நான் கவலை கொள்ளவில்லை.' இவ்வாறு ஒரு கடிதம் எழுதி ஆய்வாளரிடம் சேர்த்து விட்டார். ஆய்வாளர் நிதானமாய்ச் சிந்தித்தார். உண்மை யுணர்ந்தார். திரு. வி. க. முறையே சிறந்ததெனத் தெளிந்தார். அவரோடு சமாதானம் செய்து கொண்டார்.

**வெஸ்லி கல்லூரிப் பேராசிரியர்**

சென்னையில் அக்காலத்தில் பிரபலம் பெற்றிருந்த வெஸ்லி கல்லூரியில் நீண்ட காலம் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய சே. கிருஷ்ணமாச்சாரியார் அதனின்றும் விலகும் நிலையில் இருந்தார். அப்பதவிக்குப் பலர் விண்ணப்பஞ் செய்திருந்தனர். திரு. ஜான் ரத்தினம் தூண்டுதலின் பேரில் திரு. வி. க.வும் விண்ணப்பஞ் செய்தார். வெஸ்லி கல்லூரியின் பழைய மாணவன் என்பதனாலும் வெஸ்லியன் மிஷன் சார்புடைய பள்ளியில் பணியாற்றி வருபவர் என்பதனாலும் திரு. வி. க. அவர்களுக்கே அப்பதவியை அளித்தனர். இவர் அங்கு வந்ததும் பண்டிதர்களின் குறைபாடுகளைக் கண்டார். சம்பள உயர்வு பற்றித் தலைவரிடம் பேசினார். வேறுபல உரிமைகளைப் பற்றியும் விளம்பினார். முதன்முதல் சம்பளம் உயர்த்தப் பெற்றது. பின்னர் வசதிகள் பலவும் செய்யப் பெற்றன.

திரு. வி. க. உயர்நிலைப் பள்ளியில் பாடத்தளவில் நிற்பார். கல்லூரி வகுப்புக்களில் அவ்வளவில் நிற்

பதில்லை; பாடத்துடன் பல துறைகளைக் கலந்து போதிப்பார். மில்ட்டன், ஷெல்லி, கீட்ஸ் முதலியவர்களுடன் உவமித்து உரையாற்றுவார். மாணவர்களுக்கு வள்ளுவரை, இளங்கோவை, ஜெயங்கொண்டாரை, வில்லியரைச் சொல்லோவியத்தில் காட்டுவார். மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் மாணுக்கரிடை எழுப்புவார். பிள்ளைகளும் அவரும் உடலும் உயிரும் ஆவர். கல்லூரித் தமிழ்ப் பேரவை இவர்காலத்தில் திறம்படத் தொண்டாற்றியது. அதன் சார்பில் வசிஷ்டபாரதி, பா. வே. மாணிக்க நாயக்கர் போன்ற கலைமேகங்கள் தமிழ் அமுத மழை பொழிந்தன.

கல்லூரிப் பேராசிரியப் பணி ஈராண்டுகளுக்கு மேல் நீடிக்கவில்லை. நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற நன்னோக்கம் இவர் உள்ளத்தில் முறுகிக் கிளர்ந்தது. கல்லூரியில் பணியாற்றுகின்ற காலத்தில் இவரது நெஞ்சம் அரசியலில் தோய்ந்தது. சில அரசியல் மேடைகளிலும் உரை நிகழ்த்தினர். தாம் கல்லூரியை விடுத்துப் பொதுப்பணியில் ஈடுபடப் போவதாகக் கல்லூரித் தலைவரிடம் உறுதியாகச் சொன்னர். தலைவரும் 1917 ஆம் ஆண்டு இவரை விடுவித்தார். 'தங்களை நான் ஒரு தமிழாசிரியராக மட்டும் கொண்டேனில்லை; ஒரு தோழராகவும் கொண்டேன். வீட்டு விவகாரங்களையும் தங்களிடத்தில் பேசியிருக்கிறேன்' என்று நன்மொழி வழங்கினர் நீல் துரை. மாணவர்கள் தங்கள் அன்பு நிறைந்த காணிக்கையாகப் பொற்பதக்கம் வழங்கினர்கள்.

'யான் வெஸ்லியன் மிஷனை மறவேன், என்றும் மறவேன். யான் இக்கல்லூரியில் ஏழாண்டுகள் படித்தேன். ஆயிரம் விளக்குப் பள்ளியில் ஆருண்டு பணி செய்தேன். இக்கல்லூரியில் ஒன்றரை ஆண்டு தொண்டாற்றினேன். ஏறக்குறைய என் வயதில் ஒரு பகுதி வெஸ்

லியன் மிஷனில் கழிந்தது. வெஸ்லியன் மிஷனில் நான் பெற்ற நலன்கள் பல. அவற்றுள் சிறந்தது ஒன்று கிறிஸ்துவச் செல்வம் எனும் அந்தணச் செல்வம். இப்பொழுது என்னை நாட்டுச் சேவைக்கு ஈர்த்தது எது? வெஸ்லியன் மிஷன் எனக்களித்த கிறிஸ்துவம்; அந்தண்மை. பணிக்கு என்னுள் கால்கோலிய அன்பார்ந்த வெஸ்லியன் மிஷனை யான் எப்படி மறத்தல் கூடும்? அதன் வேலையை இக்கல்லூரியில் செய்து வந்தேன். அதைத்தொடர்ந்து நாட்டுக் கல்லூரியில் செய்யப் புகுகிறேன். விடைகொடுங்கள், போய்வருகின்றேன்.' இந்தப் பிரிவுரைப் பேச்சு அன்று போல் இன்றும் நெஞ்சை உருக்கும் நீர்மையது.

**தேச பக்தன்**

திரு. வி. க. முன்னரே செய்திருந்த ஏற்பாட்டின்படி கல்லூரியை விடுத்த இருநாட்களில் 'தேச பக்தன்' ஆசிரிய பீடத்தமர்ந்தார்.

சுதந்திரம் எனது பிறப்புரிமை என்ற வீரமுழக்கத்தால் நாட்டை விழித்தெழச் செய்த திலகரும் அவரது புனிதப் பணியில் அவருக்குத் துணை நின்ற அன்னி பெசன்ட் அம்மையாரும் திரு. வி. க. வின் தேச பக்திக்கு வித்திட்ட வித்தகர்கள். அன்னிபெசன்ட் வெளியிட்ட 'நியூ இந்தியா' நாடெங்கும் அரசியல் கனல் கக்கியது. சுப்பராய காமத் என்ற விடுதலை வீரரும் திரு. வி. க. தியாகச் செம்மலும் 'சகோதர சங்கம்' அமைத்தனர். இதன் தலைவர் நீதிபதி சதாசிவ ஐயர். சுப்பராய காமத்தும் குமாரசாமி செட்டியாரும் அமைத்த அச்சகத்திலிருந்து 'தேசபக்தன்' கிளம்பினான். 'தேசபக்தன்' ராஜாஜி, டாக்டர் ராஜன், வரதராஜலு, ஜார்ஜ் ஜோசப் போன்ற தலைவர்களின் ஆதரவைப் பெற்றான். தமிழில் பேசவராதென்போரைப் பக்தன் வன்மையாய்க் கண்டித்தான். சட்டசபையில் தமிழில் பேசிய நரசிம்ம ஐயரை

மனமார வாழ்த்தினான். அரசாங்கத்தின் தவறுதல்களை உடனுக்குடன் எடுத்துக்காட்டி நாட்டு நலத்திற் கேற்ற திட்டங்களை வகுத்துக் கூறுவதில் சலியாது முனைந்து நின்றான். திலகர், காந்தியடிகள், அன்னிபெசன்ட் போன்ற சான்றோரின் பணியையும் புகழையும் பறை சாற்றினான். வ. வெ. சு. ஐயரும், பாரதியாரும் புதுவை யில் அடைக்கலம் புகுந்திருந்தபோது அவர்கள் பிரிட் டிஷ் இந்தியாவில் நிலவ உரிமைதர வேண்டும் என்று வாதாடத் தயங்கினானில்லை. கிலாபத் கிளர்ச்சி பஞ்சாப் படுகொலை முதலியன நடைபெற்ற வேளையில் எரிமலை யாகப் பொங்கி எழுந்தான். சென்னையில் தொழிலாளர் இயக்கத்தைத் தொடங்கி வைத்தவன் தேசபக்தனே.

தேசபக்தன் தென்னாட்டு அரசியலில் 'அயல் மொழி ஆதிக்கத்தை ஒழித்ததைப் போலவே தமிழ்ப் பத் திரிகைத் துறையில் கலப்பு மொழி ஆதிக்கத்தை ஒழித்துத் தூய செந்தமிழை யாண்டும் பரப்ப முயன் றது. தேசபக்தன் இதழ்களைப் பார்க்கப் பார்க்க 'என்ன துணிச்சல்! என்ன ஆர்வம்! எத்தகைய அரசியல் நுட்பம்? எவ்வளவு தீவிர தேசபக்தி! என்ன தமிழ்! என்று தமிழ்நாடே வியந்து கொண்டிருந்தது. எல்லா வற்றிலும் அதிக வியப்பு "என்ன தமிழ்" என்பதற் காகத்தான்' என்று எழுதினார் ஆசிரியர் கல்கி. ஒரே விஷயத்தை இன்னொரு பத்திரிகை எப்படி எழுதி யிருக்கும் தேசபக்தன் எப்படி எழுதியிருக்கும் என்பதை அவர் ஓர் உதாரணங் கொண்டு நிறுவினார்.

பிற பத்திரிகையின் ஒரு தலையங்கம் ஏறக்குறைய பின்வரும் முறையில் அமைந்திருக்கும் :—

'பெங்கால் புரொவின்ஷியல் கான்பரன்ஸில் மிஸ்டர் அம்பிகா சரண் மாஜும்தாரின் பிரஸிடென்ஷியல் அட் ரெஸில் இந்தியப் பிரஜைகளின் தேசீய அபிலாஷை களை அடக்க இந்திய புயராக்ரஸி கையாண்டு வரும்

ரிப்ரஷன் முறைகளின் உபயோகமற்ற தன்மையைக் கரதலாமலகமாய்க் கூறியிருப்பது ஹிஸ் எக்ஸெலென்ஸி வைஸ்ராய் அவர்களின் கவனத்துக் கொண்டு வரப்படுமென்று நம்புகிறோம்.'

இதே விஷயத்தைத் தேச பக்தன் பத்திரிகை எழுதியிருக்கக் கூடிய முறை பின் வருமாறு:—

'வங்கத்தாயின் புதல்வர்கள் அண்மையில் மாகாண மகாநாடு கூட்டினார்கள். திரு. அம்பிகா சரண் மஜூம்தார் என்னும் வங்கவீரர் தலைமைதாங்கி அரியதொரு சொற்பொழிவு ஆற்றினார். அச்சொற்பொழிவில் இந்திய அதிகார வர்க்கத்தார் இந்தியக் குடி மக்களின் விடுதலை வேட்கையைத் தகைவதற்குக் கையாளும் அடக்கு முறைகளைக் கடிந்தார். அம்முறைகள் பயனற்றன என்பதை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெள்ளென எடுத்துக் காட்டியுள்ளார். இச் செவ்விய உரைகள் மேன்மை தங்கிய இந்திய இராஜப் பிரதிநிதியின் திருச் செவியில் ஏறுங்கொல்!'

'அரசியல் விஷயங்களைப் பற்றித் தமிழிலே பேச முடியாது—எழுத முடியாது—என்று கருதப்பட்டு வந்த அந்தக்காலத்தில் மிகவும் சிக்கலான அரசியல் விஷயங்களெல்லாம் தேசபக்தனின் தூய தமிழில் எழுதப்பட்டு வந்தன; உணர்ச்சியோடும் ஆர்வத்தோடும் எழுதப்பட்டு வந்தன. தமிழ்நாடு திகைப்பும் வியப்பும் அடைந்ததில் ஆச்சரியம் என்ன?'

**நவசக்தி**

திரு. வி. க. தேச பக்தனை இரண்டரை ஆண்டுகளாக வளர்த்து விடுத்தார். சுந்தரனார் தேச பக்தனை விட்டு விலகியதும் அவரது பணியை வெவ்வேறு வழியில் திருப்பிப் பயன்படுத்திக் கொள்ள விழைந்தவர் பலப் பலர். தொழிலாளர் தலைவர்களில் சிலர் இவரைக்கண்டு சென்னையில் தங்கி அவர்கள் சார்பாகத் தொடர்ந்த

சேவை செய்யுமாறு வேண்டினர். வயதுவந்த தொழிலாளர் ஆளுக்கு ஒரு ரூபா கொடுக்க ஐயாயிரம் ரூபா சேர்ந்தது. இத்தொகையைக் கொண்டு அச்சகம் ஒன்று வாங்கினர். அது சாது அச்சுக்கூடம் எனப் பெயர் பெற்றது. சாது அச்சுக்கூட அதிபர் என்பதனுல் கலியாண சுந்தரரைச் சிலர் சாது முதலியார் என்று அழைக்கத் தலைப்பட்டனர்.

அமைதியிலிருந்து ஆற்றல் பிறக்கின்றது. சாந்தத்திலிருந்து சக்தி பிறக்கின்றது. சாது அச்சுக்கூடத்திலிருந்து 'நவசக்தி' பிறந்தது. இருபது ஆண்டுகளாக நிலவி இணையற்ற பணியாற்றியது. தேச பக்தனுக்கும் நவசக்திக்கும் சில வேறுபாடுகள் இருந்தன. தேசபக்தன் நாள் இதழ். நவசக்தி வார இதழ். பக்தன் அக்கிரமத்தை அழிக்கும் பூர்வாங்க வேலை செய்தது. சக்தி உருவான நன்மையை ஆக்கும் நிர்மாண வேலைக்கு வழிகாட்டியது. ஆவேசமும் பரபரப்பும் பொறி பரக்க வெளி வந்தது பக்தன். அன்பும் அமைதியும் தென்றலெனத் தவழ்ந்து உலவியது சக்தி. 'தேச பக்தனின் அதி தேவதை ருத்திரன்; எழுதுகோல் பாசுபதம். நவசக்தியின் அதிதேவதை சிவம்; எழுதுகோல் குழல். தேச பக்தன் நடையில் காளி; நவசக்தி நடையில் உமை.'

நவசக்தி தேச பக்தனைப் போல ஓர் அரசியல் பிரசாரப் பத்திரிகையாக மட்டும் நிலவவில்லை. அதில் அரசியல் அடிப்படை உண்மைகள் மலர்ந்தன. அது பெண் நலனைப் பேசியது. மொழிச்சிறப்பை மொழிந்தது. கலையாக்கத்தைக் கட்டுரைத்தது. பல் வேறு துறையில் சேவை செய்ததால் அரசியலில் மாறுபட்ட கருத்துடையவரும் அதனை வாங்கி ஆதரித்தனர். இலங்கை, பர்மா, சையாம், மலேயா, மொரிஷியஸ், நேட்டால், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய அயல் நாடுகளுக்கும் நவசக்தி சென்று நமது நாட்டின் கலை, பண்

பாடு, நாகரிகம் முதலியவற்றை நல்ல முறையில் பரப்பி வந்தது.

நவசக்தியில் கூறுகூறுக வெளிவந்த திருக்குறள் விரிவுரையில், அதன் சந்தாதாருள் ஒருவரான டாக்டர் பெய்தானின் உள்ளம் படிந்தது. டாக்டர் பெய்தான் பிறப்பால் ஜெர்மானியர். தமிழ் நாட்டில் வதிந்தவர். தமிழ் கற்றவர். அவர் சுந்தரனார்க்குக் கடிதம் எழுதி பெர்லின் பல்கலைக் கழகத்தில் திருக்குறள் போதகாசிரியராக அமர்ந்து பணியாற்ற வேண்டினார். ஆறு திங்களில் ஜெர்மன் மொழியை எளிதில் பயில இயலும் என்றும் அறிவித்தார். திரு. வி. க. என்ன பதில் இறுத்தார்? 'மறு பிறப்பில்' என்று மாற்றம் விடுத்தாராம். கடிதப் போக்கு வரவுக் கிடையில் உலகப் பெரும் போர் மூண்டது. கடிதத் தொடர்பு தடையுற்றது.

நவசக்தி வாரம் மும்முறைப் பதிப்பாகவும் வெளி வந்த காலம் உண்டு. தேர்தல் காலங்களில் அது காங்கிரசின் பேரிகையாக முழங்கிற்று. 1939ஆம் ஆண்டு எழுந்த பெரும் போர் உலகநிலையைக் கலக நிலையாக்க, பத்திரிகைச் சட்டங்கள் பலப்பல தோன்ற சுதந்தரமாகப் பத்திரிகை நடத்த இயலாத நிலைமையில் சுந்தரனார் அதனை நிறுத்திவிடத் துணிந்தார். நவசக்தியில் இசைக் கட்டுரை எழுதி வந்த இராதாமணி அம்மை அதனைஏற்று நடத்துவாராயினர்.

**தேசத் தொண்டு**

தேசபக்தன் நவசக்தி முதலிய பத்திரிகைகள் வாயிலாக அன்றி மேடைப் பேச்சுக்கள் மூலமாகவும் சுந்தரனார் நம் தாய்நாடு வாழவும், தமிழர் குலம் சீரோங்கவும், தேசமக்கள் சிறப்படையவும் தேச நலன்கள் பெருகவும், ஓயாது ஒழியாது உழைத்தார். அன்னி பெசன்ட் அம்மையாரை அரசாங்கம் சிறைவைத்த போது அச்செயலைக் கண்டிக்கும் கூட்டங்கள் நாடெங்

கும் நடைபெற்றன. சென்னையில் நடைபெற்ற கண்டனக் கூட்டங்கள் பலவற்றில் இவர் பங்கு பற்றி வீர உரை நிகழ்த்தினர். டயரின் அரக்கச் செயலையும் ஓட்வியரின் மற ஆட்சியையும் கண்டித்த கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றினர். அடிக்கடி கடற்கரையில் கூடிய கூட்டங்களில் ஆணித்தரமான அரசியல் சொற் பொழிவுகளைச் செய்து மக்களுக்குத் தேசபக்தியை ஊட்டினர். தமிழ்நாட்டில் ஆங்காங்கே நடைபெற்ற மாவட்ட மாநாடுகள் பலவற்றைத் தலைமை தாங்கி நடத்தி, தேசீய விழிப்பு உணர்ச்சியையும் விடுதலை வேட்கையையும் நாட்டின் பல பாகங்களிலும் பரப்பினர். அரசியலிலும் அன்பர் பணி செய்வதையே குறிக்கோளாகக் கொண்டாரே யன்றி ஆட்சி பீடத்து அமர்வதையோ நிர்வாகத்தைப் பற்றிக்கொள்வதையோ இவர் கனவிலும் கருதினரல்லர். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற இலட்சியத்திற்கேற்ப இவரது அரசியல் தொடர்பு அமைந்து கிடந்தது.

**தொழிலாளர் தொண்டன்**

திரு. வி. க. ஸ்பென்சர் கம்பெனியில் கணக்கர் வேலை பார்க்கும் காலத்திலேயே தொழிலாளர் நிலைபற்றிக் கருத்துடையவரானர். இங்கிலாந்து பார்லிமென்ட் உறுப்பினரும் தொழிற்கட்சித் தலைவருமான கீர்ஹார்டி ஸ்பென்சர் கம்பெனிக்கு வந்திருந்தார். அப்போது அவரது தோற்றமும் பின்னர் அவரைப் பற்றி பத்திரிகையில் வெளிவந்த வரலாற்றுக் குறிப்பும் இவரையும் தொழிலாளர் அன்பராக்கத் தூண்டின. கீர்ஹார்டியைப் பார்த்தபின் திரு. வி. க. காலையில் முக்கால் மணி நேரத்திற்கு முன்னதாகவே கம்பெனிக்குள் நுழைவார். சூழ்ந்துள்ள தொழிலாளத் தோழர்களுக்குப் பத்திரிகைச் செய்திகளை எடுத்துக் கூறுவார். பின்னர் செல்வபதிச் செட்டியார் தொடர்பால் தொழிலாளர் இயக்கத்

தொடர்பு இவருக்கு உண்டாயிற்று. இவரது சொற்பொழிவுகள் தொழிலாளரை இவரிடம் பிணித்தன. கேசவப் பிள்ளை 'இந்தியன் பேட்ரியட்' பத்திரிகையில் மில் தொழிலாளர் குறைபாடுகளை எழுதிவர அவரது கட்டுரைகளிற் சிலவற்றைத் தேச பக்தனில் மொழி பெயர்த்து எழுதினர். 1918ல் வேங்கடேச குணமிர்த வர்ஷணி சபைச் சார்பில் ஒரு மாபெரும் தொழிலாளர் கூட்டம் நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் வந்திருந்தனர். மைதானத்தை நிரப்பினர்; மதில்களை நிரப்பினர்; மரங்களையும் நிரப்பினர். அக் கூட்டத்தில் சுந்தரனுர் மேல்நாட்டில் தொழிலாளர் இயக்கம் தோன்றிய வரலாற்றையும் பொருளாதார விடுதலையின் மாண்பையும் தொழிலாளர் சங்கத்தின் அவசியத்தையும் விளக்கிப் பேசினர்.

தொழிலாளரிடையே புத்துணர்ச்சி தோன்றித் ததும்பி வழிந்தது. தொழிலாளர் சங்கம் அமைப்பது எப்பொழுது என்ற ஆர்வம் எழுந்தது. அந்த ஆண்டு ஏப்ரல் 27ஆம் தேதி சென்னைத் தொழிலாளர் சங்கம் உருவாகியது. அதன் தலைவர் திரு. வாடியா. துணைத் தலைவர்கள் கேசவப் பிள்ளையும் திரு. வி. க. வும். சுந்தரனுர் காங்கிரஸ் சார்பாகச் சொற்பொழிவாற்றச் சென்ற போதெல்லாம் தொழிற்சாலைகள் உள்ள இடங்களில் தொழிலாளர் சங்கங்கள் அமைக்கத் தூண்டுவதை விரதமாகக் கொண்டார். இதன் விளைவாகச் சென்னையிலும் வெளியூர்களிலும் பல சங்கங்கள் தோற்றுவிக்கப் பெற்றன.

தொழிற்சங்க அமைப்பிலும் ஆக்க வேலையிலும் சுந்தரனுருடன் தோளொடு தோள் நின்று உழைத்துச் சிறப்புற்றோர் சர்க்கரைச்செட்டியார், என். தண்டபாணி பிள்ளை, இராஜாஜி, ஆதிநாராயணச் செட்டியார், ஏ. எஸ். ராமலு, எம். சி. இராஜா, டாக்டர் நடேச முதலியார்,

கஸ்தூரி ரங்க ஐயங்கார், வி. பி. பக்கிரிசாமி பிள்ளை, ஜார்ஜ் ஜோசப் முதலியோர் ஆவர்.

1920ஆம் ஆண்டு தொழிலாளர் மத்திய சங்கம் ஏற்பட்டது. அதன் தலைவர் திரு. வி. க. கவியரசி சரோஜினி அம்மையாரின் தங்கை மிருநாளினி செயலாளர். சம்பள உயர்வு, நேரக்குறைவு, இராப்பாடசாலை அமைப்பு, சுகாதாரம் ஆகிய நான்கினையும் தொழிற் சங்கம் வற்புறுத்தியது. குண்டு வீச்சுக்களிடையேயும் கொந்தளிப்புக்களிடையேயும் குன்றாத ஆர்வத்தோடு சங்கத்தை வளர்த்தார் திரு. வி. க. செம்மல். எனினும் நாளடைவில் இச்சங்கம் கட்சிப் பிணக்கில் சிக்கியதுபற்றிப் பெரிதும் வருந்தினர். சுந்தரனார் செய்த தேசப்பணிகளில் தலையாய பணி தொழிலாளர் நன்மைக்காக செய்த பணியே என்னலாம்.

**சீர்திருத்தம்**

'நீ உன்னைத் திருத்து, உலகம் தன்னைத் திருத்தும்' என்று உண்மையான சீர்திருத்த வாதிகள் தம்மையே நோக்கிச் சொல்லிக் கொள்வதுண்டு. சீர்திருத்தம் பற்றிப் பேச விழையும்போது சுந்தரனார் பாலியவயதில், இளமைக் காலத்தில் தம்மிடத்திருந்த பல குறைபாடுகளைத் தயங்காது வெளியிடுவார். 'சீர்திருத்த உலகில் இறங்குவதற்கு முன்னர் உள்ளம் ஓரளவிலாதல் சீர்திருத்தம் பெறுதல் வேண்டும். விலங்கு உலவும் உள்ளத்துடன் சீர்திருத்த உலகில் புகுந்தால் உலகமே விலங்காகும். என் உள்ளத்தில் ஓரளவு சீர்திருத்தம் பெற்ற பின்னரே யான் சீர்திருத்த உலகின்மீது நாட்டம் செலுத்தலானேன்' என்று தெளிவாகச் செப்புகின்றார்.

இவரது சீர்திருத்தக் கருத்துக்கள் சிலவற்றைத் தொகுத்துக் காண்போம்.

## கல்வி

மாணுக்கர் சம்பளம் கொடுப்பவராகவும் ஆசிரியர் சம்பளம் வாங்குபவராகவும் மட்டும் காலம் கழிப்பது பாவம். மாணுக்கருக்கு அடிமை வாழ்விற்குரிய கல்வி புகட்டுவது அதைவிடப் பெரிய பாவம். மாணவர் பெறுங் கல்வி ஒழுக்கத்தைக் காக்கும் கல்வி ஆதல் வேண்டும். ஆசிரியர் மாணவர் ஆகிய இருதிறத் தார்க்கும் இனிய நல்லுறவு தழைத்தல் வேண்டும். ஞாயிற்றின் ஒளியும் நறுங்காற்றும் ஊற்றும் நீரும் மாணவர் உடலை வளர்க்கும் முறையில் நாட்டுக் கல்வி மீண்டும் உயிர்த் தெழுதல் வேண்டும்.

## உயர்வு தாழ்வு

தொழிலை ஒட்டி ஏற்பட்ட வருணுசிரம தருமம் பிறப்பை ஒட்டியதாகியது. நால் வகைச் சாதிகள் நாலாயிரம் சாதிகளாயின. சாதிச் செருக்கு அரியா சனம் ஏறியது. சாதிப் புன்மையைக் கலந்துண்ணல் வேர் அறுக்கும். சாதி நோயை அறவே நீக்க வல்ல நன் மருந்து கலப்பு மணம். பள்ளிகளும் அரங்கங்களும் மாநாடுகளும் நகர சபைகளும் சட்ட சபைகளும் அரசுகளும் கலப்பு மண முயற்சிக்கு ஆக்கம் தேடும் காலமே நல்ல காலம்.

## இறை வழிபாடு

மனிதன் சீர்திருந்தத் தானே முயல்கிருன். அம் முயற்சியால் ஒரோவழி நலன் விளையினும் விளையும். பெரும்பான்மை நலன் விளையாது. மனிதன் முழு மனி தன் அல்லன். அவன் குறைபாடு உடையவன். அவ னுக்கு வேறு துணை வேண்டுவதாகின்றது. அது தெய்வத் துணை. தெய்வத் துணையைப் பெறுவிப்பது வழிபாடு. வழிபாடு மனிதனுக்கு இன்றியமையாதது. வழிபட்டால் மனிதனுக்கு மனே சக்தி உண்டாகும். அச் சக்தி அவன் சீர்திருந்த உதவிபுரியும்.

ஆண்டவன் துணையால் முதலில் தன்னகத்தைச் சீர்திருத்திக் கொள்ளாது ஆணவத்தால் உலகைச் சீர் திருத்த முயல்வது உலகைக் கெடுப்பதாகும். அம் முயற்சி வாழ்க்கையிலும் குடும்பத்திலும் சமூகத்திலும் நாட்டிலும் உலகத்திலும் துன்பம் விளைத்துக் கொண்டிருக்கும். ஆகவே, ஜனச் சீர்திருத்தத்திற்கு இறை வழிபாடு இன்றியமையாதது என்க.

**நூலாசிரியர்**

திரு. வி. க. பேச்சில் பெருநாவலர். எழுத்தில் மிகச் சிறந்த பேனு மன்னர். உறுதியான ஒரு திட்டமில்லாத உரை நடைத் துறையில் வடிவான ஒரு திட்டத்தை வகுத்து நிலை நாட்டியவர். அவருடைய உரை நடை அழகு மணி நடை. தரமான நல்ல நடையின் இன்றிய மையாத பண்புகளான தெளிவு, வன்மை, இசைமை நிரம்பிய இனிய ஒளி நடை. 'போதகாசிரியனுயிருந்த போது தமிழ்த் தாயின் கேசமும் மேகலையும் சிலம்பும் என் கண்களுக்குப் புலனுயின. இப்பொழுது தமிழ்த் தாயின் அலமரலும் விம்மலும் அழுகையும் புலனுகின் றன.' உரை நடையிலும் ஓர் இன்னேசை திரு. வி. க. நடையின் தனிச் சிறப்பு. இவருடைய கருத்துக்கள் இள மைக்கு விருந்து; முதுமைக்கு மருந்து. ஐம்பதுக்கு மேற்பட்ட உரை நடை நூல்களையும் கவிதை நூல் களையும் ஆய்வு நூல்களையும் இயற்றியளித்துள்ளார். இந்நூல்களைத் தொகுதியாய்க் காண்போர் இவைகளை ஒரு கலைக் களஞ்சியமாகவே காண்பர்.

**என்கடன் பணி செய்து கிடப்பதே**

இந்நூல் இவரது உரை நடை நூல்களுள் முக்கிய மாகக் குறிப்பிடத் தகுவது.

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

இது அப்பர் திருவாக்கு. இத்திருவாக்கில் திரு. வி. க. இளமை உள்ளம் திளைத்திருக்க வேண்டும். இந்த வாக்கே இவரது வாழ்க்கை. இதுவே இவருக்கு வழி காட்டி. இந்நூலில் பணியின் பெருமை நன்கு உணர்த் தப் பெற்றுள்ளது. அப்பரது அமுத மணி வாக்கைப் பல முறைகளில் சொற்பொழிவுகளில் விரித்துரைத்தும் கட்டுரையாக எழுதியும் இறுதியில் இந்நூல் வடிவில் வெளியிட்டனர்.

**முருகன் அல்லது அழகு**

காரைக்குடியிலிருந்து வெளிவந்த 'குமரன்' திங்கள் மலரில் மலர்ந்த 'முருகன்' என்னும் கட்டுரை 'முருகன் அல்லது அழகு' என்னும் உரை நூலாகப் பரிண மித்தது. இந்நூல் பொதிந்துள்ள உரைமணிகள் கவிதை இயல்புடையனவாக மாணவர்களால் மனனஞ் செய்யப் பெறும் தகுதியுடையன. 'இந்தியாவும் விடு தலையும்' என்ற நூலும் 'மனித வாழ்க்கையும் காந்தி யடிகளும்' என்ற நூலும் திரு. வி. க. தேசத் தொண் டின் நிலைபெற்ற சாசனங்களாக விளங்குவன. 'பெண் ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை', 'சீர் திருத்தம் அல்லது இளமை விருந்து', 'உள்ளொளி', 'சைவத் திறவு', 'இமயமலை அல்லது தியானம்' முதலி யன திரு. வி. க. உரைநடை நூல்களில் சிறப்பாகக் குறிக்கத் தகுந்தவை.

**சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து**

விருதுநகர் இளைஞர் மா நாட்டின் தலைமையுரையும் யாழ்ப்பாணம், தஞ்சை மாணுக்கர் மாநாடுகளின் தலைமை யுரைகளும்சேர்ந்து இவ்வுருப் பெற்றது. இந்நூலில் இள மை மாண்பு, அழகின் பெற்றி, அழகைப் பேணும்முறை, காவியச் சிறப்பு, ஓவியத்திறம், இசை நுட்பம், நாடக நலன், இவை நன்கு எடுத்து இயம்பப் பெற்றுள்ளன.

**பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை**

பெண்ணின் பெருமையை உள்ளபடி உணர்ந்த உத்தமர் திரு. வி. க. அவர்களுக்கியல்பான இரக்க சிந்தை நலிவுற்றிருந்த பெண்ணுலகில் கவிந்தது. எனவே இந்நூலும் கனிந்தது. மகளிர் முன்னேற்றத்திற்கான வழிவகைகளைத் திறம்படக் காட்டும் வாழ்க்கைத் துணை நூல் இது.

**இமயமலை அல்லது தியானம்**

இந்நூலில் இமயத்தின் தொன்மையும் விழுப்பமும், மலைக்கும் மக்கள் வாழ்வுக்கும் உள்ள தொடர்பும், மலை வாழ்வின் தன்மையும் உயர் நோக்கின் உயர்வும், அமைதியிலே அறிவு விளங்கும் தன்மையும், கோபுரங்களின் நோக்கமும் நுணுக்கமும் தமிழரின் மலைவாழ்வும் தியானத்தின் தன்மையும் இனிது எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

**பாவலர் திரு. வி. க.**

'பாட்டு என்பது சொல்லடுக்கன்று; அணிச் செறிவன்று; யாப்புக்கட்டுமன்று; மனத்தினின்று விரைந்தெழும் உணர்ச்சியின் பொங்கல் பாட்டாகும்.' இந்த உண்மை திரு. வி. க. வின் கவிதை நூல்களான 'உரிமை வேட்கை', 'பொதுமை வேட்டல்', 'பொருளும் அருளும்', 'சிந்தித்திருத்தல்' முதலிய பனுவல்களின் உயிரோட்டமாக இலங்குகின்றது.

**இறுதிக்காலம்**

கண்ணொளி மங்கி உடல் நலிவுற்றுப் படுக்கையில் இருந்த காலத்தும் நல்ல பல கருத்துக்களை வாய்மொழியாக வழங்க அவைகள் அன்பர்களால் எழுதப் பெற்று நூல் வடிவு பெற்றுள்ளன.

**1943**ஆம் ஆண்டு மணிவிழாக் கண்ட திரு. வி. க. **1953**ஆம் ஆண்டு எழுபதாம் ஆண்டு நிறைவு விழாக் கண்ட திரு. வி. க. **1953**ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்

17ஆம் தேதி தமது இன்னுயிர் நீத்து இறைவன் திரு வடி நிழலை அடைந்தார்.

**குணச் சிறப்பு**

திரு. வி. க. தூய உள்ளம் படைத்தவர்; தியாக சீலர். எளிமையை இயல்பாய் உடையவர். அவருடைய வாழ்வும் பணியும் தூய்மையை நிலைக்களனாகக் கொண் டிருந்தன. தூய நினைவு, தூய சொல், தூய செயல் ஆகிய திரிகரணத் தூய்மை இப் பெரியாரின் வாழ்க்கை நெறி. பால் போன்ற தூய வெண்ணுடை இவரது உள்ளத் தூய்மையின் உயரிய அறிகுறி. பொது வாழ்க்கையில் இவர் செய்ய விழைந்தது அன்பர் பணி; பயன் கருதாத திருப்பணி. அவர் விரும்பியிருந்தால் உயர்ந்த பதவியைப் பெற்றிருக்கலாம்; பெரும் பொருள் திரட்டி யிருக்கலாம். தியாகத்தின் திருவுருவாகிய திரு. வி. க. பதவியையும் பொருட்படுத்தவில்லை; பணத் தையும் மதிக்கவில்லை. எளிமை இவருக்கு இயல்பு. இவருக்குப் பகை என்று ஒன்று உண்டென்றால் அது தான் ஆடம்பரம். 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப் பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' என்ற இதயகீத வழிநின்றனர். அழுவாரோடு அழுதனர். மகிழ் வாரோடு மகிழ்ந்தனர்; யாவரும் இன்புற்றிருக்க, நினை வால் சொல்லால், செயலால், வேண்டுவன செய்தனர்.

கடன்என்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு

என்ற திருக்குறளுக்குச் சான்றாகத் திகழ்ந்தனர். அழகு மணியின் அருங்குணங்களைக் கைக் கொள்வோமாக.



# கவிமணி

## தேசிக விநாயகம் பிள்ளை

### தேரூர் தந்த தேசிக விநாயகர்

'தித்திக்கும் முக்கனிகள் எத்திக்கும் உதிர்கின்ற செறிமரச் சோலை சூழும்' தேரூர், நாஞ்சில் நாட்டில் சுசீந்திரத்தை அடுத்துள்ள ஓர் அழகிய கிராமம். நாஞ்சில் நாடு தமிழ்நாட்டின் தென்பாலது. நாஞ்சில் மலை என்னும் மலை பொருந்திய நாடாதலால் அப்பெயர் பெற்றது. கோட்டாறு பழையாறு புத்தனாறு என்னும் ஆறுகள் பாய்ந்து இந்நாட்டை வளப்படுத்துகின்றன. நீர்வள நிலவளங்கள் நன்கு பொருந்தியது இந்நாடு.

ஆதியில் இந்நாடு பாண்டியர்களைச் சேர்ந்திருந்தது. பின்னர் பாண்டியர்களுக்கும் சேரர்களுக்கும் போர் நிகழ்ந்த காரணத்தால் அடிக்கடி ஆட்சி மாறியது. சில காலம் சேரர் வசம் இருந்தது. சிலகாலம் பாண்டியர் வசமிருந்தது. இது சரித்திர வாயிலாக அறியவரும் செய்தி.

பழம் பெருமை வாய்ந்த இந்நாட்டில் அவ்வப்போது பற்பல பெரியார்கள் தோன்றி இதனை மேன்மைப் படுத்தியுள்ளனர். சமீப காலத்தில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, இசைக்கலைஞர். இலக்குமணப் பிள்ளை, ஆராய்ச்சி வல்லுநர் வையாபுரிப் பிள்ளை, இலக்கணப் புலவர் செய்குத்தம்பிப் பாவலர் முதலியோர் இங்குத் தோன்றித் தமிழுலகிற்குச் சிறந்த தொண்டாற்றி யுள்ளனர். இவர்களைப் போலவே சீரிய தமிழ்ப் பணி புரிந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களும் இந்நாட்டில் தோன்றியவராவர்.

தென்னிரதபுரி என்று பெயர் பெற்ற தேரூரிலே தேசிக விநாயகர் 1867ஆம் ஆண்டில் தோன்றினர். இவரது குடும்பம் பெருங்குடும்பம் ; குண நிறைவும் பண நிறைவும் பொருந்தி நின்ற பரம்பரைக் கலைச் செல்வர் குடும்பம். இவரது தந்தையார் திரு. சிவதாணுப் பிள்ளை அந்த வட்டாரத்தில் முதல் முதலாக ஆங்கிலங் கற்ற மிகச் சிலருள் ஒருவர். அக்காலத்தில் நாஞ்சில் நாட்டில் வேளாளரிற் சிறந்தவர்களுக்கு மூத்த பிள்ளை என்னும் பட்டமளித்துப் பெருமைப் படுத்துவது வழக்கம். சிவதாணுப்பிள்ளை அந்தப் பட்டம் பெற்றவருள் ஒருவர். கவிமணியவர்களின் அன்னையார் ஆதிலட்சுமி அம்மாள். இந்த அம்மாள் தொன்று தொட்டுத் தமிழ்ப் புலமை வாய்ந்த குடும்பத்தில் பிறந்தவர். இந்த அம்மையாரின் தந்தை சிறந்த தமிழ்ப் புலவராய்த் திகழ்ந்து 'காரியந்தாதி' என்றொரு செய்யுள் நூல் இயற்றியுள்ளார் என்று தெரிகின்றது.

**இளமைப் பருவமும் கல்விப் பயிற்சியும்**

கவிமணியவர்கள் தமது இளம் பருவத்தைத் தேரூரிலேயே கழித்தனர். இவரது ஐந்தாம் வயதில் இவர் தேரூரிலிருந்த தொடக்கப் பள்ளியில் சேர்ந்து படித்தார். அக்காலத்தில் நாஞ்சில் நாட்டவர் வீட்டில் தமிழையே பேசினர் எனினும் ஊரில் பொதுமொழியாக வழங்கியது மலையாள மொழியேயாம். ஆதலின் பள்ளியில் மலையாள மொழியே கற்பிக்கப் பெற்றது. பிற்காலத்தில் நம் கவிமணியின் முயற்சியாலும் சில பெரியூார்களின் உழைப்பினாலும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டன.

கவிமணியவர்கள் படிக்கத் தொடங்கிய காலம் ஆங்கிலத்திற்குச் செல்வாக்குக் காலம். நாட்டில் ஆங்கிலங் கற்றோர்க்குத் தனி மதிப்பு. ஆகவே, தொடக்கக் கல்வியைத் தேரூரில் முடித்த பின்னர் கவிமணி கோட்டாற்றிலிருந்த உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார்.

அங்கே மெட்ரிக்குலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்ற பிறகு கல்லூரிப் படிப்பைத் தொடங்கினுர். அப்போது இவரது அருமைத் தந்தையார் காலஞ்செல்ல, குடும்ப நிலே இவரைக் கல்லூரிப் படிப்பைத் தொடர இயலாத வாறு செய்துவிட்டது. ஆகவே, அதனே நிறுத்திவிட்டு உபாத்திமைத் தொழிலுக்கு உரிய ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து பயின்று தேர்ந்து செக்கண்டரி கிரேட் ஆசிரியர் ஆனுர்.

**தமிழ்க் கல்வி**

பழந் தமிழ்க் குடியைச் சேர்ந்த நம் கவிமணியவர் களுக்கு இயற்கையிலேயே தமிழார்வம் மிகுந்திருந்தது. அவ்வார்வம் மிகுந்த இவரது தந்தையாரும் இவருக்கு வீட்டிலே தமிழ் கற்பிக்கலானுர். தந்தையிடம் ஓரளவு தமிழ்ப் பயின்றபின் மேலும் தொடர்ந்து சிறந்த தமிழறிவு பெறுதற்குரிய ஆசிரியரைத் தேடி நின்ருர் நம் தேசிக விநாயகர். தேரூருக்கு அருகில் இருந்த பெரிய ஏரியின் நடுவில் வாணன் திட்டு என்னும் இடம் இருந்தது. அங்கே திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த மடம் ஒன்று உண்டு. அந்த மடத்தில் சாந்தலிங்கத் தம்பிரான் என்ெருரு தமிழ் அறிஞர் இருந்தார். கவிமணியவர்கள் அதை அறிந்து அவரிடம் சென்று தமிழ் கற்று வந்தார்.

**கவிபாடுந் திறன்**

கவிமணியவர்களுக்கு அவரது பத்தாம் வயதி லிருந்தே கவிபாடும் திறன் இருந்தது என்று தெரிகின் றது. தம்பிரானிடத்தில் தமிழ் கற்கக் கற்க அவருக்கு அவ்வாற்றல் மிகுந்து வந்தது.

தேரூரில் இருந்த நல்லமாடன் கோயிலில் ஆண்டு தோறும் நிகழ்ந்த திருவிழாவில் ஆடு கோழிகள் பலி யிடப் பெறும். கவிமணி தம் இளவயதிலேயே இந்த உயிர்க் கொலேயைப் பொருது மனம் வருந்தினுர். தம்

வருத்தத்தைத் தெரிவிக்கும் முறையில் அவ்வுயிர்க் கொலையை மறுத்துச் செய்யுள் செய்தார். இச் செய்யுள் முழுமையும் இப்போது கிடைக்கவில்லை. 'நாடியறம் தேடியிடும் நற்றேரூர் தன்னிலமர் நல்லமாடன்' என்பது அதில் ஓரடியாகும். மிக்க இளவயதிலேயே இயற்றப் பெற்ற இச்செய்யுள் எத்துணை ஓசைநயம் வாய்ந்துள்ளது?

**காக்கை ஏறப் பனம்பழம் விழுந்தது**

வாணன் திட்டு மடத்தில் சாந்தலிங்கத் தம்பிரானுக்குப்பின் சங்கரலிங்கத் தம்பிரான் 'கட்டளைத் தம்பிரானாக' இருந்தார். அவரை மதுரையில் இருந்த போற்றிக்கண்ணு என்பான் ஏமாற்றிவிட்டான். சிறந்த உருத்திராக்கங்களை விரும்பிய அத் தம்பிரான் அவற்றை வாங்கித் தருமாறு போற்றிக் கண்ணுவிடம் பணம் கொடுக்க, அவன் அவற்றை வாங்கி வந்து கொடாமல் ஏமாற்றினான். அதைக் கண்டு வெகுண்ட அவர் விளையாட்டாகக் கவிமணியிடம் அவன் மீது வசைச் செய்யுள் பாடி அதனை அவனுக்கு அனுப்புமாறு கூறினார். கவிமணியும் அவ்வாறே செய்தார். செய்யுள் கடிதம் அவனைப் போய் அடையுமுன் அவன் இறந்து போனான். காக்கையேறப் பனம்பழம் விழுந்தது என்னும் பழமொழியையொட்டி இச் செயல் நிகழ்ந்தது. இப்பாட்டு இப்போது கிடைத்திலது.

சைவர்கள் சைவத் தீக்கை பெறுவது உயர்வானதும் பெருமைதரத் தக்கதுமான செயல் என்பர். ஆதலால் அதனைப் பெற விரும்பினார் நம் கவிமணி. அக்காலத்தில் திருநெல்வேலியில் உமையொருபாகக் குருக்கள் என்பவர் நற்குண நல்லொழுக்கம் பொருந்திய பெரியாராய் விளங்கி வந்தார். கவிமணி அவரிடம் சைவத் தீக்கை பெற்றுக் கொண்டனர். அப்போது அவரைப் புகழ்ந்து,

வேறு மொருதுணையான் வேண்டுவனோ வேணுவினர்
தேறுமுமை யோர்பாகத் தேசிகனே—கூறுமெனக்
கெய்யாப் பிறவி யிருளகல நீயளித்த
பொய்யா விளக்கிருக்கும் போது

என்றொரு வெண்பாவைப் பாடினர். அப்போது இவருக்கு ஏறக் குறைய இருபது வயது.

சாந்தலிங்கத் தம்பிரான் கவிமணிக்குப் பாடங் கற்பித்த அவ்விளமைப் பருவத்திலேயே தேரூர் அழகம்மை என்னும் தேவியின் மீது பிரபந்த மொன்று பாடுமாறு கவிமணிக்குக் கட்டளையிட, அவரும் அவ்வாறே 'அழகம்மை ஆசிரிய விருத்தம்' என்றொரு சிறிய நூலியற்றினர்.

திருமண வாழ்க்கை

கவிமணியவர்கள் கல்லூரிப் படிப்புப் படிக்க முற்பட்ட காலத்தில் அவருக்குத் திருமணம் நிகழ்ந்தது. உமையம்மையார் என்பார் இவரது வாழ்க்கைத் துணைவியார். நாகர் கோவிலுக்கு வடக்கே இரண்டு மைல் தொலைவிலுள்ள புத்தேரி இந்த மங்கை நல்லாளின் பிறப்பிடமாம். அவ்வூரில் போகீசுவரர் என்னும் ஒரு பெரியாரது சமாதி உண்டு. அச்சமாதி மீது பெரிய புற்று ஒன்று உண்டு. அச்சமாதியை அடுத்து ஒரு பெரிய ஏரியும் உண்டு. அப்புற்றாலும் அவ்வேரியாலும் அவ்வூர் அப்பெயர் பெற்றது. முதலில் புற்றேரி என வழங்கிய அவ்வூர் பிற்காலத்தில் புத்தேரி என மருவி வழங்குவதாயிற்று.

புத்தேரியும் அதை அடுத்துள்ள பரந்த வயலிடமும் பார்ப்போர் கருத்தைக் கவர்வனவாம். அவை கவிமணியின் கருத்தை மிகுதியும் கவர்ந்தன. இவர் பிற்காலத்தில் ஓய்வு எடுத்துக் கொண்ட போது இதன் காரணமாகவே புத்தேரிக் கிராமத்தைத் தமது உறைவிடமாகக் கொண்டனர்.

உருவும் திருவும் உயர் ஒழுக்கமும் நன்கமையப் பெற்ற உமையம்மையார் எவ்வாற்ருனும் நம் கவி மணிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணேவியாய் அமையக் கவிமணியவர்களது இல்லறம் நல்லறமாய்த் திகழ்ந் தது.

**ஆற்றிய பணிகள்**

நமது கவிமணியவர்கள் கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்து படிக்க இயலாத நிலேயில் ஆசிரியர் கல்வி கற்றுச் செக்கண்டரி கிரேட் ஆசிரியராஞர் என்று அறிந்தோம். இவ்வகையில் முதன் முதல் இவர் கோட் டாற்றிலுள்ள தொடக்கப் பள்ளியில் உபாத்தியாயராக அமைந்தனர். பிறகு நாகர்கோவில் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியிலும் அப்பால் திருவனந்தபுரம் பெண்கள் ஆசிரி யப் பயிற்சிப் பள்ளியிலும் ஆசிரியராகப் பணியாற்றி ஞர். அதன்பின் இவர் தமிழ் கற்றுத் தேர்ந்தவராய் விளங்கிய காலத்தில் திருவனந்தபுரம் அரசர் பெண்கள் உயர்நிலேப் பள்ளியில் தமிழாசிரியராகவும் திருவனந்த புரம் அரசர் பெண்கள் கல்லூரியில் தமிழ் விரிவுரையா ளராகவும் சேவை செய்தார். **1901** ல் தொடங்கிய இவ ரது ஆசிரியப் பணி **1931** வரையில் இங்ஙனம் பல பள்ளிகளில் நிகழ்வுற்று நிறைந்தது. இதன்பின் இவர் கல்விச் சாலேகளில் பணி புரிவதினின்றும் விடுபட்டு ஓய்வு எடுத்துக் கொண்ட நிலேயிலும் புத்தேரியில் தங்கியிருந்து தமிழ்ப்பணியில் ஈடுபடலாஞர்.

'கவிமணியவர்களது ஆசிரியப் பணி தூயதாகவும் மாணவருக்கு மிக்க நன்மை பயப்பதாகவும் இருந்தது. முப்பதாண்டுகள் அப்பணி புரிந்தார். பல்லாயிரம் மாண வர்கள் இவர்பால் கல்வி கற்று மேன்மை அடைந்தனர். ஆசிரிய அலுவலிடையே நூலியற்றல், கவியியற்றல் முதலிய பணிகளேயும் செய்துவந்தார். இக்காலத்தில் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளே, ஆராய்ச்சியாளர்

கே. என். சிவராஜபிள்ளை, இசைவாணர் இலக்குமணப் பிள்ளை, 'தமிழன்' பத்திரிகாசிரியர் பண்டித முத்து சாமிப் பிள்ளை முதலிய பெரியார்களோடு கூடி அளவ ளாவும் வாய்ப்பும் இவருக்குக் கிடைத்தது.

**ஆங்கில அறிவு**

நம் கவிமணியவர்கள் ஆங்கில அறிவும் நன்கு பெற் றிருந்தனர். வழக்கறிஞர் பி. சிதம்பரம் பிள்ளையவர் களால் வெளியிடப் பெற்ற முதலியார் ஓலைகள் என் னும் ஆராய்ச்சி நூலைப்பற்றி கேரளா ஸொஸைட்டி யில் 1930ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் தேதி ஆங்கி லத்தில் நம் கவிமணியவர்கள் திறம்படச் சொற் பொழி வாற்றினார். இவர்களால் ஆங்கிலத்தில் எழுதப் பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளும் அறிஞர்களால் பாராட்டப் பெறுவன.

**கவிமணியானது**

தேசிக விநாயகம் பிள்ளையவர்கட்குக் கவி இயற் றும் ஆற்றல் இயற்கையில் அமைந்திருந்தது. இள வயதிலேயே இவர் அவ்வாற்றலைப் பெற்றிருந்தார். 'இருமுறை படித்த மாத்திரத்தில் வெண்பாவைக் கற்றுவிட வேண்டும். ஒன்றைப் பார்த்த அளவிலேயே பார்த்தபடி எழுதிவிட வேண்டும். இத்தகைய சிறந்த அறிவு பெறாத மகனைப் பெற்றவள் பாவி' இது ஔவையார் கருத்து :

> வெண்பா இருகாலிற் கல்லானை வெள்ளோலை
> கண்பார்க்கக் கையால் எழுதானைப்—பெண்பாவி
> பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
> எற்றோமற் றெற்றோமற் றெற்று

ஔவையார் கூறிய அமுத வாக்கிற்கேற்பச் சிறந்த ஆற்றல் படைத்தவர் நம் கவிஞர் திலகம்.

இளவயதிலேயே கவிமணி சீரிய நுண்ணறிவும் ஆற்றலும் படைத்திருந்தார் என்பதற்கு ஓர் எடுத்துக்

காட்டு. வாணன் திட்டு மடத்தில் இவர் தமிழ்க் கல்வி கற்றிருந்த காலத்தில் அம்மடத்திற்கு ஒருமுறை சிவ ராத்திரிக்கு மறுநாள் சுசீந்திரம் பேரம்பலவாணர் மடத்திலிருந்து கட்டளைப் பிரசாதமாகப் பொங்கல், வடை, அப்பம் ஆகியவை வந்திருந்தன கட்டளைத் தம்பிரான் அவற்றை அங்குக் கல்வி கற்கும் சிறுவர் களுக்கு வழங்க வேண்டியிருந்தது.

அத்தம்பிரான் சிறுவர்களின் கல்வித் திறமையைச் சோதித்து அவற்றை அவர்களுக்கு வழங்க எண் ணினர். அதற்காக அவர் தேவாரத் திரட்டு என்னும் நூலை அவர்களிடம் கொடுத்து 'இதிலுள்ள பாடல் ஒன்றை நான் முதலில் ஒரு முறை படிப்பேன். பிறகு அதை உங்களில் ஒருவர் ஒரு முறை படிக்க வேண்டும். அப்பால் அதை நான் மற்றொரு முறை படித்ததும் நீங்கள் அதை மனப் பாடமாக ஒப்பிக்க வேண்டும். பிழையின்றி, யார் ஒப்பிக்கிறார்களோ அவர்களுக்கு ஒரு அப்பமோ ஒரு வடையோ கிடைக்கும்' என்றார்.

பின்னர் அவ்வாறே ஒப்பித்ததில் அங்குக் கல்வி கற்கும் சிறுவரில் ஒருவராயிருந்த நம் கவிமணிக்கே எல்லா அப்பங்களும் வடைகளும் கிடைத்தன. கவி மணி அவற்றை மற்றச் சிறுவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தனர்.

இவர் பள்ளிப் பிள்ளையாயிருந்த காலத்திலேயே பல கவிதைகள் புனையலாயினர். அப்போது தமது க்வியைத் தம் தமிழாசிரியர் எவ்விதம் மதிக்கின்றார் என்றறிய அவருக்கு ஆவல் ஏற்பட்டது. ஆகவே, ஒருநாள் அவர் கவியொன்றியற்றி அதை ஒரு காகிதத் தில் எழுதி ஒருவருக்கும் தெரியாமல் அக்காகிதத்தை தம் ஆசிரியரது நாற்காலியின் மேல் வைத்துவிட்டார். சிறிது நேரத்தில் தமிழாசிரியர் வகுப்பிற்கு வந்தார். அப்போது ஒரு மாணவன் அக்காகிதத்தைக் கண்

டெடுத்து அதிலிருந்த செய்யுளை உரக்க வாசித்தான். ஆசிரியர் அச்செய்யுளின் சொல்லமைதி பொருளமைதி களைப் பாராட்டினர். அதுகண்டு கவிமணி மகிழ்ந்தார்.

கவிமணி ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் ஆண்டான் கவிராயன், குயில், தே. வி., ஐயம் பிள்ளை, யதார்த்தவாதி முதலிய புனைபெயர்களுடன் செய்யுட் களையும் கட்டுரைகளையும் பத்திரிகைகளுக்கு எழுதி யனுப்பினர். அவை அவற்றில் வெளி வரலாயின. தாம் ஆசிரியர் பதவியினின்று விலகி ஓய்வு பெற்றுப் புத்தேரியில் அமைதியாக வாழ்ந்திருந்த காலத்தில் தான் புனை பெயரை நீக்கிச் சொந்தப் பெயரில் தமது பாடல்களையும் கட்டுரைகளையும் பிரசுரிக்கத் தொடங் கினுர்.

இவரது கவிகள் கற்ருர் மனத்தைத் தம்பால் ஈர்த்துத் தம் வயப்படுத்திக் கொண்டன. நீண்ட காலமாக இவர் சிறந்த தமிழ்க் கவிகளை இயற்றித் தமிழ்த் தொண்டாற்றி வருவதைத் தமிழ் உலகம் நன்கறிந்து கொண்டு 1940ஆம் ஆண்டு இவரைப் பெருமைப் படுத்த முன் வந்தது. அவ்வாண்டில் டிசம்பர் திங்கள் 24ஆம் தேதி பச்சையப்பன் கல்லூரி யில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் ஏழாவது ஆண்டு விழாக் கொண்டாட்டம் நிகழ்ந்தது. அப்போது நம் கவிஞரைப் பாராட்டிப் பட்டமளித்தார்கள் அந்த விழாவினைக் கொண்டாடிய பெரியோர்கள்.

**பாராட்டுக்கள்**

கவிமணிப் பட்டம் பெற்றது குறித்துப் பிள்ளை யவர்களுக்குப் பற்பலரிடமிருந்து பாராட்டுச் செய்திகள் வந்தன. 1943ல் செட்டிநாட்டுப் பெரியார்கள் அவரை ஆத்தங்குடி என்னுமிடத்திற்கு வரவழைத்துப் பொன் ஞடை போர்த்திப் போற்றினர். மேலும் அதுகாலை செட்டிநாட்டு வேந்தர் சர் அண்ணுமலைச் செட்டியார்

அவர்கள் கவிமணியவர்கட்குப் பணமுடிப்புத் தர விழைந்தனர். ஆனால் கவிமணியவர்களோ

வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்

என்னும் பொய்யா மொழியை உன்னினர் போலும். அக்கொடை வேண்டாம் என மறுத்துவிட்டனர்.

ஆயினும் செட்டிநாட்டரசர் பின்னும் விடாமல் ஆயிரம் ரூபாய் நன்கொடையை வெள்ளிக் கலன்களாகத் தக்க பெரியார் மூலம் கவிமணியின் வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். அவற்றை ஏற்றுக் கொண்ட கவிமணி அக்கலன்களின் மதிப்பைத் திருவனந்தபுரம் கல்லூரிக்கு அனுப்பி பி.எ. வகுப்பில் தமிழில் முதன்மையாகத் தேறும் மாணவர்க்கு ஆண்டுதோறும் அப்பொருளினின்று தமது அன்னையின் பெயரால் பரிசு வழங்குமாறு செய்து விட்டார்.

1944ஆம் ஆண்டு மதுரையிலிருந்து சில தமிழ்ப் பெரியார்கள் நம் கவிமணியை மதுரைக்கு வருவித்துப் பாராட்டுரை கூறினர். அப்பொழுது பாரதியார் நினைவுச் சின்னமாக எழுப்பப் பெற்ற கட்டடத்தைத் திறந்து வைக்கும்படியாய் மதுரை அன்பர்கள் கேட்டுக் கொண்டதை நிறைவேற்றித் திரும்புங்கால் திருநெல்வேலி அன்பர்கள் இவரை வருவித்துப் பாராட்டுரை கூறி மகிழ்ந்தார்கள். பின்னர்க் கவிமணியின் எழுபதாம் வயதில் நாகர்கோவில் நீதிபதி திரு ஐ. சத்தியநேசன் அவர்கள் தலைமையில் கவிமணிக்கு ஆண்டு விழா நிகழ்த்தப் பெற்றது. அப்போது தமிழன்பரின் பாராட்டுரைகள் நிறைந்த கவிமணி மலர் வெளிவந்தது. மேலும் அவ்வாண்டில் சுவாமி சுத்தானந்த பாரதியார் கவிமணியின் வரலாற்றை வரைந்தார்.

அப்பால் 1953ல் கல்கத்தாவில் பாரதி சங்கத்தார் அவருடைய பிறந்தநாள் விழாவைக் கொண்டாடினர்.

பிறகு 1954ல் திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தார் அவரை வருவித்து அவரது பாடல்களை அவரது வாயாலேயே பாடக் கேட்டுப் பாராட்டினர். 'கவிச் சொற்கேளீர்' என்ற வரிசையில் இந்தக் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இங்ஙனம் கவிமணியவர்கள் ஓய்வுற்றிருந்த காலம் முழுவதும் அவ்வப்போது பாராட்டுரைகள் இவருக்கு வந்து பொருந்திய வண்ணம் இருந்தன.

**கவிதை நூல்கள்**

கவிமணி இயற்றிய நூல்களைக் கவிதை நூல்கள், உரைநடை நூல்கள் என இருவகையாகப் பிரிக்கலாம்.

கவிதைகளைப் பற்றிக் கூறுமுன் கவிதையைப்பற்றி இவர் கொண்டிருந்த கருத்துக்கள் சிலவற்றைத் தெரிந்துகொள்ளுதல் நல்லது. ஏனெனில் கவிதைகள் பற்றிய இவருடைய கருத்துக்கள் இவரியற்றிய கவிதைகளிலும் செறிந்திருக்கும் அன்றோ?

'இன்பம் தருவதே கவிதை; சன்மார்க்கங் கற்பிப்பது ஒன்றே கவிதையின் நோக்கம் அல்ல; மருந்தைச் சர்க்கரையில் வைத்துக் குழந்தைக்குக் கொடுப்பது போலச் சன்மார்க்கங்களை இனிய வகையில் வெளியிடுவதே கவியாம்' என்று மறுமொழி கூறுகின்றார் கவிதை என்பது என்ன என்று கேட்பார்க்கு.

சில கவிதைகள் இலக்கண வரம்பிற்குப் பொருந்தியிருக்கும்; நல்ல கருத்தும் உடையனவாயிருக்கும்; ஆயினும் இன்பம் தாரா. அவை சிறந்த கவிதைகளாகா. இலக்கணவரம்பிற்கு உட்படாத புரட்சிக் கவிஞர் சிலர், சிறந்த கவிதைகளுக்கு மோனை எதுகை நயங்கள் தேவையில்லை, என்னும் கருத்துடையவர்களாக இருக்கின்றனர். இவர் தம் கருத்து கவிமணியின் கருத்துக்கு ஒவ்வாதது.

இனிக் கவிமணியின் கவிதைகளைப்பற்றிக் கூறுவோம்.

**குழந்தைச் செல்வம்**

கவிமணி குழந்தைகளிடம் மிக்க அன்பு கொண்டவர். அவர்களுக்கெனப் பல கவிதைகளை இயற்றியதோடு அவைகளை அவர்களுக்கு உரிமையாக்கியும் இருக்கின்றனர். 'மழலை மொழி', 'பஞ்சாமிர்தம்', 'கதைப் பாட்டு', 'இயற்கை இன்பம்' என்பன 'குழந்தைச் செல்வம்' என்ற நூலில் இடம் பெற்றுள்ளன.

**ஆசிய ஜோதி**

இது புத்தர் பிரான் வரலாறு. புத்தர் இந்தியாவில் தோன்றினாராயினும் ஆசியா முழுமையும் அவரது ஒளி பரவியமையால் இப்பெயருடன் இந்நூல் இயற்றப்பட்டது. எட்வின் ஆர்னல்டு என்னும் பெரியார் ஆங்கிலத்தில் இயற்றிய லைட் ஆப் ஏஷியா (Light of Asia) என்னும் நூலைத்தழுவி இது இயற்றப் பெற்றது.

புதுமையும் பழமையும் கலந்த நடையும் விழுமிய இசைச்சுவையும் பொருந்திய நூல் இது. இளமையில் தமது ஊரில் நல்ல மாடனுக்கு இடப்பட்ட பலியைக் கண்டு இரங்கிய இவரது உள்ளம் இவ்வரலாற்றைக் கவிதை மூலம் வடித்துக் கொடுக்கக் காரணமாயிற்று என்னலாம்.

இவ்வரலாற்றுள்,

அழுது புலம்பி அரற்றும் புவியே
மகிழ்ந்து நீயும் உன் மக்களும் வாழ
என்குடி என்கிளை என்வாழ்வு என்சுகம்
என் இளம் பருவம் என்சிங் காதனம்
யான் வாழ் அரண்மனை யாவும் வெறுத்தேன்

என வருவது சித்தார்த்தர் துறவை விளக்குவது. இதில் துறவு பூணுதல் தன் உயிரின் மேம்பாடு கருதியதன்று, உலக நன்மைக்காகவே செய்யப்படுவது என்னும் கருத்து வற்புறுத்தப்படுறது.

உருவில் சிறியதாயினும் வனப்பில் மிகுந்தது இங்

நூல். ஆடுகளைக் கொல்லலாகாது என்னும் கருத்தை இரக்கச் சுவை தோன்ற இந்நூலில் கூறப்பட்ட நயம் அறிந்தின்புறத்தக்கது.

**மருமக்கள் வழி மான்மியம்**

நாஞ்சில் நாட்டில் வழங்கி வந்த மருமக்கள் தாய முறையை வெறுத்துப் பாடிய நூல் இது. ஒருவனது சொத்து அவன் மக்களுக்குச் சொந்தமாகாமல் அவன் சகோதரி மக்களுக்குச் சொந்தமாகக் கொள்ளப்படும் முறை மருமக்கள் தாய முறையாம். நாஞ்சில் நாட்டு மக்கள் தமிழரேயாயினும் மலையாள நாட்டை யொட்டிய உறவால் இம்முறை அவர்கள் நாட்டில் பொருந்தியது போலும். இந்தப் பொருந்தா முறையைப் பொருத கவிமணி இதனைப் பழித்து நகையாடும் பான்மையில் இந்நூலை இயற்றியுள்ளார். இதில் அமைந்த கதை ஒரு பெண்ணின் சோகக் கதை.

நாஞ்சிலில் ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஒரு வேளாளப் பெண் தன் பதினாறும் வயதில் ஒருவருக்கு ஐந்தாவது மனைவியானாள். கணவன் வீட்டில் சக்களத்திகள், மாமியார், மைத்துனி முதலியோரால் மிகுந்த தொல்லையடைந்தாள். இவள் கணவனுக்கும் அவனது தங்கை கணவனுக்கும் பிணக்கம் நேர்ந்தது. இருவரும் நீதி மன்றத்தில் வழக்காடித் தம் சொத்துக்களை இழந்தனர்.

வழக்கு நடந்துகொண்டிருக்கையில் மேற் குறித்த பெண்ணின் கணவன் நோய்வாய்ப்பட்டான். பிறகு, அவனுக்கு இறக்கும் நிலையும் ஏற்படுகின்றது. அப்போது அவன் தன் மருமகனிடம் தன்மனைவி மக்களைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டு உயிர் விடுகின்றான். ஆனால் அவன் இறந்தபிறகு அவன் மனைவி மக்கள் வீட்டைவிட்டு வெளியில் துரத்தப்படுகிறார்கள்.

இந்நூலை, ஆசிரியர் 'படலம்' என்னும் தலைப்பில் பல பகுதிகளாகப் பிரித்துள்ளார். ஆங்காங்கே நகை,

அவலம் முதலிய சுவைகள் நன்கு பொருந்துமாறு அமைத்துள்ளார். படலங்களின் பெயரும் சுவைபட அமைந்துள்ளன. அப்பெயர்கள் 'குலமுறை கிளத்து படலம்', 'மாமி அரசியற் படலம்', 'கேலிப் படலம்' 'கடலாடு படலம்', 'பரிகலப் படலம்', 'நாகாஸ்திரப் படலம்', 'கருடாஸ்திரப் படலம்', 'வாழ்த்துப் படலம்,' 'கோடேறிக்குடி முடித்த படலம்', 'யாத்திரைப் படலம்' 'கும்பியெரிச்சல் படலம்' என்பன. ஏதோ இதிகாச புராண நூல்களை விரிவாக இயற்றுவதோர் பாங்கில் இப்பெயர்கள் அமைந்திருக்கும் விதம் காண்க.

**உமார்கய்யாம் பாடல்கள்**

உமார்கய்யாம் என்பவர் பாரசீக நாட்டவர். கி. பி. 11ஆம் நூற்றுண்டில் தோன்றியவர். இவரது இயற் பெயர் கியாறுடீன் அபுல்பாத உயிர் என்பது. இவர் இயற்றிய பாடல்கள் 'ரூபாயத்' எனப்படும். நான் கடிகளைக் கொண்டு செய்யப் பெற்ற செய்யுட்கள் பார சீகத்தில் இப்பெயரிட்டு அழைக்கப் பெறும்.

உமார்கய்யாம் பாடல்கள் உலகப் புகழ் பெற்றவை. அவற்றின் போக்கு பெரும்பாலும் உலகாயத மதத் தைப் பின் பற்றியது போன்றிருக்கும். உதாரணமாக பின்கண்ட இரண்டு அடிகளைக் காண்க:

> எல்லாம் இங்கோர் சூதாட்டம்
> இரவும் பகலும் மாருட்டம்

சன்மார்க்கத்தை வற்புறுத்தும் நிலைமையிலும் காண் பனயாவும் கடவுள் என்னும் கொள்கையிலும் பல செய்யுட்கள் புனையப் பெற்றுள்ளன. கவிமணி இப் புலவரின் கருத்துக்களைத் தமிழ் மரபோடு இயைத்துத் திறம்பட இந்நூலை இயற்றியுள்ளார். கவிமணியின் கனிந்த கவியாற்றலுக்கு இதோ இந்நூலிலிருந்து ஓரிரு உதாரணப் பகுதிகள்.

எங்கும் மனிதர் உனைத்தேடி
இரவும் பகலும் அலைகின்றார் ;
எங்கும் உள்ள துன்வடிவாம்
எனினும் குருடர் காண்பாரோ ?
எங்கும் எழுவ துன் குரலாம்
எனினும் செவிடர் கேட்பாரோ ?
எங்கும் என்றும் எவ்வுயிரும்
யாவு மான இறையவனே !
ஆவித் துணையே ! அருட் கடலே !
அருளால் அருள் செய் ஆண்டவனே !
பாவி எனக்குன் அருள்நோக்கம்
பாலித் திடுதல் ஆகாதோ ?

**மலரும் மாலையும்**

கவிமணியின் பாடல்களின் பெருந்திரட்டாகிய 'மல ரும் மாலையும்' என்ற தொகுதியுள் 'பக்தி மஞ்சரி' என்னும் பகுதியில் 'அழகம்மை ஆசிரிய விருத்தம்', 'செந்திற் குமரன்', 'முருகன் புகழ்மாலை' முதலியன அடங்கியுள்ளன. இலக்கியப் பகுதி திருவள்ளுவர், கம்பர், ஔவையார் முதலியோரைப் பாராட்டுகிறது. மற்றும் பாரதியார், சுந்தரம் பிள்ளை, முதலிய நவீன காலப் புலவர்களையும், போற்றுகின்றது. சரித்திரப் பகுதி மீராபாய் சரிதம், திருவாங்கூர் அரசி, உமை யம்மையின் சரிதம், இயேசு நாதர் சரிதம் முதலிய வற்றைக் கூறுகின்றது.

'வையமும் வாழ்வும்' என்ற தலைப்பில் அமைந்துள்ள 'பறவை வாழ்வு' மிக்க பெருமை வாய்ந்தது. மேலும் இதில் இராமகிருஷ்ண பரமஹம்ஸர், இராமதீர்த்தர் முதலியோர் போதனைகள், புல்லின் சுயசரிதை, மலையும் அணிலும் ஒத்துழைப்பு முதலியவைகளைப் பற்றிய பாடல்கள் அழகுபெற இடம் பெற்றுள்ளன.

'பிச்சைக்காரர் கும்மாளம்', 'ஈனசாதிப் பேச்சு' 'தொழிலாளியின் முறையீடு' 'வேலையில்லாத் திண்

டாட்டம்' முதலிய சமூகச் செய்திகள் இத்துறையில் மிக அழகிய முறையில் செய்யுளாக்கப் பெற்று 'சமூகம்' என்னும் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

திருவாங்கூர் மன்னர், கவிமணியின் குருவாகிய உமையொருபாகக் குருக்கள், இராஜா சர் அண்ணுமலைச் செட்டியார், இராஜாஜி, வ. உ சிதம்பரம் பிள்ளை, சுத்தானந்த பாரதியார், முதலியோர் போற்றப்படும் பகுதி 'வாழ்த்துப் பகுதி'.

இறந்தவர் குறித்து இரங்கிப்பாடும் கவிகள் சரமகவியாம். இது சங்க காலத்தில் கையறு நிலைச்செய்யுள் என்ற பெயரால் வழங்கி வந்தது. இவ்வகையில் காந்தியடிகள் முதலாயினோர் குறித்துப் பாடப்பெற்ற பல பாடல்கள் 'மலரும் மாலை'யில் பூத்துள்ளன.

கதம்பம் என்பது பலவகைப் பொருள்கள் ஒன்று சேர்ந்துள்ளதைக் குறிக்கும் சொல். இதற்கேற்பப் பல துறைப் பாடல்கள் இதில் அடங்கியுள்ளன. பல பள்ளிகளும் நிலையங்களும் இப்பகுதியில் வாழ்த்தப் பெற்றுள்ளன. மேலும் வீரபாண்டியன், கட்டபொம்மன், மானங்காத்த பாண்டியன் முதலானோரைப்பற்றிய கவிதைகளும் இதில் உள்ளன.

பெயருக் கேற்ப முத்து முத்தாகிய பல பாடல்கள் 'முத்துக் குவியல்' என்ற பகுதியில் உள்ளன. இப்பகுதியில் டி. கே. சி. பற்றிய பா மனத்தை அனலிடு மெழுகாக்குவது.

**கீர்த்தனங்கள்**

சிவபெருமான், உமையம்மை, முருகன், திருமால், கலைமகள் முதலிய கடவுளரைப் போற்றிப் பாடப் பெற்ற இசைப்பாடல்கள் 'கீர்த்தனங்கள்' எனும் பகுதியில் வருவன. பல்லவி, அநுபல்லவி, சரணம் என்னும் மூவகை அம்சங்களும் பொருந்தியவை சில ; பல்லவி, சரணம் என்னும் இரண்டு அம்சங்கள் மட்டும் பொருந்

தியவை சில ; கண்ணிகள் என்னும் அமைப்புப் பொருந்தியவை சில ; இப்படியாக இவ்விசைப்பாடல்கள் பல்வேறு வகைப்படுவன.

**சொற்பொழிவுகள்**

கவிமணியவர்களின் சொற்பொழிவுகள் சில நூல் வடிவாக உருப்பெற்றுள்ளன. இந்நூலுள் தலைமையுரை, வரவேற்புரை, திறப்புரை என மூன்று பிரிவுகள் காணப்படுகின்றன. 1924ல் சுசீந்திரம் தேவாரப் பாடசாலையின் எட்டாவது ஆண்டு விழாக் கொண்டாடப் பெற்றது. அதுகாலை நடந்த கூட்டத்திற்குக் கவிமணி தலைமை தாங்கினார். அப்போது அவர் ஆற்றிய சொற்பொழிவு இதில் இடம் பெற்றுள்ளது. தேவாரம், திருவாசகம் முதலியவற்றைப் பொருளறிந்து பண்ணோடு பாடவேண்டும் என்றும், கோவில்களில் உள்ள ஓதுவார்கள் பண்ணை மட்டும் அறிந்தவராய்ப் பொருளை அறியாதவராய் உள்ளனர் என்றும் அது தவறு என்றும் அதிபர்கள் பொருளை அறிந்து கொள்ள வேண்டும் என்றும் இத்தலைமையுரையில் சுட்டுகின்றார்.

நாகர்கோவிலில் 1948-ல் எழுத்தாளர்களின் மூன்றாவது மகாநாடு நடைபெற்றது. அப்போது கவிமணி வரவேற்பாளராக இருந்து வரவேற்புரை நிகழ்த்தினர். அவ்வுரை இப்பகுதியில் அடங்கியுள்ளது. இதில் திருவாங்கூரைப் பற்றிக் கவிமணியின் கூர்த்த மதி வன்மை படைத்த ஆராய்ச்சி மதிக்கத் தக்கது. இவர் ஆய்ந்துரைப்பதாவது: கல்வெட்டுக்களில் திருவிதாங்கோடு என்பது மூதாங்கோடு எனப்படுகின்றது. திருவிதாங்கோட்டுக் கோயிலில் உள்ள வடமொழிக் கல்வெட்டொன்றில் 'வடக்ரோட தேவ' என்னும் தொடர் வருகின்றது. அத்தொடர் ஆலமரப் பொந்திலுள்ள இறைவன் எனப் பொருள்படும். இதனால்

மூதாலங்கோடு என்பது மூதாங்கோடு என மருவியிருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது. நாளடைவில் திரு மூதாலங்கோடு திருமூதாங்கோடு ஆகிப் பிறகு திருவி தாங்கோடு ஆகி, அப்பால் அது ஆங்கிலத்தில் 'ட்ராவெங்கூர்' ஆகிப் பின் தமிழில் திருவாங்கூர் ஆகியிருக்க வேண்டும்.

கன்னியாகுமரியில் 1950-ல் நடைபெற்றது தென்குமரி எல்லை மாநாடு. நம் கவிமணியவர்களே அம்மாநாட்டைத் திறந்துவைத்துத் திறப்புரை நிகழ்த்தினர். அப்பேச்சில் நாஞ்சில் நாடு தமிழ்நாட்டின் தென்பகுதி எல்லை நாடே என்பது பல சான்றுகளால் நிரூபிக்கப்பெற்றது.

**கட்டுரை மணிகள்**

கவிமணியவர்கள் திருவள்ளுவர், மாணிக்கவாசகர், தமிழிசை, வ. உ. சி., காந்தியண்ணலுக்குக் கைம்மாறு முதலிய பொருள்களைப்பற்றிக் கட்டுரைகள் வரைந் துள்ளார். பல செய்திகளைச் செவ்வனே ஆய்ந்து கூறப் பட்டிருக்கும் நயம் பாராட்டற்பாலது. உதாரணமாகத் திருவள்ளுவரைப் பற்றிய கட்டுரையில்

> தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை

என்பதற்குத் தற்கால உலக நிலைமைக் கேற்பக் கவி மணி உரை கொள்ளுகின்றார். எங்ஙனமெனில் இப் பாடலினின்றும் தலைசிறந்த கற்புடைய பெண்டிர் தம் சொல்லால் மழை பெய்விக்கும் ஆற்றல் உடையவர் என்னும் கருத்துத் தோன்றுவதாகப் பண்டையோர் கொண்டனர். நவீன உரையாசிரியர் ஒருவர், சிறந்த கற்புவாய்ந்த மங்கை பெய் யென்றவுடனே பெய்யும் மழையைப் போன்றவள் எனக் கூறினர். கற்புடைய பெண்ணுக்கு மழையைப் பெய்விக்கும் ஆற்றல் உண் டாகும் என்பது உயர்வு நவிற்சி அணியே எனக் கவி மணி கூறுகின்றார்.

**கல்வெட்டாராய்ச்சி**

கவிமணியவர்கள் கல்வெட்டுக்களை ஆராய்ந்து சாசன ஆராய்ச்சி, புலைப்பேடி சாசனங்களும் விநோத வியாக்கியானங்களும், திரிபுவன தேவி சாசனம், உலக முழுதுடையாள் சாசனம், முதலிய பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

சாசனங்களை நன்கு ஆராயாத காரணத்தால் பிழைகள் பல நேருவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உதாரணமாகச் சில இங்குக் குறிக்கப்பட்டுள்ளன:

'ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி' என்பது கல்வெட்டில் உள்ள ஒரு தொடர். இதில் ஐம்படைப் பருவம் என்பதற்கு மன்மதன் காதல் எழுப்பும் பருவம் எனப் பதிப்பாசிரியர் பொருள் கொண்டுள்ளார். இது தவறு. திருமாலின் ஐம்படைகளை நூலில் கோத்துச் சிறு குழந்தைகட்கு அணிவது பண்டையோர் வழக்கம். இது ஐம்படைத்தாலி எனப்படும். ஆகவே ஐம்படைத் தாலி யணியும் குழவிப்பருவம் என்பது இத்தொடருக்குப் பொருள். பிறிதோரிடத்தில் 'பறவைக்கரசு' என்பது 'பறவைக்காசு' ஆகியிருக்கிறது. இன்னும் ஓரிடத்தில் 'திருவாடிச் சோதி' என்பது 'திருவடிச் சோதி'யாகிவிட்டது. ஆடி மாதத்துச் சோதிநாள் திருவாடிச் சோதி என்பதறியாமல் இங்ஙனம் மாற்றப்பட்டுள்ளது.

**இறுவாய்**

நிறைந்த கல்வியும் தலைசிறந்த ஒழுக்கமும் கொண்ட கவிமணியவர்கள் இந்நிலவுலகில் 78 ஆண்டுகள் வாழ்ந்தனர். அரிய தமிழ்ப் பணி புரிந்தனர். அவர் இறப்பதற்கு இரண்டாண்டுகட்கு முன்பு அவரது உடல் நிலை சரிந்தது. எக்ஸிமா, ஆஸ்துமா ஆகிய நோய்கள் அவரைப் பற்றின. புவியரசராயினும் கவியரசராயினும் இவ்வுலகில் எவர்க்கும் சென்றுரைச் சென்றடையும் செயல்

அன்றி வேறு இறுதியான உறுதியான செயல் யாதுளது? 1954ஆம் செப்டம்பர்த் திங்கள் 26ஆம் நாள் கவிமணியவர்கள் பூத உடல் நீத்துப் புகழுடல் எய்தினர்.

பொதுவாகத் தமிழ் உலகமும் சிறப்பாக நாஞ்சில் நாடும் அவர் பிரிவால் எய்தற்கரிய துயர் எய்தின. திருவாங்கூர் இராச்சிய முதலமைச்சர் இரங்கலுரை கூறினர். வானொலி வாயிலாக நாடெங்கும் இவர் மறைவுச் செய்தி பரப்பப் பெற்றது. சென்னையில் கூடிய இரங்கல் கூட்டத்தில் ராஜாஜி அவர்களையுள்ளிட்ட பல பெரியோர்கள் கவிமணியவர்களின் சிறந்த பண்புகளைப் பாராட்டி அஞ்சலி செய்தனர்.

**பண்பு மேம்பாடு**

பெண்கள் கல்லூரியில் ஆண்களை ஆசிரியர்களாக அமர்த்தலாகாது என்பது பொது விதி. ஆனல் பெண் ஆசிரியர் கிடைக்காத விடத்து ஆண் ஆசிரியரை நியமிப்பர். கவிமணி பெண்கள் கல்லூரியில் பணி புரிய நேர்ந்தபோது கல்லூரித் தலைவர் இவ்விதியைக் கூறி 'ஒரு வேளை பிறகு தாங்கள் ஆண்கள் கல்லூரிக்குப் போக வேண்டியிருக்கும்' என்ருர். கவிமணி உடனே 'ஒரு வேளை என்பதென்ன? இப்போதே போகச் செய்யுங்கள்' என்ருர். இதினின்று இவரது உயரிய பண்பும் விளங்கும்.

கவிமணி அடக்கம் மிக்கவர். செட்டி நாட்டு வணிகர் இவரது தமிழ்ப்பணி, கல்விப் பெருமை முதலியவற்றைப் பாராட்டுவாராய் இவரை ஆத்தங்குடிக்கு வருவித்துப் பொன்னுடை போர்த்திப் பெருமைப்படுத்திய போது கவிமணியவர்கள் 'யானைக்கு அளிக்க வேண்டியதொரு பொன்னுடையை இந்த ஆட்டுக்குட்டிக்கு அணிவித்தார்கள். இதனை இந்த ஆட்டுக்குட்டி தாங்குமா?' என்று தம்மைக் குறித்து அடக்கமாகக் கூறினர்.

கவிமணியவர்கள் திருவனந்த புரத்தில் வசித்தகாலே அண்டை வீட்டு நண்பர் ஒருவர் ஒருநாள் விருந்து நடத்த வேண்டி வந்தது. அவரது வீட்டில் அதற்கு வசதி போதாமல் இருந்தபடியால் அவர் கவிமணியின் வீட்டில் அந்த விருந்தை நடத்தினர்.

அப்போது தந்தியொன்று வந்தது கவிமணிக்கு. அந்தத் தந்தியில் என்ன துயரச் செய்தி இருக்குமோ! அதைப் படித்தறிந்தால் ஒரு வேளே விருந்து நடப்பதை நிறுத்த வேண்டி வருமோ என்னவோ என்னும் கருத்தால் விருந்து முடியும் வரையில் அதைப் பிரித்துப் பார்க்காமல் இருந்தார்.

அப்பால் அதைப் படித்தபோது இவர் கருதியது போலவே அதில் வருத்தச் செய்தியே இருந்தது. இவரது மருமகள் நாகர் கோவிலில் இறந்துவிட்ட செய்தியே அது. பிறர்க்குதவி செய்யும் தகைமையில் இவர் எத்துணே வைரம்பாய்ந்த உளம்படைத்தவர் என்று இதிலிருந்து உறுதிப்படும்.

இங்ஙனம் சீரிய பண்புகளேயுடைய கவிமணியை நாம் இழந்துவிட்டோமாயினும் இவரது அருமைக் கவிதைகள்,

உள்ளத் துள்ளது கவிதை
இன்பம் உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் உண்மை
தெரிந்துரைப்பது கவிதை

என்று கவிதையின் இலக்கணத்தைக் கவிதையில் காட்டிய இவரது செஞ்சொற் கவிதைகள் நமது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் என்றும் உதவுவனவாயிருக்கும். கவிமணியின் புகழ் வாழ்க!



# கலை மணி

## சூரியநாராயண சாஸ்திரியார்

### பிறப்பும் இளமைப் பருவமும்

தமிழ்ப் பெரியார்கள் சுடர் விட்டிலங்கும் வானில் நன்கு விளக்கமாக ஒளி வீசித்திகழும் சுடர்களுள் ஒன்ருகக் கருதத் தக்கவர் திரு வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள். இவரது தமிழ்ப் பற்று அளவு கடந்தது. அப்பற்றின் காரணமாக இவர் தம் வாழ் நாள் முழுமையும் தமிழ்த் தொண்டாற்றி வந்தனர்.

சாஸ்திரியார் அந்தணர். இவரது முன்னேர்கள் அந்தணர்க் கோதிய அறு தொழில்களாகிய ஓதல், ஓது வித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ப வற்றைச் செவ்வனே செய்து வந்த உத்தமர். தம் மரபிற்கேற்ற வடமொழிப் பயிற்சித் திறமுடையவர். இவருக்கு ஏறத்தாழ ஐந்து தலைமுறைக்கு முற்பட்ட இவர் முன்னேராகிய யக்ஞபுரீசுர தீக்ஷிதர் அல்லது அண்ணு தீக்ஷிதர் என்பார் வேள்வி யியற்றித் தீக்ஷிதர் என்னும் பட்டம் பெற்றவர்.

மேலும் இவரது முன்னேர்கள் சிவபக்தியில் சிறந்தவர்கள். இவரது தந்தை கோவிந்த சிவனுர் சிவானுபூதி உடையவர். 'பக்குவ நிலையடைந்த காலை குருவானவர் தாமே சீடனைத் தேடி வருவார்' என்பது கொள்கை. இக் கொள்கைக்கிணங்க மணிய சிவனுர் என்னும் சிவநேசச் செல்வர் கோவிந்த சிவனுரைத் தேடிவந்து தமது சீடராக்கிக் கொண்டனர். மணிய சிவனுரது சீடர் பலருள்ளும் கோவிந்த சிவனுர் தலைமை பெற்றவராய் விளங்கினுர்.

இத்தகைய உயர்குடியில் 1870ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 6ஆம் நாள் நமது சூரியநாராயண சாஸ்திரியார் தோன்றினுர். இவர் பிறக்கும் பேறுபெற்ற இடம் பண்டைப் பாண்டியர்களும் தமிழ்ப் புலவர்களும் சங்கம் வீற்றிருந்து தமிழாராய்ந்த மதுரை மாநகரை யடுத்த விளாச்சேரி என்னும் சிற்றூர். இவருக்குச் சுந்தரேச சாஸ்திரியார் என்ருெரு தமையனுரும் ஆனந்தவல்லி அம்மையார் என்னும் ஒரு தமக்கையாரும் உண்டு.

திரு சூரியநாராயண சாஸ்திரியார் இளமைப் பருவத்திலேயே கூர்த்த அறிவும் கல்வியில் தளராத ஊக்கமும் உடையவராயிருந்தார். ஊன்றி நோக்கும் பண்பும் கற்றவற்றை மறவாது மனத்திலிருத்திக் கொள்ளும் வன்மையும் இவருக்கு இயற்கையிலேயே அமைந்திருந்தன எனலாம்.

கல்வி கற்கும் பருவம் வந்தபோது இவர் உள்ளூரிலிருந்த தமிழ்ப் பள்ளியில் சேர்க்கப் பெற்ருர். அங்கே இவர் தமிழும் கணக்கும் கற்ருர். இவரது தந்தையார் அப்போதே அவருக்கு வடமொழியையும் வரன் முறையாகக் கற்பிக்கலானுர். தமது பத்தாம் வயதுவரை இங்ஙனம் உள்ளூரில் கல்வி கற்ற இவர் பின்னர்ப் பசுமலையில் உள்ள பள்ளிக்கூடத்தில் உயர்தரக் கல்வி கற்ருர். அப்பள்ளிக்கூடத்திற்கும் விளாச்சேரியிலுள்ள இவரது வீட்டிற்கும் ஏறக்குறைய ஒரு மைல் தொலைவு இருக்கும். பெரும்பாலும் நடந்து சென்று அக்கல்விச் சாலையில் கல்வி கற்று வருவார்.

இத்துணைக் காலம் வரையில் சாஸ்திரியாருக்குத் தமிழினும் வடமொழியிலேயே பற்று மிகுந்திருந்தது. இப்போது இவரது தமிழாசிரியர் இவர் தமிழை விரும்பிக் கற்கவேண்டும் என்று வற்புறுத்திக்கூற இவரும் அவ்வாறே கற்கத் தொடங்கித் தமிழில் பேரார்வமுடையவராயினர்.

சாஸ்திரியார் அறிவுப் பயிற்சி பெற்றதனோடு மட்டும் நிற்கவில்லை ; உடற் பயிற்சியிலும் ஈடுபட்டார். மதுரை யானை மாவுத்தர் பாலகிருஷ்ண நாயுடு என்பவரிடம் சிலம்பம், மல்யுத்தம் முதலியவைகளைக் கற்றார். பள்ளிக் கூட விளையாட்டுப் போட்டிகளில் முதன்மையாக வெற்றி பெற்றுப் பரிசுகளையும் பெற்று வந்தார்.

**தமிழ்க் கல்விப் பயிற்சியில் திளைத்தல்**

முதலில் வடமொழியில் ஆர்வம் கொண்டிருந்த சாஸ்திரியார் பின்னர்த் தமிழில் பேரார்வமுடையவ ரானார் என்பது முன்கூறப்பட்டது. இவரது தமிழார் வத்தைக் கண்ட தந்தையார் இவரை மதுரைக் கலாசாலையில் ஆசிரியராய் இருந்த சபாபதி முதலியார் அவர்களிடம் தமிழ் கற்றுக்கொள்ள விடுத்தார். அக் காலத்தில் சபாபதி முதலியார் ஆசிரியர் பதவியினின் றும் ஓய்வு பெற்றவராய்த் தம் வீட்டிலேயே தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்பித்து வந்தனர். கூரிய அறிவினையுடையவராய் ஆசான் சொல்லுவனவற்றைக் கருத்துடன் விரும்பிக் கேட்டு மனத்திலிருத்தும் பான்மை பெற்றிருந்த சாஸ்திரியாரைக் கண்டு சபாபதி முதலியார் அவரிடத்துப் பேரன்பு பூண்டு இனிது கல்வி கற்பித்து வரலாயினர். சாஸ்திரியாரும் தமிழ்க் கலைப் பயிற்சியில் மனம் ஒன்றித் திளைத்து வந்தார்.

**கல்விச் சிறப்பு**

சாஸ்திரியார் தமது பதினைந்தாம் வயதிலிருந்து தமது தந்தையாரிடம் வடமொழியும் சபாபதி முதலியா ரிடம் தென்மொழியும் கலாசாலையில் ஆங்கிலமும் பிற பாடங்களும் பயின்றனர்.

நல்லாசிரியரிடத்து முறையாகப் பாடங் கேட்ட தன் மையாலும் தம் இயற்கை நுண்ணறிவாலும் சாஸ்திரி யார் தமது இருபதாம் வயது நிறையு முன்னரே தமிழில்

ஆழ்ந்த அறிவைப் பெற்றனர். தமது பத்தொன்பதாம் வயதில் 'மாலா பஞ்சகம்' என்னும் நூலை எழுதினர். மேலும் அந்த இளவயதிலேயே இவர் இவரது ஆசிரியர் சபாபதி முதலியாருடன் சேர்ந்து, யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் இயற்றிய 'சாதன சதுஷ்டய தர்ப்பணம்' என்னும் நூலுக்கு மறுப்பாக 'சாதன சதுஷ்டய தர்ப்பண' வச்சிர சூசிகா' என்னு மொரு நூலை வெளியிட்டனர்.

**கல்லூரிப் படிப்பு**

சாஸ்திரியார் 1890ஆம் ஆண்டு மதுரைக் கல்லூரியில் எப். எ. தேர்வில் முதன்மையாகத் தேர்ந்தார். அதனுல் இவருக்குப் பாஸ்கர சேதுபதி அவர்களின் உதவிச் சம் பளம் கிடைத்தது.

இவர் இக்கல்லூரியில் படிக்குங்கால் சோமசுந்தர முதலியார் என்னும் செல்வரின் மகனுகிய விசுவநாத முதலியாரின் நட்புக் கிடைத்தது. அதன் பயனுகச் சோமசுந்தரரது உதவியால் இவ்விரு மாணவரும் சென்னைக்குச் சென்று அங்குள்ள கிறிஸ்தவக் கல்லூரி யில் பி. எ. வகுப்பில் சேரும் வசதி உண்டாயிற்று. இரு வரும் சென்னையில் செங்கல்வராயர் என்னும் நல்லா ரொருவரின் இல்லத்தில் குடியிருந்து படிக்கலாயினர். அக்காலை சாஸ்திரியார் தம் கல்வியில் கண்ணுங் கருத்துமாய் இருந்ததைக் கண்ட செங்கல்வராய முதலி யார் இவருக்குத் தம்மாலான உதவிகளைச் செய்து படிப் பில் இவரை ஊக்கி வந்தனர்.

அக்காலத்தில் டாக்டர் மில்லர் கிறிஸ்தவக் கல்லூரித் தலைவராக இருந்தார். அவர் அவ்வாறு தலைமைப் பதவி வகித்ததோடு ஆசிரியர் பொறுப்பும் ஏற்றிருந்தார். சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராகவும் சென்னை சட்டசபை உறுப்பினராகவும் இருந்தார். அவர் மாணவரிடத்து மிக்க அன்புடையவர். மாணவரோடு

சரி சமானமாகப் பழகி அவர்களுக்குப் பொறுப்புணர்ச்சியையும் நல்லொழுக்கத்தையும் ஊட்டி வந்தார்.

**மில்லருடன் நட்பு**

சாஸ்திரியாரின் கூர்த்த அறிவு ஆசிரியர் மில்லர் அவர்களது கவனத்தை ஈர்த்தது. அத்துடன் கல்லூரிப் படிப்பின் தொடக்கத்திலே நிகழ்ந்த ஒரு சம்பவம் இருவரையும் நட்பினராக்கியது.

மில்லர் ஒரு நாள் வகுப்பில் நுழைந்து பாடம் தொடங்கு முன் மாணவர் யாவரும் வந்துள்ளனரா என்று மாணவர் பட்டியலை வாசித்து வருகைக் கணக்கு எடுத்தார். அப்போது சூரியநாராயணன் என்னும் பெயர் வரவே அப்பெயரை உச்சரிக்க இயலாமல் சிறிது துன்பப்பட்டார். பிறகு சாஸ்திரியாரைப் பார்த்து 'உன் பெயர் உச்சரிப்பதற்குக் கடினமாக இருக்கின்றது. அதை மாற்றி வைத்துக் கொள்ளக் கூடாதா?' என்றார். சாஸ்திரியாரும் 'சரி' என்று ஒப்புக்கொண்டு சென்றார்.

மறுநாள் வகுப்பில் வந்து பெயரைப் படிக்கையில் அது முன்னையிலும் நீண்டு சூரியநாராயண சாஸ்திரியார் என்று இருந்தது. மில்லர் 'ஏன் இப்படிச் செய்தாய்?' என்றார். 'நீங்கள் பெயரை மாற்றிக்கொள் என்றுதானே சொன்னீர்கள், குறுக்கிக் கொள்ளச் சொல்லவில்லையே' என்றார் சாஸ்திரியார். இம்மறுமொழி மில்லருக்குச் சினத்தையோ ஆத்திரத்தையோ உண்டுபண்ணவில்லை. அவர் தமது மாணவரின் துணிவை மெச்சி அவரோடு நட்புக் கொண்டார்.

மில்லர் துரையவர்கள் தம் நட்பின் மிகுதியாலும் சாஸ்திரியாரின் கூர்த்த மதியைச் சோதிக்கவேண்டும் என்னும் கருத்தாலும் அடிக்கடி சாஸ்திரியாரிடம் வேடிக்கையாகக் கேள்வி கேட்பதுண்டு. அவ்வகையில் ஒரு நாள் அவர் 'நான் இன்று உன்னோடு இலக்கியச்

சர்ச்சை செய்யப் போகிறேன். ஆல்பிரெட் டென்னிசனுடைய 'மார்ட்டி டி ஆர்தரில்' படகு ஒன்று தன் துடுப்புக்களை ஆட்டிக்கொண்டு நீரில் மிதந்து செல்லுவது, அன்னம் தன் சிறகுகளை அசைத்துக்கொண்டு நீரில் நீந்திச் செல்வதுபோல் இருக்கிறது என்று ஒரு செய்தி வருகிறதல்லவா?* நீ எப்போதும் தமிழ் தமிழ் என்று அதன் புகழ் பாடிக் கொண்டிருக்கிறாயே, அத் தமிழில் இதுபோன்ற வர்ணனை இருக்கிறதா?' என்றார். உடனே சாஸ்திரியார் 'இருக்கிறது. டென்னிசனுக்கு எட்டு அல்லது ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பட்ட ஒரு தமிழ் நூலில் ஏறக்குறைய இதே செய்தி உள்ளது. அதாவது

விடுநதி கடிதென்றான் மெய்யுயிர் அனையானும்
முடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்
கடுதினின் மடவன்னக கதியது செலநின்றார்
இடருற மறையோரும் எரியுறு மெழுகானார்

என்னும் கம்பராமாயணச் செய்யுளில் இச்செய்தி இருக்கின்றது. இதில் படகு நதியில் செல்வது, அன்னம் நீந்திச் செல்வது போன்றிருந்தது எனக் கூறப்பட்டுள்ளது' என்றார். இதைக் கேட்ட மில்லர் மூக்கின்மேல் விரலை வைத்தனர்.

சூரியநாராயண சாஸ்திரியார் நன்கு படித்து பி. எ. வகுப்பில் முதல்வராகத் தேர்ந்தார். அக்காலை அவ்வகுப்பிற்குரிய தமிழ்ப் பாடத்திலும் அவர் முதன்மையாகத் தேர்ந்தனராதலால் அப்படித் தேரும் மாணவர்க்கு வழங்குவது என இருந்த 'பாஸ்கர சேதுபதி பொற்பதக்கம்' இவருக்கு வழங்கப் பெற்றது.

**செய்த பணிகள்**

சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரித் தலைவர் மில்லர்

---

* So said he, and the barge with oar and sail
Moved from the brink, like some full breasted swan

அவர்களுக்குத் தமது கல்லூரியில் கல்வி கற்று மாகாணத்திலேயே முதன்மையாகத் தேர்ந்த மாண வரைத் தம் கல்லூரியில் ஆசிரியராக நியமிக்க வேண் டும் என்று ஓர் ஆர்வம் இருந்தது. ஆகவே, அவர் சாஸ்திரியாரைத் தமது கல்லூரியில் தத்துவப் போத காசிரியராக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சாஸ்திரியாரோ தமக்குத் தமிழின் மீது இருந்த ஆராக்காதலால் தமிழ் கற்பிக்கும் பதவி தருமாறு வேண்டினர். தமிழ் ஆசிரியர் பதவிக்கு உரிய ஊதியம் தத்துவ ஆசிரியர் பதவிக்குரிய ஊதியத்தி லும் குறைவு என்பதை அறிந்தும் அவர் இவ்வாறு கூறியதுபற்றி மில்லர் பெரிதும் வியந்தார். பணத்தைப் பொருட்படுத்தாது பணியையே பொருட்படுத்தும் இவரைப் பாராட்டினர். இவர் விருப்பப்படியே தமிழ் ஆசிரியர் பதவியை இவருக்கு அளித்துத் தத்துவப் போதகாசிரியருக்குத் தரப்படும் ஊதியத்தையும் கொடுத்தார்.

**கற்பிக்கும் திறன்**

சாஸ்திரியார் தமிழாசிரியராய் அமர்ந்த காலம் பெரும் பாலும் கல்லூரி மாணவர்கள் தமிழைப் புறக்கணித்த காலம். ஆங்கிலம் கற்பதும் அதில் பிழையறப் பேசு வதுமே பிறவியின் பெரும் பயன் எனக் கருதி மயங் கிய காலம். ஆதலால் தமிழ் மொழியில் மட்டுமே திறமையுடைய அக்காலத் தமிழாசிரியர் அக்கால மாணவரைத் தம் வயப்படுத்தித் தமிழை விருப்புடன் போதிக்க இயலாது போயிற்று.

தண்டமிழ்ப் புலவர் சாஸ்திரியாருக்கோ மாணவர் தகுதியறிந்து நோக்கமறிந்து கற்பிக்கும் திறன் இயற் கையிலேயே அமைந்திருந்தது. அதோடு பன்மொழிப் புலமையும் பன்னூற் புலமையும் அவருக்குத் துணை புரிந்தன. மேலும் பழமையைப் புதுமையோடும் புது

மையைப் பழமையோடும் பொருத்திப் பாடஞ் சொல்லும் திறனும் அவருக்கு ஏற்பட்டிருந்தமையால், மாணவர் விரும்பி மனங்கொள்ளும் முறையில் இவர் கற்பிக்கலானார்.

ஒரு சமயம் இவர் சிந்தாமணி கோவிந்தையாரிலம்பகம் பாடஞ் சொல்ல நேரிட்டது. அப்போது,

நாம வென்றிவேல் நகைகொள் மார்பனைக்
காம னேஎனக் கண்ணி மங்கையர்
தாம ரைக்கணாற் பருக

என்னும் செய்யுளுக்குப் பொருள் கூறும் இடம். இதன் பொருள் வெற்றி வேலை யுடையவனும் விளங்கிய மார்பையுடையவனுமான சீவகனை மங்கையர் மன்மதனே என்று எண்ணித் தாமரை போலும் தம் கண்களால் அவன் அழகைப் பருகினர் என்பதாம். தாமரைக் கண்ணால் என்னும் தொடருக்கு மேற்கண்ட பொருளோடு தாம் + அரை + கணால் + பருக என்று பிரித்துப் பெண்களுக்குண்டாகிய இயற்கை நாணத்தால் தாம் அரைக் கண்ணால் பார்த்துப் பருகினராக என்றும் தா + மரை + கணால் + பருக என்று பிரித்து தாவும் மானினது கண்களைப் போன்ற கண்ணால் பருகினராக என்றும் பொருள் கூறினர்.

**எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்**

மாணவரிற் சிலர் ஆசிரியர் திறமையைச் சோதிக்கவோ குறும்பாகவோ வினாக்கள் விடுப்பது உண்டு. உண்மையில் ஐயந்தெளியக் கேட்கும் ஆர்வ வினாக்களுக்குச் சாஸ்திரியார் மனமுவந்து தக்க விடை கூறி மாணவர் ஐயங்களைப் போக்கி அனுப்புவார். குறும்புக்காகக் கேட்பதாயின் சும்மா விடமாட்டார். தாம் வகுப்பில் பாடஞ்சொல்லுங்கால் பாடத்தைக் கவனியாமல் வேறோர் அலுவல் பார்ப்பவரையும் லகுவில் விடமாட்டார்.

ஒரு முறை சாஸ்திரியார் வகுப்பில் பாடஞ் சொல்லிக் கொண்டு வருகையில் குறும்பு மாணவன் ஒருவன் வகுப்பைக் கவனியாமல் வேறிடத்தில் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தான். அது கண்ட ஆசிரியர் அவனை நோக்கி 'ஐயனே, நீ இங்கிருந்து எழுவாய்; நீ இங்கிருப்பதால் உனக்கோ பிறர்க்கோ பயனில்லை; இனி உன்னால் இங்கே செயப்படுபொருள் இல்லை. ஆதலின் செல்க!' எனக் கூறி அவனை வகுப்பை விட்டு வெளியேற்றினர். ஆசிரியரது இந்தச் சாதுரிய மொழி கேட்ட மாணவர் மிகவும் மகிழ்ந்தனர். குறும்பு செய்த மாணவனும் அடங்கினன்.

**சொற்பொழிவாற்றல்**

சாஸ்திரியாரது சொற்பொழிவாற்றுந் திறன் தமிழறிஞர் பல்லோர் கவனத்தை ஈர்த்தது. அதனால் பலவிடங்களுக்கும் சொற்பொழிவாற்ற வருமாறு அவருக்கு அழைப்புக்கள் வரலாயின. ஒருகால் இவர் சென்னைத் தமிழ்ப் பாஷாபிவிருத்தி சபையில் 'தற்காப்பு நியமம்' என்பது பற்றிப் பேசினர். அதுகாலைச் சென்னை அரசினர் கல்லூரி வடமொழிப் பேராசியர் தி. மீ. சேஷகிரி சாஸ்திரியாரவர்கள் தலைமை தாங்கினர்கள். இச் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்த வித்வான் சண்முகம் பிள்ளையவர்கள் சாஸ்திரியாரை வியந்து

பொலம்பூத்த தற்காப்பு நியமமெனும்
விடயம் அரும் புலவோர் நாட
நலம்பூத்த சுவை செறிசெந் தமிழ்வசன
நடையில் நனி நலக்கத் தந்தான்
குலம்பூத்த பிறப் பொழுக்கம் குன்றாத
நான்மறையோர் குலத்துள் தோன்றி
வலம் பூத்த வேற்கு கற்ருள்
சூரியநா ராயண நாவலவ ரேறே!

என்று பாடினர்.

**கிறிஸ்தவக் கல்லூரிச் சஞ்சிகை**

சாஸ்திரியார் கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராயிருந்த காலை அக் கல்லூரி வாயிலாகக் கிறிஸ்தவக் கல்லூரிச் சஞ்சிகை எனவொரு ஆங்கிலப் பத்திரிகை வெளிவந்தது. அதன் ஆசிரியர் அக் கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியர் எப். டபிள்யூ கெல்லெட் என்பார். அச் சஞ்சிகையில் ஆங்கிலக் கட்டுரைகள் மட்டுமே வெளிவரும்; தமிழ்க் கட்டுரைகளோ அதனை எட்டியும் பார்க்கலாகாது என்ற நிலை ஏற்பட்டிருந்தது.

இதைக் கண்ட சாஸ்திரியார் மனம் குலைந்தார். தமிழ்க் கட்டுரைகளும் அதில் வெளியிடப் பெறவேண்டும் என்று வாதாடினார். அதன் பயனாகச் சாஸ்திரியார் இயற்றிய தனிப் பாசுரங்கள் சிலவும் 'மான விஜயம்' என்னும் நாடக நூலும் அப் பத்திரிகையில் வெளியாயின.

**தலைமைத் தமிழ்ப் பண்டிதரானது**

சாஸ்திரியார் கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழாசிரியர் பதவி வகித்து இரண்டாண்டுகள் ஆயின. அக் கல்லூரித் தலைவர் மில்லர் துரையவர்கள் அந்த இரண்டு ஆண்டுகளும் சாஸ்திரியாரது கற்பிக்குந் திறனை நன்கு கவனித்தார். சாஸ்திரியாரது தமிழார்வமும் கட்டுரை வன்மையும் மில்லர் பெருமகனாரின் கருத்தைப் பெரிதும் கவர்ந்தன. ஆகவே, அவர் துணைத் தமிழாசிரியர் பதவியினின்று சாஸ்திரியாரைத் தலைமைத் தமிழாசிரியர் பதவிக்கு உயர்த்தினர்.

**தன்னலங் கருதாத் தன்மை**

சாஸ்திரியார் சென்னைக்கு வந்த தொடக்கத்தில் தங்கசாலைத் தெருவில் செங்கல்வராய முதலியார் வீட்டில் குடியிருந்தமை முன் கூறப்பட்டது. செங்கல்வராயரது மகன் சரவண முதலியார் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்து படித்தனர். அவர் சாஸ்திரியார்

மாணவருள் ஒருவராயினர். அதனால் சாஸ்திரியார் அவருக்குத் தமது இல்லத்திலும் தமிழ் கற்பித்தார். இதனால் பி. எ. வகுப்பிற்குரிய தமிழ்ப் பாடப் பகுதி சரவண முதலியாருக்குக் கைவந்த பாடப் பகுதியாயிற்று. ஆகவே, அவர் பி. எ. வகுப்புத் தேர்விற்குச் சென்ற ஆண்டில் அவரே தமிழில் முதன்மையாகத் தேர்வர் என்னும் நிலை ஏற்பட்டிருந்தது.

அவ்வாண்டு நம் சாஸ்திரியார் தமிழ்த் தேர்வுக் குழுவினருள் ஒருவர். சரவண முதலியாரிடம் அழுக்காறு கொண்ட மாணவர் சிலர் ' இந்த ஆண்டு உனது ஆசிரியரே தேர்வுத் தாள்களைத் திருத்துபவர். ஆனதால் நீ முதன்மையாகத் தமிழில் தேர்வாய் என்பதில் தடையுண்டோ ?'' எனக் கூறினர். சரவண முதலியார் அது கண்டு மனம் வருந்தி அதனைச் சாஸ்திரியாருக்கு உணர்த்தினர். அது கேட்ட சாஸ்திரியார் தமக்கு வரவிருக்கும் பழியை யுணர்ந்து தமது ஊதியம் போயினும் போகட்டும் என்று சொல்லித் தமிழ்த் தேர்வுத் தாள்களைக் கும்பகோணம் கல்லூரித் தமிழாசிரியர் உ. வே. சாமிநாதய்யரைக் கொண்டு திருத்தச் செய்யுமாறு மில்லரிடம் கூறினர் மில்லர் யார் எது கூறினும் உமக்கென்ன, நான் இருக்கிறேன். நீர் ஏன் உமது ஊதியத்தைக் கைவிட வேண்டும்' என்று தைரியம் கூறினர். சாஸ்திரியார் தாம் முன்னர்க் கூறியவாறே செய்யுமாறு வற்புறுத்தி விட்டனர். ஆகவே, அவ்வாண்டுத் தேர்வுத்தாள் உ. வே. சாமிநாதய்யராலேயே திருத்தப் பெற்றது. அப்போதும் சரவண முதலியாரே முதன்மையாகத் தேர்ந்தனர்.

**நேர்மைக் குணம்**

சாஸ்திரியார் கிறிஸ்தவக் கல்லூரித் தமிழாசிரியராக இருந்த காலத்து, ஓராண்டில், திருப்புகழ்ப் பதிப்பாசிரியராகிய ப. த. சுப்பிரமணிய பிள்ளையவர்களின் மகனை

வ. சு. செங்கல்வராய பிள்ளை என்பவர் பி. எ. தமிழில் முதல்வராகத் தேர்ந்தார். அவ்வாண்டு ஆர். வி. கிருஷ்ணையர் என்பவர் ஆங்கிலத்தில் முதல்வராகத் தேர்ந்தார். கல்லூரித் தலைவர் அவ்வாண்டு தமிழ்த் தேர்வில் முதன்மையாகத் தேர்பவருக்குக் கொடுக்க வேண்டிய பரிசை ஆங்கிலத்தில் முதல் தேர்ச்சி பெற்ற கிருஷ்ணையருக்குக் கொடுப்பதென முடிவு செய்தனர். சாஸ்திரியார் நீதிக்குப் புறம்பான இந்தத் தீர்மானத்தைத் தமது நேர்மையான வாதத்தால் மாற்றி அப் பரிசைச் செங்கல்வராய பிள்ளைக்கே கொடுக்கச் செய்தனர். சாதியபிமானம் கருதாது நீதிவழி நின்று நடுநிலைமை கடைப்பிடித்துச் சாஸ்திரியார் செய்த இவ் வருஞ் செயலைக் கண்டு போற்றாதார் இல்லை.

**மனையறம்**

திரு. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கட்கு அவரது பத்தொன்பதாம் வயதில் திருமணம் நிகழ்ந்தது. பழனியில் அரசாங்க அலுவல் பார்த்தவரும் திண்டுக்கல்லைச் சார்ந்தவருமாகிய ப. கலியாணசுந்தரையர் அவரது மகளாகிய முத்து சுப்புலக்ஷ்மி அம்மாள் சாஸ்திரியாரது வாழ்க்கைத் துணை ஆனார்கள். மங்கலம் என்ப மனைமாட்சி என்ற வள்ளுவப் பெருந்தகையின் இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக இருந்த இம்மாது, எல்லாவற்றாலும் கணவனுக்கினிய மனைவியாய்த் திகழ்ந்தனர் என்று கூறுதல் பொருத்தமுடையதாம்.

மனையற வாழ்க்கையின் நன்கலம் நன்மக்கட்பேறு அன்றோ? இந்நன்கலமும் நன்கமையப் பெற்றனர் நம் சாஸ்திரியார். இவருக்கு நடராஜன், சுவாமிநாதன் என்றிரு ஆண் மக்கள்; ஆனந்தவல்லி என்ற பெண் மகவு. சாஸ்திரியார் குடும்ப வாழ்க்கை இனிமையாகவும் அமைதியாகவும் இலங்குவதாயிற்று.

## பெரியார் இணக்கம்

வயதிற் சிறியராயினும் சாஸ்திரியாரது அளவற்ற தமிழன்பும் தமிழறிவும் பல பெரியார்களின் கூட்டுறவை அவருக்குக் கூட்டுவித்தன. அவ் வரலாறுகள் சில இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

## சி. வை. தாமோதரம்பிள்ளை

தமிழ்த் தொண்டில் மிக்க ஆர்வம் கொண்ட இப் பெரியார் சென்னைப் பல்கலைக் கழக பி. எ. தேர்வில் ஒவ்வோராண்டும் தமிழில் முதன்மையாகத் தேர்ந்து பாஸ்கர சேதுபதியவர்களின் பொற்பதக்கம் பெற்ற மாணவரைத் தம்பால் வரவழைத்துத் தாமும் அவருடைய திறமையைச் சோதித்துப் பரிசில் தரும் வழக்கம் வைத்துக் கொண்டிருந்தனர். இதனை அவர் ஒரு திருவிழாவாகவே கொண்டாடி வந்தார்.

சாஸ்திரியார் பி. எ. யில் முதன்மையாகத் தேர்வு பெற்ற ஆண்டிலும் தாமோதரம் பிள்ளை தம் வழக்கப் படியே அவரைத் தம் இல்லத்திற்கு வரவழைத்துச் சோதித்தார். ஒரு மணி நேரத்திற்குள் விடை எழுதி முடிக்குமாறு விஞத்தாள் ஒன்று அளிக்கப் பெற்றது. சாஸ்திரியார் அரைமணி நேரத்திற்குள்ளேயே விடை எழுதி முடித்து விட்டனர். விரைவில் முடிக்கப்பெற்றதோடு விடையும் நன்ருய் இருக்கக் கண்ட பிள்ளையவர்கள் சாஸ்திரியாரைப் பாராட்டிப் பரிசு நல்கியதோடு இறுதிவரை அவரது நண்பராகவும் இருந்து வந்தனர்.

பிள்ளையவர்கள் தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்தைத் தமிழாக்கும் மொழிபெயர்ப்பிலும் சாஸ்திரியாரது திறனைச் சோதிக்க விரும்பி ஷேக்ஸ்பியரது 'வெனிஸ் வணிகன்' என்னும் நாடகத்தினின்று ஒரு பகுதியைத் தமிழில் மொழி பெயர்க்குமாறு கூறினுர். சாஸ்திரியார் அவ்வாறே அப்பகுதிக்கு மொழிபெயர்ப்

பாகச் செய்யுள் ஒன்று இயற்றினர். அது கண்ட தாமோதரம் பிள்ளை சாஸ்திரியாரைப் பெரிதும் பாராட்டினர்.

**பூரணலிங்கம் பிள்ளை**

சாஸ்திரியார் கிறிஸ்தவக் கல்லூரியில் பேராசிரியராக இருந்த காலத்தில் இவர் சென்னையில் அலுவல் பார்த்துக் கொண்டிருந்தவர். இவரது தமிழ்ப் புலமை நாடறிந்தது. அது சாஸ்திரியார் செவிக்கும் எட்டியிருந்தது.

பூரணலிங்கம் பிள்ளை ஒரு நாள் கிறிஸ்தவக் கல்லூரி நூல் நிலையத்திற்கு வந்து அங்கே சில புத்தகங்களைப் புரட்டிக் குறிப்புக்கள் எடுத்துக் கொண்டிருந்தார். அப்போது சாஸ்திரியார் அங்கே வந்தார். அவர் பூரணலிங்கம் பிள்ளையைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தாரே யொழியப் பார்த்ததில்லை. பிள்ளையவர்கள் புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருப்பதைச் சிறிது நேரம் பார்த்துவிட்டு அவர் பூரணலிங்கம் பிள்ளையாகத்தான் இருக்கவேண்டும் என்று யூகித்துக் கொண்டார்.

அப்போதுதான் பிள்ளையவர்களும் தமக்குப் பக்கத்தில் ஒருவர் வந்திருப்பதை உணர்ந்தார். அவரும் சாஸ்திரியாரைப் பார்த்ததில்லை; ஆனால் கேள்விப்பட்டிருந்தார். அவரும் சாஸ்திரியார் இன்னார் என்று ஊகித்துக் கொண்டார். இருவரும் ஒருவரை யொருவர் அறிமுகம் செய்து கொண்டனர். அப்போது பிள்ளையவர்களைப் பார்த்து 'நீங்கள்தானே பூரணலிங்கம் பிள்ளை?' என்றார். 'எப்படி அறிந்து கொண்டீர்கள்?' என்றார் பிள்ளை. 'உங்கள் பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதையும் அறிவேன். இப்போது நீங்கள் புரட்டிக்கொண்டிருக்கும் புத்தகங்கள் எல்லாம் அவ்வாராய்ச்சியைப் பற்றிய புத்தகங்களாகவே இருப்பதால் நீங்கள் இன்னாராகத்தான் இருக்க வேண்டும்

என்று ஊகித்துக் கொண்டேன்' என்றார். பிள்ளையவர்கள் புன்முறுவல் பூத்தார்கள். 'அறிஞர் பொருந்துவர் எதிர்ந்த ஞான்றே' என்றபடி அன்று முதல் இருவரும் நெருங்கிய நட்பினராயினர்.

**மயிலை முனிவர்**

தமிழ் மொழி வளர்ச்சிச் சங்கம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று சாஸ்திரியாருக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. அதற்காக முயன்றனர். சென்னையில் பல பெரியாரிடத்தும் தம் கருத்தை அறிவித்தார். அக்காலத்தில் சென்னை உயர் நீதி மன்றத்தில் ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயர் அங்குள்ள நீதிபதிகளில் ஒருவர். அவர் நற்குண சீலர். தமிழ் அன்பர். அவர் மயிலையில் வதிந்தார். அமைதி சான்ற ஒழுக்கம் நிரம்பியராதலின் அவரை எல்லோரும் மயிலை முனிவர் எனக் குறிப்பது வழக்கம். அவர் நமது சாஸ்திரியாருக்கு உதவி புரிவாராய்ச் சங்கம் ஏற்பட அயராது உழைத்தார். அதன் பயனாக 1899ஆம் ஆண்டு மார்ச் 5ஆம் தேதி 'திராவிட பாஷாபிவர்த்தனி' என்னும் ஒரு சங்கம் நிறுவப் பெற்றது. சாஸ்திரியார் சங்கத்தின் துணைத் தலைவராய் விளங்கினார். இச்சங்கத்தின் சார்பாகப் பல பெரியார்கள் சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். ஆங்கிலக் கலைச் சொற்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன.

**ஆற்றிய அருந் தொண்டு**

சாஸ்திரியாரவர்கள் காலத்தில் தமிழ் நாடக நூல்கள் சில இருந்தன. அவை பண்டை முறையில் அமைந்தவை. புதிய முறையில் அவர் அவற்றை அமைக்க விரும்பினர். அதற்காக ஆங்கில நாடகங்கள், வடமொழி நாடகங்கள் முதலியவற்றை ஆய்ந்து அம்மொழிகளிலுள்ள நாடக விலக்கணங்களையும் ஆய்ந்து 'நாடகவியல்' என்னும் நாடக விலக்கண நூல் ஒன்றைச் செய்தார். மேலும் தாமியற்றிய நாடக இலக்கண

நூலுக்கு இலக்கியமாக ரூபாவதி, கலாவதி, மானவிஜயம் என்னும் நாடக நூல்களையும் இயற்றினர். அந்நாடகங்களில் வரும் உறுப்பினருள் தாமும் ஒருவராய் அமர்ந்து நாடகங்களை நடித்தும் காட்டினர்.

**மதுரைத் தமிழ்ச் சங்கம்**

சாஸ்திரியார் சென்னையில் திராவிட பாஷாபிவர்த்தனி சங்கம் நிறுவித் தமிழுக்கு உழைத்தாராயினும் மேலும் சிறந்த முறையில் தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவ வேண்டும் என்னும் ஓரவா அவர் மனத்துள் இருந்து வந்தது. அந்த அவாவை நிறைவேற்றி வைக்கத் திருவருள் கூட்டுவித்ததுபோல ஒரு செயல் நிகழ்ந்தது. மதுரையில் முன்னை முச்சங்கங்களைத் தொடர்ந்த முறையில் நான்காம் சங்கமொன்று நிறுவ வேண்டும் என்று பாலவநத்தம் ஜமீன்தார் பொ. பாண்டித்துரைத் தேவர் அவர்களும் இராமநாதபுரம் சமஸ்தானத் தலைவர் பாஸ்கர சேதுபதி அவர்களும் மற்றும் பல பெரியோர்களும் முயன்று வருவாராயினர்.

முதலில் சில தடைகள் ஏற்பட்ட போதிலும் பின்னர் அவர்கள் முயற்சி பயன் தந்தது. மதுரைத் தமிழ்ச் சங்கம் 1901ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. சேதுபதி தலைமை தாங்கினர். ஜமீன்தார் மேற்பார்வையாளராக இருந்தார். சூரியநாராயண சாஸ்திரியார், உ. வே. சாமிநாதய்யர், ரா. ராகவையங்கார், சடகோப ராமானுஜாசாரியார் முதலிய தமிழறிஞர் தம்மாலியன்ற பணி புரிந்தனர். சங்கத்தின் அங்கமாக, 'பாண்டியன் புத்தகசாலை'யும் 'சேதுபதி செந்தமிழ்க் கல்லூரி'யும் நிறுவப்பெற்றன. 'செந்தமிழ்' என்னும் மாத சஞ்சிகை சங்கச் சார்பில் வெளி வருவதாயிற்று. அது இன்றளவும் நடைபெற்று வருகின்றது. தமிழ் வேள் திரு பி. டி. ராஜன் அவர்கள் கண்காணிப்பில், தமிழ்க் கல்லூரி சென்னைப் பல்கலைக் கழகத்தோடு

இணைக்கப்பெற்றுச் செயலாற்றி வருகின்றது.

செந்தமிழ்ச் சஞ்சிகை முதல் வெளியீட்டிலேயே சாஸ்திரியாரவர்களது 'உயர் தனிச் செம்மொழி' என்னும் கட்டுரை வெளி வந்தது. அச்சங்கத் தேர்வாளர்களில் ஒருவராக சாஸ்திரியாரும் சேர்த்துக் கொள்ளப் பெற்றுர்.

**வி. கோ. சூ. மாணவர்**

சாஸ்திரியார் கல்லூரியில் தமிழாசிரியராய் இருந்த போது தமிழில் ஆர்வமுடைய கல்லூரி மாணவர்க்குத் தனியே தம் வீட்டில் தமிழ் கற்பிப்பாராயினர். அம் மாணவர்கள் இயற்றமிழ் மாணவர்கள் எனப்பட்டனர். அவர்கள் இங்ஙனம் தனியே சங்க நூல்களையும் உயர்ந்த இலக்கண இலக்கியங்களையும் நன்கு கற்றமையால் அவர்களுக்குக் கல்லூரிப் பாட நூல்கள் மிக எளிதாயின.

இங்ஙனம் இயற்றமிழ் மாணவராக ஏற்பட்டவர்களுள் சிறந்தார் பன்னிருவர். அவர்களாவார் 1. ந. பலராம ஐயர் 2. சரவண முதலியார் 3. சலசலோசனச் செட்டியார் 4. சருக்கை ராமசாமி ஐயங்கார் 5. சுப்ரமணிய ஆசாரியார் 6. முத்தையா முதலியார் 1. கு. ரா. சீனிவாச ஐயங்கார் 8. பிரணதார்த்திஹர சிவனுர் 9. சருக்கை சுந்தராச்சாரியார் 10. சருக்கை வரதாச்சாரியார் 11. ஜக்கராஜ் 12. வ. சு. சண்முகம் பிள்ளை என்பவர்கள். இம்மாணவர்களை சாஸ்திரியார் தமது நண்பர்களைப் போல நடத்தினுர்.

**ஞான போதினி பத்திரிகை**

திரு. பூரணலிங்கம் பிள்ளையவர்கள் ஞான போதினி என்னும் பத்திரிகையைத் தாம் ஆசிரியராயிருந்து நடத்தி வந்தனர். சிறிது காலங் கழித்து அவர் நமது சாஸ்திரியாரைக் கூட்டாசிரியராகச் சேர்த்துக் கொண்டார். அப்பால் சிறிது காலங் கழித்துப் பிள்ளையவர்கள்

கோவை மைக்கேல் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராய் அலுவல் பார்க்க நேர்ந்தகாலே ஞானபோதினியை நடத்தும் பொறுப்பு சாஸ்தியாருக்கு ஏற்பட்டது.

அப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சாஸ்திரியார் அதனை லிங்கிச் செட்டித் தெருவில் இருந்த தமது இல்லத்திலேயே நடத்தி வரலாயினர். அப்போது அப்பத்திரிகை வாயிலாகப் புதியது புனைதலாகச் சில செய்யுட்களைப் 'பரிதிமாற் கலைஞன்' என்ற புனை பெயரில் வெளியிட்டார் 'பரிதிமாற் கலைஞன்' என்பது இவரது வடமொழிப் பெயராகிய சூரியநாராயண சாஸ்திரி என்பதன் தமிழ் ஆக்கம் (சூரியன்—பரிதி; நாராயணன்—மால்; சாஸ்திரி—கலைஞன்). புதியனவாய், ஆங்கிலக் கவி வகையாகிய சானெட் (Sonnet) என்னும் கவிகளைப் போன்று தாம் வெளியிடும் கவிகள் அக் காலத்துப் புலவர் உலகம் ஏற்றுக்கொள்ளுமோ கொள்ளாதோ என்னும் ஐயப்பாட்டால் சாஸ்திரியார் அந்தத் தனிப் பாடல்களை அவ்வாறு புனைபெயரால் வெளியிட்டனர். பின்னர் அவை 'தனிப்பாசுரத் தொகை' ஆயின.

**கலைமணி தந்த பன்னிரு நூல்கள்**

சாஸ்திரியார் இயற்றிய நூல்களுள் தற்காலத்தில் நின்று உலவி வருவன பன்னிரண்டு நூல்கள். அவற்றில் சிலவற்றைப் பற்றி ஈண்டுச் சிறிது கூறுவோம்.

**ரூபாவதி :**

இது இவ்வாசிரியர் முதல் முதலாக இயற்றிய நாடக நூல். இதன் முதற் பதிப்புக்குக் கண்டனங்கள் பல தோன்றவே இதில் பல திருத்தங்களைச் செய்து இரண்டாம் பதிப்பை வெளியிட்டனர் சாஸ்திரியார். இது மேனாட்டு முறையைப் பின்பற்றியது. காணாமற் போன மகளைப் பற்றிய கதை இது. பூரணலிங்கம் பிள்ளையவர்கள் இதற்கு விரிவான முகவுரை வழங்கியுள்ளார்கள்.

**கலாவதி**

ஆசிரியர் தாம் இயற்றிய நாடக இலக்கண நூலுக்கு இசைந்த நாடக இலக்கிய நூல் இது. வடநூல் முறையின் வழி வந்தது. இந்நூலில் 225 செய்யுட்கள் உள. இது சேதுபதியின் சபையில் அரங்கேற்றப் பெற்றது. அந்த அரசர் பெருமகனுர்க்கே உரிமையும் ஆக்கப் பெற்றது.

**தனிப்பாசுரத் தொகை**

பரிதிமாற்கலைஞன் என்னும் பெயரில் ஆங்கிலச் சானெட் கவிதைகளைப் போல எழுதப்பெற்ற தனிப் பாசுரங்களின் தொகுதியே இப்பனுவல். இதனை ஜி. யு. போப்பையர் புகழ்ந்து போற்றியுள்ளார். இந்த நூல் முழுமைக்கும் ஆங்கில ஆக்கமும் தந்துள்ளார்.

**பாவலர் விருந்து**

'செந்தமிழ்ப் பாவலீர்' எனத் தமிழ்ப் புலவரை விளித்து அவரிடம் பேசுமுகமாய்ச் செய்யப் பெற்ற நூல் இது. 'முதல் நாள் விருந்து' என்னும் பெயர் தாங்கி வந்துள்ளது இக்கவிதைக் கொத்து. இவ்வாறே பல நாள் விருந்திடப் பரிதிமாற் கலைஞர் கருதியிருந்தார் போலும். புதினம் சொல்லப்படுதலின், புதியனவாகச் செய்திகள் கூறப்படுதலின், 'விருந்து' என்னும் பெயரிட்டார்.

**நாடகவியல்**

இது நாடகத் தமிழுக்கோர் இலக்கண நூல். பண்டை நாடகத் தமிழ் இலக்கண நூல்கள் இறந்துபட்டமையின் சாஸ்திரியார் வடமொழி ஆங்கில நாடக நூல்களைப் பின்பற்றி இதனை இயற்றினர். இந்நூல் இவரது ஆசிரியர் சபாபதி முதலியாருக்கு உரிமையாக்கப்பட்டது. சாஸ்திரியார் மாணவருள் ஒருவராகிய ந. பலராமையர் இதற்கு உரை எழுதியிருக்கிருர்.

**மதிவாணன்**

சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் உயரிய உரை நடை நூல் ஒன்றைத் தமிழில் எழுதி வெளியிடுக என்று கூறியதற்கிணங்க எழுதப் பெற்றது இந்நூல். ஞான போதினி பத்திரிகை வாயிலாக இது சிறிது சிறி தாக வெளிவந்தது. தாமோதரம் பிள்ளையவர்கள் காலஞ்சென்ற பிறகே இது புத்தக வடிவு பெற்றது. இது கடினமான செந்தமிழ் நடையைக் கொண்டது.

**மான விஜயம்**

இது முற்றும் செய்யுளால் அமைந்த அவலச்சுவை நாடகம். சுதேசமித்திரன் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள் இதற்கு முகவுரை எழுதியுள்ளார்கள். ந. பலராம ஐயரவர்கள் உரை எழுதியுள்ளார்கள். சேர மான் கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணுன் இவர்களைப் பற்றிய நிகழ்ச்சிகளைக் கொண்ட இந்நாட கம் ஆன்ம லட்சணம், போர் முறை, கலைஞர் தம் மேனி நலத்தை மதியாதிருத்தல், கனவின் தன்மை, பெரி யோரைப் பேணுதல், ஆசானிடத்து அன்பு, யாக்கைச் சிறப்பு, ஆசிரிய மாணவ உறவு முதலியவற்றை அழ குற எடுத்துரைக்கின்றது.

**மணிய சிவனுர் சரித்திரம்**

மணிய சிவனுரின் அரிய செயல்கள் பலவற்றை இதில் ஆசிரியர் குறிப்பிடுகிருர். குரு பக்தி காரணமாக அரும்பிய நூல் இது. இதில் வடமொழி மேற்கோள்கள் பல காட்டப்பட்டுள்ளன. ஆசிரியரின் வடமொழி ஆற் றல் இதனுல் புலனுகும்.

**தமிழ்மொழி வரலாறு**

இது ஆசிரியரது திறமைநிறை தமிழாராய்ச்சித் திறவு கோல் என்னலாம். கிறிஸ்தவக் கல்லூரி வரலாற் றுப் பேராசிரியர் எப். டபிள்யூ. கெல்லட் ஆங்கிலத்தில் இதற்கு ஒரு முன்னுரை தந்துள்ளார். தமிழ் வரலாற்றை

முறைப்பட எழுதுதற்கு அடிகோலியவர் சாஸ்திரி யாரே. இவையன்றி 'சூர்ப்பனகை' 'முத்ராராட்சசம்' என்ற நாடக நூல்களையும், 'உமை திருமணம்' என்ற ஒரு செய்யுள் நூலும் இவர் இயற்றியவை.

**இறுதி நாட்கள்**

சாஸ்திரியார் நாளும் பல மணி நேரம் பாடஞ் சொல்லி வந்ததனுலும் தமிழ் நாடகப் பணியில் ஈடுபட்டு இரவுக் காலங்களில் கண்விழித்து வந்ததனுலும் நடுத்தரவயது அடையு முன்பே நோய் வாய்ப்பட்டார். இருமல் நோய் அவரோடு பொருமல் செய்தது என்று இவரேசொல்லி யிருக்கின்ருர். அது காரணமாக 1903ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து ஆறு மாத ஓய்வு பெற்ருர். ஆயினும் தம் வீட்டில் தமிழ் முழக்கம் செழிக்கச் செய் வதை நிறுத்தவில்லை.

வரவர நோய் அதிகமாயிற்று. மில்லர் துரையவர் களும் ரஸ்ஸல் துரையவர்களும் அவரை வீட்டில் வந்து கண்டு தமது அனுதாபத்தைத் தெரிவித்து விட்டுச் சென்றனர். நோயின் தொல்லை மிகவே இவர் பல தலங்கட்குச் சென்று கடவுள் வழிபாடு செய்தார். தம் நோயைப் போக்குமாறு வேண்டுதல் புரிந்தார். தம் தந்தையாரது கட்டளைக்கிணங்கத் திருப்பரங்கிரியில் நாற்பத்தைந்து நாள் பாடு கிடந்து இறைவனைத் துதித்துப் 'பண்டித நாட்டச் செய்யுட்கள்' பதினென்று தொடுத்து வழிபட்டார். ஆயினும் இறைவன் திரு வுள்ளம் வேருயிருந்தது. 1903ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் இரண்டாம் நாள் எதிர்பாராத தன்மை நேர்ந் தது. தமது 33ஆம் வயதில் கலைமணி காலமானுர். தமிழகமே துயரத்துள் ஆழ்ந்தது.

**குண நலன்கள்**

சாஸ்திரியாருடைய பண்பு மேம்பாடுகள் ஆங்காங்குக் கூறியுள்ள பல செய்திகளால் நன்கு விளங்கும். இள


மையிலேயே இவர் அஞ்சா நெஞ்சமும் பகைவருக்குப் பணியாத தன்மையும் உடையவராயிருந்தார். தமது பெயரை மில்லர் துரை மாற்றி வைத்துக்கொள்ளச் சொன்னபோது இவர் அதை நீட்டி வைத்து வாதம் பேசியது இவருடைய அஞ்சாமையைத் தெளிவுறுத்து கின்றது. பகைவருக்குப் பணியாத தன்மைக்கு இங் கோர் எடுத்துக்காட்டு. நமது ஆசிரியர் 'திருக் குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ்' என்னும் நூலை இயற்றிப் பெரிய குளம் வடகரை ஜமீன்தாரிடம் சென் றிருந்தனர். அரங்கேற்றம் இனிது முடிந்தது. பின் னர் ஒரு புலவர் அங்கு வந்து சாஸ்திரியாரைப் பரீட் சித்தனர். அவர் தாம் கூறும் பாடலுக்கு சாஸ்திரி யாரைப் பொருள் உரைக்கச் சொன்னார். சாஸ்திரி யாரால் உடனே அதற்குப் பொருள் கூற இயலவில்லை. ஒரு நாள் அவகாசம் கேட்டு மறுநாள் அதற்குப் பொருள் கூறினர். பிறகு சாஸ்திரியார் அப்புலவரைச் சோதிக்கத் தொடங்கினார். தாம் கூறும் பாடலுக்குப் புலவரைப் பொருள் உரைக்கும்படி அவரைக் கேட் டார். அப் பாடலில் விடைகூற இயலாதிருந்தது ஓர் இடம். அது 'செவ்வேளைப் பாம்பிரவிக்கொடு நரகில் புகுவனெனச் செப்பும் வேதம்' என்பது இதற்கு அப் புலவர் பொருள் கூறுமற் போகவே சாஸ்திரியார் தாமே பொருள் உரைத்தார். பாம்பு-பணி, இரவி-ஆதவன்; ஆகவே 'பாம்பிரவி என்பதைப் பணியாதவன் எனக் கொண்டால் செவ்வேளைப் பணியாதவன் கொடு நரகிற் புகுவனெனச் செப்பும் வேதம்' என்பது குறிப்பிட்ட சொற்றொடரின் கருத்து எனக் கூறினர். இதைக் கண்டு யாவரும் வியந்தனர்.

சாஸ்திரியாருக்கு இருந்த தமிழ்ப் பற்று அளவுகடந் தது. தமது வட மொழிப் பெயரைத் தமிழாக்கிக் கொண்டார். சூரியநாராயண சாஸ்திரி பரிதிமாற்

கலைஞர் ஆனார். வட மொழி வாஞ்சையர் ஒருவர் ஒரு நாள் தமிழை இகழ்ந்தார். 'மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம் பொறியானும் சிறந்து விளங்கி யாக்கை நலம் வாய்ந்த தமிழ் மகள் தான் சமஸ்கிருத நாயகனை எதிர்ப்பட்டு மணக்குங்காறும் முகங் காட்டாது தலை கவிழ்ந்து நின்றனள்; இஃதென்னே!' என்றார். அதாவது தமிழில் முகத்திற்குச் சொல் இல்லை; அது முகம் என்ற சொல்லை வட மொழியிலிருந்து கடன் பெற்றது என்பதே இதனால் அவர் குறிக்க விரும்பியது.

சாஸ்திரியார் உடனே இதற்கு விடையாக 'எவ்வாற்றானும் யாக்கை நலன் வாய்ந்தொளிரும் தமிழ் மகள், தன்னை மணக்குமாறு போந்த சமஸ்கிருத நாயகன் மூங்கையாய், வாய் திறத்தலின்றி முகத்தில் பல சைகைகள் செய்து நின்றமை கண்டு முகஞ் செய்து புறக்கணித்து நின்றாள்' என்றனர். அதாவது சமஸ்கிருத மொழியில் வாய்க்குச் சொல் இல்லை. அது பேச்சு வழக்கற்ற மொழி என இகழ்ந்து விடையிறுத்தார்.

இறுதிக் காலத்தில் இவரது புலமையும் புகழும் உச்ச நிலை அடைந்தன; வெளி நாடுகளிலும் பரவின. இவரிடம் பெருமதிப்புக் கொண்டிருந்த ஜி. யு. போப்பையர் தாம் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியப் பதவியை விட்டு விலக நேர்ந்த போது சாஸ்திரியாரை அந்தப் பதவியில் அமர்த்துமாறு அதிகாரிகளிடம் சொல்லி வைத்தனர். சாஸ்திரியாருக்கு அழைப்பும் வந்தது. ஆயினும் நோய் காரணமாக அவ்வேலையை ஏற்றுக்கொள்ள அவரால் இயலவில்லை. இறப்பு இவரை இளமையிலேயே ஆட்கொண்டு விட்டது. இவர் புகழுக்கு என்றும் அழிவில்லை.


R.M.D.

# பண்டிதமணி

## மு. கதிரேசன் செட்டியார்

### பிறப்பிடச் சிறப்பு

நாவலர் நல்லுலகில் கதிர்மணி எனத் திகழ்ந்த மகா மகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் சீரிய சமயத் தொண்டர்; சிறந்த தமிழ்த் தொண்டர்; கல்விக் கடல்; கலை நலன், பண் பாட்டு நலன், கனிந்த குணநலன் முதலிய பல நலன் களும் ஒருங்கமையப் பெற்றவர். இப்பெரியாரது வர லாறு தமிழகத்தாருக்கு ஓர் எடுத்துக்காட்டு; மாண வர்க்கு ஒரு வழிகாட்டி.

கதிரேசனுர் பிறந்த ஊர் மகிபாலன்பட்டி. இவ்வூர் பூங்குன்ற நாட்டின் தலைநகர் என்று அறியக் கிடக்கின் றது. இந்நாடு தொன்மை வாய்ந்த பாண்டி மண்டலத் தின் மேன்மை வாய்ந்த உள்நாடுகளுள் ஒன்று. பழங் காலத்தில் பூங்குன்றம் என்று பெயர் பெற்றிருந்த இவ் வூர் சோழ மன்னர் காலத்தில் மகிபாலன்பட்டி எனப் பெயர் பெற்றது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என் னும் பொதுமை மணங் கமழ் புறப்பாட்டை, இயற்றிய பூங்குன்றனுர் என்னும் புலவர் இவ்வூரைச் சார்ந்த வரே. இதனுல் இவ்வூர் தொன்மையும் மேன்மையும் பொருந்தியதாகும். இவ்வூர் இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர்வட்டத்திலுள்ள செட்டிநாட்டுள் உள்ளது.

தமிழ் வாணர் பலர் இவ்வூருக்குச் சென்றிருக்கிறுர் கள். அவர்களில் எவரும் இங்கு நிலவிய அமைதியைப் பாராட்டத் தவறியதில்லை. யாழ்ப்பாணம் தாமோ

தரம் பிள்ளையவர்களின் மைந்தர் கிங்ஸ்பரி என்பார் கதிரேசனாரின் கெழுதகை அன்பர். அவர் இவ்வூரை வியந்து போற்றியிருக்கிறார். 'இவ்வூர் என் பெயர் கொண்டு விளங்குகின்றது. நாம் இருவரும் இவ்வூரினரே!' என்று அவர் கதிரேசனாரிடம் தெரிவித்துள்ளார். கிங் (king) என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு அரசன் அதாவது மகிபாலன் என்பது பொருள். பரி (bury) என்னுஞ் சொல் அம்மொழியில் ஊர் அல்லது பட்டி எனப் பொருள்படும். ஆகவே கிங்ஸ்பரி மகிபாலன் பட்டியைக் குறிப்பதாயிற்று. பரி என்பது ஊர்ப் பெயராவதை 'காண்டர்பரி' 'பிரேக்கன்பரி' முதலிய பெயர்களால் அறிகின்றோம்.

வெகுகாலமாக மகிபாலன்பட்டி வெளியூர்களோடு தொடர்பு கொள்ளுவதற்கு அரிதான நிலையில் இருந்தது. அவ்வூருக்குச் சாலை வசதி, பால வசதி கிடையா. கதிரேசனார் தமது பெரும் முயற்சியால் தக்கவர்களைக் கொண்டு இக் குறைகளை ஒருவாறு போக்கினார். ஷேக்ஸ்பியரால் 'ஸ்ட்ராட்போட் அவன்' என்னும் ஊர் சிறப்புப் பெற்றது. காந்தியடிகளால் சேவாக் கிராமம் புகழ் படைத்தது. மகிபாலன் பட்டியும் கதிரேசனார் தொடர்பால் கண்ணியம் உற்றது. இப்பெரியாரின் சிறப்பால் இவ்வூரின் பெயர் அமெரிக்காவிலிருந்து வெளிவரும் கலைக் களஞ்சியத்திலும் இடம் பெற்றிருக்கின்றது.

கதிரேசனார் 1881ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ந் தேதி தமிழ் உலகின் தவப் புதல்வராகத் தோன்றினார். இவரது தந்தையார் பெயர் முத்துக்கருப்பன் செட்டியார்; அன்னையார் பெயர் சிவப்பி ஆச்சி.

**கலைபயில் தெளிவு**

முத்துக்கருப்பன் செட்டியார் மலேயாவிலும் இலங்கையிலும் வணிகம் புரிந்து வந்தார். சிறுவர் கதிரேச

ஞர் தமது ஏழாவது வயதில் உள்ளூர்த் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் மாணவராகப் பயின்ருர். அக்காலத்தில் ஏட்டுச் சுவடிகளே பெரு வழக்காயிருந்தன. பால பாடமும் எண் சுவடியுமே திண்ணைப் பள்ளியின் முக்கியமான பாடங்கள். செட்டிநாட்டு வணிகர்கள் தங்கள் மக்களுக்கு வட்டிக் கணக்குப் போடத் தெரிந்தால் போதும் என்று எண்ணியிருந்த காலம் அது. ஆகவே கதிரேசனுரும் அப்பள்ளிக்கூடத்தில் ஏழு மாதம் கல்வி கற்றுப் பின் பள்ளிப் படிப்பை நிறுத்தி விட்டனர்.

இங்ஙனம் மிகச் சிறிது காலமே அவர் திண்ணைப் பள்ளியில் பயின்றனர் என்ருலும் அவரது நுண்ணறிவு அவரைச் சிறந்த அறிவாளியாக்கியது. ஆத்திசூடி, உலகநீதி முதலியவற்றைப் படிக்க நேர்ந்த காலத்தில் அந்நூல்களின் நயங்கள் அவருக்கு நன்கு புலப்படலாயின. அதனுல் மேலும் பல நூல்களைக் கற்கவேண்டும் என்னும் ஆர்வம் அவருக்கு ஏற்பட்டது.

செட்டிநாட்டு நகரத்தார்கள் சிறுவயதிலேயே கடல் கடந்து வாணிகம் செய்ய முற்படுவது அவர்களது குல வழக்கமாகும். அவ்வழக்கப்படியே பண்டிதமணியும் தமது பதிஞேராவது வயதில் கலமேறி இலங்கை சென்ருர். அக்காலத்தில் அங்கே கம்பளை நூரேலியா வழியில் இரட்டைப் பாதைத் தோட்டத்தில் பல தொழிலாளர் வேலை செய்து கொண்டிருந்தனர். அங்கே வியாபார நிலையமொன்று ஏற்பட்டிருந்தது. கதிரேசனுர் அதில் ஓர் அலுவலாளஞக அமர்ந்தார்.

சிறந்த அறிவாளிகள் பலருக்கு இயற்கை அழகில் ஈடுபடும் தன்மை இயற்கையாகவே அமைவதாகும். அவ்விதமே அமையப் பெற்ற கதிரேசனுர் தம்மிருப்பிடத்திற்கு அருகிலுள்ள மலைப்பகுதிகளின் எழிலைக் காண விரும்பி நாள்தோறும் நெடுந்தூரம் நடந்துவரலாயினர். அதனுல் உடல் நலிவுற்று இளம் பிள்ளை வாதம்

என்னும் நோய்க்கு இலக்கானார்.

இவ்வாறு இருக்கும் காலத்தில் இவரது அருமைத் தந்தையார் காலஞ் சென்றார். அப்போது கதிரேசனார்க்கு வயது பதினான்கு. அவருக்கு உடன் பிறந்தார் இருவர் இருந்தனர். அவர்கள் இருவரும் அவருக்கு இளையவர்கள். ஆகவே, இலங்கையை விட்டுத் தாய்நாடு திரும்பிக் குடும்பப் பொறுப்பை மேற்கொண்டார்.

இளம்பிள்ளை வாதம் அதன் கொடுமையைக் காட்டத் தொடங்கவே கதிரேசனார் அங்கும் இங்கும் அலைந்து திரிந்து செயலாற்ற இயலவில்லை. வீட்டிலே வாளா இருக்க இயலாத சூழ்நிலையில் அவரது மதிநுட்பம் தமிழ்க் கல்வியில் நுழைந்தது. அந்தக் குக்கிராமத்தில் அதற்கேற்ற ஆசிரியர் இல்லை. ஆயினும் அண்ணல் மனந்தளர்ந்தாரில்லை. தமது வழிபடு கடவுளான விநாயகரையே ஆசிரியராகத் தம் உளத்துள் கொண்டு தாமாகவே பல நூல்களை விருப்புடன் கற்றார். காலஞ் செல்லச் செல்லச் சிறந்த புலவரது தொடர்பு இவருக்குக் கிடைக்கப்பெற்றது.

**தோற்றமும் இயல்பும்**

கதிரேசனார் எப்பொழுதும் தூய வெண்ணிற உடையையே உடுத்துவார். வெள்ளை வேட்டியை மூலக்கச்சமாகக் கட்டி அதற்குமேல் விசிறி மடிப்பு அங்கவஸ்திரம் ஒன்றைப் போட்டுக் கொண்டிருப்பார். கையில் வெள்ளிப்பூண் கட்டப்பெற்ற பிரம்புத்தடி; திருநீறு பொலியும் நெற்றி; புன்முறுவல் பூத்தமுகம்; நகைச்சுவை மலிந்த கலைநலங் கனிநடம்புரியும் கன்னற்பேச்சு. ஆயினும் ஒரு குறை; இளம்பிள்ளை வாதத்தால் அவரது இடக்கையும் இடக்காலும் வலுக் குறைந்து முடங்கியிருந்தன. அதனால் கதிரேசனார் எங்குச் செல்ல வேண்டுமானாலும் வண்டியிலேதான் செல்லுவார். நாற்காலியில் அமர்ந்த நிலையிலேயே இருந்து பேசுவார். அவ

ருக்குமுன் ஒரு மேசையில் புத்தகங்கள் பல கிடக்கும். அவற்றுள் ஒன்றிரண்டு திறந்தபடி காணப்பெறும். அவரோடு உரையாட வருபவர்கள் அம் மேசையைச் சுற்றி நாற்காலிகளில் இருப்பர். அப்போது கதிரேசனு ரது தோற்றம் கல்லூரிப் பேராசிரியர் ஒருவரது தோற் றத்தையே நினைவூட்டும்.

புலமைப் பெருமை

பண்டிதமணியவர்கள் தாமாகவே தமிழ் பயின்றார் என்று கூறப்பட்டது. அவ்வகையில் இவர் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், பெரிய புராணம், திருவாசகம், திருக்குறள், அகநானூறு, புற நானூறு முதலிய சிறந்த நூல்களைக் கற்றார்.

அக்காலத்தில் சோழவந்தான் என்னும் ஊரில் அரசன் சண்முகனார் மிகச் சிறந்த அறிஞராகத் திகழ்ந்தார். கல் விக் கடல் என்று கற்றோரால் பாராட்டப் பெற்றார். பண் டிதமணி அவரையடைந்து பாடங்கேட்க விரும்பிச் சென்றார். அவர்பால் தொல்காப்பியம் பாடங்கேட்டார். கதிரேசனார் அரசன் சண்முகனார்க்கு மாணவரே யாயி னும் அரசன் சண்முகனார் இவரைத் தம் நண்பராகவே கருதினர். அதற்குக் காரணம் கதிரேசனார்க்குத் தமிழ் இலக்கியங்களில் ஏற்பட்டிருந்த புலமையே. மேலும் அரசன் சண்முகனார் கற்றுக்கொடுத்த பாடங்களில் கேள்வி கேட்குந்தோறும் கதிரேசனார் தயங்காது தக்க விடை யளித்து ஆசிரியரை மகிழ்வித்தார். பிற்காலத் தில் அரசன் சண்முகனார் கதிரேசனார்க்கு எழுதிய கடி தத்தில் இவரை 'மகாவித்வான்' என்று குறிப்பிட் டிருக்கின்றார்.

கதிரேசனார் கலை பயின்று கொண்டு தம் ஊரில் வாழ்ந்த காலத்தில் செட்டிநாட்டில் பீமகவி என்னும் ஒரு புலவர் திகழ்ந்தனர். அவருக்கும் பண்டித மணிக்கும் நட்பு உண்டாயிற்று. இருவரும் அளவளாவிப் பழகினர்.

கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் அடிக்கடி சொற்போர் செய்தனர். இங்ஙன மிருக்க ஒரு சமயம் பீமகவி தம்மைக் குறை கூறியதாகப் பண்டிதமணி அறிந்தனர். அதனுல் மனம் வருந்திய பண்டிதமணி பீம கவியின் சொற்பொழிவு ஒன்றில் காணப்பெற்ற குற்றம் குறைகளை எல்லாம் எடுத்து 'வித்தியாபானு' என்ற சஞ்சிகைக்கு எழுதி அதில் வெளிவருமாறு செய்தார். அதனைப் படித்த பீமகவி பண்டித மணி யின்மீது மான நஷ்ட வழக்குத் தொடுத்தார்.

அக்காலத்தில் மதுரையில் சோமசுந்தர பாரதியார் வழக்கறிஞராகப் பணியாற்றினுர். பீம கவிக்கு எதிராக வழக்காட வேண்டியிருந்த நிலையில் பண்டிதமணி சோம சுந்தர பாரதியாரைத் தமது கட்சி வக்கீலாகக் கொண் டார். இவ்வகையில் இருவருக்கும் நட்புரிமைத் தொடர்பு உண்டானது. கதிரேசனுரது தமிழறிவு சோமசுந்தரர் கருத்தை ஈர்த்தது; தமிழ் அன்பை உண்டாக்கித் தமிழைக் கற்கச் செய்தது. அவரும் தேர்ந்த தமிழ் அறிஞர் ஆனுர். பண்டிதமணியவர்களின் மணிவிழா வின் போது உரையாற்றிய சோமசுந்தர பாரதியார், தாம் கதிரேசனுருடன் கலந்துறவாடிய காரணத்தால் தமிழில் தேர்ச்சி பெற்ற செய்தியை நன்றியறிதலுடன் புலப்படுத்தியுள்ளார்.

**சமயநூல் அறிவு**

கதிரேசனுர் சைவசமயப் பற்றுடையவராக இருந் தார். சிவநேயச் செல்வர் திருக்கூட்டத்துட் கலந்து இறையன்பு பெருகப் பெற்றவரானுர். இப்பக்குவ நிலையே இவர் சமயநூல் அறிவைப் பெறுதற்குத் துணை செய்தது. காரைக்குடி சொக்கலிங்க ஐயர் அவர்களின் நட்பை அவருக்கு ஏற்படுத்தி வைத்தது. ஐயரவர்களின் தூண்டுதலால் பண்டிதமணி சைவத் திருமுறைகளிலும் சித்தாந்த சாஸ்திரங்களிலும் சிறந்த

பயிற்சியும் புலமையும் பெறலானுர்.

இங்ஙனம் சமயநூல் அறிவு பெற்ற இவர் அவ்வறிவைத் தமிழ்கூறும் நல்லுலகத்திற்குப் பயன்படுத்துவாராய்ப் பற்பல விடங்களுக்கும் சென்று பெரிய புராணம், திருவிளையாடற்புராணம், தேவாரம், திருவாசகம் முதலிய நூல்களின் அரிய கருத்துக்களைச் சொற்பொழிவுகள் வாயிலாக வெளியிட்டனர். இச்சொற்பொழிவுகள் பத்திரிகைகளில் பிரசுரமாயின. இவற்றுள் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஐந்து சொற்பொழிவுகள் 'சமயக் கட்டுரைகள்' என்ற மகுடத்தில் புத்தக வடிவில் வெளிவந்துள்ளன. இவை அறிஞர் போற்றும் திறத்தன.

வடமொழி அறிவு

தமிழ்க் காப்பியங்களையும் சமய நூல்களையும் கற்றுத் தேர்ந்த பண்டிதமணி அவற்றுள் பல வடமொழி நூல்களின் உறவு கொண்டிருப்பதை உணர்ந்து அம்மொழியையும் கற்று அதிலுள்ள நூல்களின் சுவையையும் சுவைத்தறிய விழைந்தார். அயராத அன்பு உழைப்புக்கு வித்தாகலின் அத்துறையில் முயன்ற இவர், தருவை நாராயண சாத்திரியார் என்பவரை ஆசிரியராகக் கொண்டு ஐந்து ஆண்டுகள் வடமொழியைக் கற்ருர். சாத்திரியருக்கு மாதம் எட்டு ரூபாய் சம்பளமும் கொடுத்தார்.

சமஸ்கிருத ஞானத்தின் காரணமாகப் பண்டிதமணியவர்கள் தம் சொற்பொழிவுகளில் தமிழ்நூல் கருத்துக்களோடு வடமொழி நூல் கருத்துக்களையும் வெளியிட்டு மிக்க புகழ் பெற்ருர்.

> வடமொழி வாணரும் தென்மொழி வாணரும்
> ஆங்கிலப் பயிற்சியில் ஓங்கிய நிபுணரும்
> வேட்டுப் பலமுறை கேட்டுச் சிரகர
> கம்பிதஞ் செய்திடக் கவின்பிர சங்கம்
> புரிதரு திறலினன்

என டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் இவரது இருமொழிப் புலமையைக் கண்டு வியந்து வாழ்த்துரை வழங்கியுள்ளார்கள்.

இவரது இருமொழிப் புலமையைப் போற்றும் புலவர், இவரது பெயரும் புலமையைக் குறிக்கும் அடைமொழியும் இவரது இருமொழிப் புலமையை எடுத்து முழங்கும் பெற்றியன என்பர். கதிரேசன் என்னும் பெயரில் 'கதிர்' தமிழ்ச் சொல் ; ' ஈசன் ' சமஸ்கிருத பதம். பண்டிதமணி என்னுந் தொடரில் 'பண்டித' சமஸ்கிருத பதம் ; 'மணி' தமிழ்ச் சொல்.

சமஸ்கிருத ஞானத்தின் காரணமாக இவர் பல வடமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து உதவியுள்ளார். அவைகளில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன கௌடல்லியர் 'அர்த்த சாஸ்திரம்' 'பிருதாப ருத்ரீயம்' 'மண்ணியல் சிறுதேர்' என்பன.

**சொல் விற்பனம்**

திருவாவடுதுறை ஆதீனத் தலைவராகிய அம்பலவாண தேசிகரவர்களும் பண்டிதமணியவர்களும் நெருங்கிய நண்பர்கள். பண்டிதமணி முதல் முறையாகத் தேசிகரவர்களைப் பார்க்கச் சென்றிருந்தனர். அப்பொழுது முறைப்படி தேசிகரவர்களின் பாதங்களில் விழுந்து வணங்கினர். வணங்கும் வேளையில் அவர் கைப்பிரம்பு வழுக்கியதால் கீழே விழுந்துவிட்டார். உடனே மகா சன்னிதானம் தம் இருக்கையை விட்டெழுந்துவந்து பண்டித மணியைத் தாங்கிக் கொண்டார். அப்பொழுது பண்டிதமணி 'பக்தர்களாகிய நாங்கள் தவறுவதும் மகா சன்னிதமாகிய தாங்கள் தாங்குவதும் இயற்கைதானே ' என்று கூறினர். அது கேட்டு முறுவலித்த தேசிகர் 'இனி நீவிர் கீழே விழுந்து வணங்க வேண்டாம்' என்று கூறியருளினர்.

ஒரு நாள் ஒரு அன்பர் வீட்டில் பண்டிதமணிக்கு

விருந்து. உணவிற்குப் பின் வேலேக்காரன் பால் கொண்டு வந்தான். அதனே வாங்கிப் பார்த்த பண்டித மணி சிரித்துக்கொண்டே 'இதோ பாருங்கள் திருப்பாற் கடலில் சீனிவாசன் துயில்கொள்கிருன்' என்ருர். கூடி யிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லே. ஒருவர் சுவரில் மாட்டியிருந்த திருபாற்கடல்துயில் திருமால் படத் தைப் பார்த்தார். அதைத்தான் புலவர் சுட்டுகின்ருரோ என்று ஐயுற்ருர். அவரை நோக்கிய பண்டிதமணி 'இதோ பாருங்கள் பாலில் எறும்பு கிடக்கின்றது. திருபாற்கடல், பால்; சீனிவாசன், சீனியில் விரும்பி வசிக்கின்ற எறும்பு; நான் திருப்பாற்கடலில் சீனிவாசன் துயில் கொள்கிருன் என்று சொன்னது சரிதானே!' என்ருர். இதனைக் கேட்ட அனைவரும் கொல்லென்று சிரித்தார்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் பண்டிதமணியவர்களை நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் திருக்கற்குடி என்னும் தலத்திற்கு அழைத்துச் சென்ருர்கள். இத் தலம் திருச்சியிலிருந்து மூன்று கல் தொலேவில் உள் ளது. திருக்கற்குடி கோவிலுக்கு இருவரும் சென்ற போது பண்டித மணியின் கையைப் பிடித்துத் தாங்கி வந்த நாட்டாரவர்கள் இடையிடையே படியமையப் பெருதிருந்த இடங்களைச் சுட்டிக் காட்டி 'இங்கே படியில்லே' என்று சொல்லிச் சென்றனர். அப்போது பண்டிதமணி சாமர்த்தியமாக 'இறைவன் சந்நிதிக்கு வந்து "படியில்லே படியில்லே" என்று சொல்லாதீர்கள். நம் எல்லோர்க்கும் படியளப்பவன் அவனன்ருே?' என்ருர்கள்.

**கவி சொல்லும் நல்வித்தை**

பண்டித மணியவர்கள் இளமைக் காலந் தொடங்கிக் கவி பாடும் நல்வித்தை கைவரப் பெற்றிருந்தார். யமகம் திரிபு அமையக் கவி பாடுவார். இவர் ஒரு நாடகத்தில்

நடிகர்களுக்குப் பரிசு வழங்குமாறு நேரிட்டது. அப்போது கற்றோர் வியக்கும் வண்ணம் ஒரு பாடல் பாடினார். அக்காலத்தில் இவருக்கு வயது பதினாறே. பிற்காலத்தில் இவர் கவிதைகள் பல இயற்றியுள்ளார். இவரது கவித்திறனை விளக்க இவரியற்றிய வெண்பா ஒன்று குறிப்பிடுவோம். அப்பாடல் இனிமை, எளிமை, ஆழமுடைமை ஆகிய பண்புகளைக் கொண்டு இலங்குகின்றது. மிக எளிய நடை; அந்நடைக்குப் பொருந்திய பொருள் தெளிவு. பொதுவாகத் தமிழ் நாட்டையும் சிறப்பாகத் 'தமிழ்நாடு' என்னும் செய்தித்தாளையும் வாழ்த்துவதாக அமைந்திருக்கும் இப் பாட்டை உற்று நோக்குக.

நாடு நலம்பெருக நம்மரசு செம்மைபெற
வீடுதொறும் செல்வம் மிகமலிய—நாடும்
அமிழ்தாம் மொழியோடு அருங்கலைகள் ஓங்கத்
தமிழ்நாடு வாழ்க தழைத்து.

**கற்றாரோடு கலந்த உறவு**

கற்றவர்களும் மதிநுட்பம் நூலோடுடையவர்களும், தம் முன் மாறுபாடின்றி அன்புரிமையுடன் மனமொத்துக் கலந்து உரையாடுதலினால் உண்டாகும் இன்பம் சொர்க்க இன்பத்தினும் சிறந்தது என்பது நாலடி நிலை நாட்டும் நற்செய்தி. இக்கருத்தைத் தமக்கு உகந்ததாகக் கொண்டார் பண்டிதமணி.

பண்டிதமணியவர்களோ ஓடியாடி நடமாட இயலாதவர். அவருடைய இருப்பிடமோ பிறர் எளிதில் வந்து சேர இயலாத இடம். ஆயினும் அவரது நுண்மாண் நுழைபுலமை அவரது உறைவிடத்திற்குப் பல புலவரை உந்திச் சேர்த்தது. அவருடைய அறிவுத் தாகம் பிற அறிஞர்களோடு தொடர்பு கொள்ளுமாறு அவரை வற்புறுத்தியது. ஆகவே, பிற புலவர்கள் அவரை விரும்பி வந்தடைந்து அளவளாவுதலும் அவர்

பிற புலவர்களை நாடிச் செல்லுதலும் அடிக்கடி நிகழுஞ் செய்திகளாயின.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களிடம் பண்டித மணிக்குப் பெருமதிப்பு இருந்தது. கவிமணியும் அவ்வாறே பண்டிதமணியிடத்துக் கவிந்திருந்தார். எனினும், பண்டிதமணி கல்விச் செருக்குடையவர் எனச் சிலர் சொல்லக் கேட்டுக் கவிமணி மனம் வருந்தியிருந்தார். இங்ஙனம் இருக்கையில் திருவனந்தபுரம் பல்கலைக் கழகப் பாடத்திட்டக் குழுவினர் ஒன்று கூடியபோது இவ்விருவரும் ஒருவரையொருவர் நேரில் கண்டுகொள்ள நேர்ந்தது. அப்போது பல பெரியார்களின் வேண்டுகோளுக்கு இசைந்து பண்டிதமணி ஒரு சொற்பொழிவு ஆற்றினுர். அதன் இனிமையைக் கண்டு யாவரும் வியந்தனர். இச்சமயத்தில் பண்டித மணியின் கல்வியறிவையும் எளிமையையும் கண்டு அதிசயித்த கவிமணி 'யான் பண்டிதமணியைப் பற்றித் தவருன அபிப்பிராயமே கேட்டிருக்கின்றேன். அவர் அகங்காரி என்று சிலர் சொன்னுர்கள். ஆனுல் அது உண்மைக்கு முற்றிலும் மாருனது என்பதை இப்போதே உணர்ந்தேன்' என்று சொல்லி அந்த இடத்திலே கவி பாடி வாயார மனதார வாழ்த்தினுர். அந்த வாழ்த்து வருமாறு:

நெற்றி நிறைந்த நீறுடையான்
நெஞ்சில் பஞ்சாக் கரமுடையான்
முற்றி முதிரும் அன்பாலே
மூவர் தமிழும் பயில்நாவான்
சுற்றந் தழுவும் குணசீலன்
தூய நெறிகண் டொழுகிடுவோன்
கற்ற பெரியோன் கதிரேசன்
கடவுள் அருளால் வாழியவே.

**சொற்பொழிவாற்றல்**

பண்டித மணியின் சொற்பொழிவாற்றல் அன்புட

னும் நன்றியறிந்த உள்ளத்துடனும் எண்ணத் தக்கது. கழகங்களிலும் மாநாடுகளிலும் சொற்பொழிவாளரா கவும் தலைவராகவும் இவர் பல அரிய உரைகள் நிகழ்த்தி யுள்ளனர். இவரிடம் சொற்பொழிவுக்குப் பணங்கேட் கும் பாங்கு இருந்ததில்லை. சில வேளைகளில் பயணச் செலவையும் அழைக்கும் அவையாரிடத்திலிருந்து எதிர்பார்ப்பதில்லை.

சிலருடைய சொற்பொழிவுகள் வெறுஞ் சொல்லடுக் காக ஒலிக்கும்; பொருட் பொலிவின்றிப் புல்லிதாய் இருக்கும். சிலர் மிக விரைந்து பொழிவர்; சிலர் மிக மிக நிதானமாய் மொழிவர். சிலர் மிக மிக மெல்லிய குரலில் பேசுவர். சிலர் வெறும் நகைச்சுவையையே அள்ளி அள்ளித் தெளிப்பர்; சிலர் ருத்திர மூர்த்திகளாகக் கனல் கக்கிக் கழறுவர். இத்தகைய குறைபாடுகள் எதுவும் இன்றிப் பண்டிதமணி மிகவும் கம்பீரமாகவும் நயம்படவும் சொற்பொழிவாற்றுவர். ஏதாவது ஓரிடத் திற்கு அவர் பேசச் சென்றால், அப்பேச்சு நிகழ்ந்த பின்ன ரும் பல நாள் அவரை அங்கே தங்கியிருக்கச் செய்து அறிஞர் அவருடன் உரையாடி மகிழ்வதுண்டு. அறி ஞர் தம் சொற்பொழிவைப் பாராட்டிப் பேசுங்கால் அவற்றை மகிழ்ந்தேற்றலும் அறிவில்லார் ஏதோ பெரு மைக்காகத் தம்மைப் புகழுங்கால் அதனை ஏற்றுக் கொள்ளாமையும் இவருக்கு இயல்பு.

ஒருகால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் விரிவுரையாளர் மு. அருணாசலம் பிள்ளையவர்கள் பண்டிதமணியவர்கள் சொற்பொழிவை வியந்து பாடல் ஒன்று பாடினர். அதில் 'பற்பலரும் அங்காந்து' பண்டிதமணியின் சொற்பொழிவைக் கேட்டனர் என்று குறித்தார். அதைக் குறிப்பிட்டுப் பண்டிதமணி கள் 'பற்பலரும் அங்காந்து' என்னும் தொடருக்குப் பற்களையுடைய பலரும் வாயைத்திறக்குமாறு என்னும்

ஒரு பொருளும் உண்டு; என் வாயில் பல்லே இல்லாதது கண்டு இவ்வாறு கூறினர் போலும்' என நயம்பட வுரைத்தார்.

பிறிதொருகால் இவரது பேச்சினைப் பத்திரிகையில் படித்த ஒருவர் இவரைப் பார்த்து 'தங்கள் பிரசங்கத்தில் சில பகுதிகள் விளங்கின; சில விளங்கவில்லை' என்றார். கல்வி யறிவில்லாத அவரது பேச்சை விரும்பாத பண்டிதமணி உடனே 'விளங்கியவை இன்னவை எனக் கூறுங்கள்; அவற்றையும் மாற்றியமைத்து விடுகின்றேன்' என்றார்.

**தலைமை உரைகள்**

பண்டிதமணியவர்கள் தலைமைதாங்கும் கூட்டங்களில் சொற்பொழிவாளராய் நின்று பேசுதற்குச் சாதாரணமாய்ப் புலவர்கள் அஞ்சுவார்கள். தாம் பேசுவனவற்றை நன்கு சிந்தித்துக் கொண்டு வந்து பயபக்தியுடனே பேசுவார்கள். பேசுபவர்கள் பேச்சில் சிறிது குற்றங்கண்டாலும் உடனே அதைக் கண்டிப்பது பண்டிதமணியின் வழக்கம். தகுதியுடையோர் பேச்சை மதிப்பதும் தகுதியில்லாதார் பேச்சைக் கண்டிப்பதும் இவரது கொள்கை.

இவரது தலைமையில் பேசிய ஒரு புலவர் தம் சொற்பொழிவினிடை அறுசுவைகளைப்பற்றிப் பேச நேர்ந்தது. அப்போது அவர் 'அன்பர்களே! உப்பில்லாப் பொருள் உலகில் இல்லை. அறுசுவைகளைக் குறிக்கும் சொற்களின் இறுதியிலே உப்பு என வந்திருக்கின்றதே இதனை உணர்த்தும். அச்சொற்களைப் பாருங்கள். கார்ப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கைப்பு' என்றார். அதனைக் கேட்டு அவையோர் ஆரவாரித்தனர். இக்கூற்றை ஒப்பாத பண்டிதமணி, முடிவுரையில் 'இத்தகைய சுவையாராய்ச்சியை இவரைத் தவிர வேறுயார் செய்ய வல்லார்? உப்பைப்பற்றி இவ்

வாறு நன்காராய்ந்த புலவர் இதுவரை இருந்ததில்லை; இனியும் இருக்கப் போவதில்லை' என்றார்.

தலைமை தாங்கும் சிலர் சொற்பொழிவாளர் பேசிய பின் பேசுதற்கு ஒன்றும் பொருள் இல்லாதவராய்த் திண்டாடி ஏதோ சொல்லித் தம் முடிவுரையை முடிப்பர். பண்டிதமணியவர்களோ தம் முடிவுரையில் சொற்பொழிவாளர் சொல்லாதுவிடுத்த பல செய்திகளைப் புதிதாக எடுத்துக் காட்டும் பேரறிஞர்.

**இலங்கைச் சொற்பொழிவு**

பண்டிதமணியவர்கள் புகழ் தமிழ்நாட்டில் மட்டுமின்றிக் கடல் கடந்து இலங்கையிலும் புகுந்தது. ஆங்குள்ளார் இவர் சொற்பொழிவைக் கேட்க விழைந்தனர். இதன் பயனாக யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்து ஆண்டு விழாவில் பண்டிதமணியைத் தலைமை வகிக்குமாறு அங்கிருந்த ஸர் பொன். இராமநாதன் அவர்களும் சு. நடேசபிள்ளை அவர்களும் அழைத்தனர். அவர்களது வேண்டுகோட் கிணங்கிப் பண்டிதமணியும் அங்குச் சென்றார்.

புகைவண்டி நிலையத்தில் பல அறிஞர் இவரை அன்புடன் வரவேற்றனர். மறுநாள் அதாவது ஆண்டுவிழா நாளன்று மோட்டார் ஊர்தியில் இவரை அமரச் செய்து மாலையிட்டுப் பெருமைப் படுத்தி ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். மாலையிட்டபோது சிவன் கோயில் மணியோசை கேட்டது. அதைக் கேட்ட அங்கிருந்தவர்கள் 'ஆறுமுக நாவலர் முதல் சைவப் பிரசங்கம் செய்யத் தொடங்கியபோதும் இவ்வாறுதான் மணியோசை கேட்டது என்று சொல்லி மகிழ்ந்தனர். நடேசபிள்ளையவர்கள் பண்டிதமணியைப் பாராட்டி 'ஈழத்துக்கு (பொன்னுக்கு) மணியும் மணிக்கு ஈழமும் இன்றியமையாதன' என்று நயம்பட வரவேற்றனர்.

சொற்பொழிவு அருமையாக அமைந்தது. பண்டித

மணி யாழ்ப்பாணத்தைப் புகழ்ந்து அங்நாடு ஆறுமுக நாவலர், சுன்னுகம் இராமசாமிப் புலவர், ஸர் பொன். இராமநாதன் போன்ற பல பெரியார்களைத் தமிழ் உலகிற் களித்துத் தமிழை வளர்த்தது எவ்வாறு என்று விளக்கினுர். அங்குப் பல பெரியார்களது உறவு பண்டிதமணிக்குக் கிடைத்தது. ஈழத்தினின்று தாய் நாடு திரும்பிய பின்னரும் பல பெரியார்கள் பண்டித மணியுடன் கடிதம் வழியாய்த் தொடர்பு வைத்துக் கொண்டனர்.

**ஆற்றிய அரும்பணிகள்**

பண்டிதமணியவர்கள் தமிழுக்கும் சமயத்திற்கும் சிறந்த தொண்டாற்றியுள்ளார்கள். அவர் செய்துள்ள பணிகளை ஈண்டுத் தொகுத்துக் காண்போம்.

**சன்மார்க்க சபை**

செட்டி நாட்டவர்க்குக் கல்வியிலும் சமயத் துறையிலும் ஊக்கம் ஊட்ட வேண்டும் என்றும் அதற்காகச் சபை ஒன்று நிறுவவேண்டும் என்றும் ஓர் எண்ணம் பண்டிதமணிக்கு ஏற்பட்டது. மகிபாலன்பட்டியை அடுத்து ஏறக்குறைய ஏழு கல் தொலைவில் மேலைச் சிவபுரி இருக்கின்றது. இந்த ஊரில் வ. பழ. சா. பழனியப்ப செட்டியார் என்னும் பணக்காரர் ஒருவர் இருந்தார். அவர் பண்டிதமணிக்கு நெருங்கிய நண்பர். இருவரும் அண்ணன் தம்பி முறை கொண்டாடியிருந்தனர். அவரது உதவியைப் பெற்றுச் சங்கத்தைத் தோற்றுவிக்க எண்ணிய பண்டிதமணி அடிக்கடி சங்கங்களின் மேன்மையைப் பற்றிக் கூறித் தாம் ஒரு சங்கம் நிறுவுவதற்கு அவரது உதவியைத் தேடிப் பெற்றுக்கொண்டனர்.

1909ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் தேதி திருநாவுக்கரசு நாயனுர் குருபூசை நாள் வந்தது. அன்றே சபையைத் தொடங்க வேண்டும் என்றெண்ணி அதற்குச் சில

நாளைக்கு முன் மேலைச் சிவபுரிக்குப் பழனியப்பச் செட்டியாரைப் பார்க்கச் சென்றார். அப்போது அவர் கொழும்புக்குச் சென்றிருந்தார். அவர் தம்பி அண்ணாமலைச் செட்டியாரவர்கள் இருந்தார்கள். அவர்களிடம் செய்தியைத் தெரிவிக்க 'அவரும் அப்படியே சபையைத் தொடங்கிவிடலாம்; அண்ணனும் அதற்குள் ஒரு வேளை வந்துவிடலாம்' என்று தெரிவித்தார்.

குருபூசைநாள் வந்தது. அதற்கு முதல் நாளே பண்டிதமணியும் அரசன் சண்முகனார் முதலிய பல புலவர்களும் மற்றும் பல பெரியார்களும் மேலைச்சிவபுரியை அடைந்தார்கள். அன்றிரவே கொழும்புவிலிருந்து பழனியப்பச் செட்டியார் அவர்களும் வந்து சேர்ந்தார். குருபூசையும் அதை யொட்டி ஏழைகட்கு அன்னமளித்தலும் சிறப்பாக நடந்தேறியதும் சபை நிறுவுதல் தொடங்கப் பெற்றது. அவ்வூர் வடக்குப் பழைய ஊருணியின் தென்கரையிலுள்ள சாமிநாத விநாயகர் சன்னிதியில் சிறந்த பந்தல் ஒன்று இடப்பெற்று அங்கே எல்லாப் பெரியார்களும் கூடினார்கள். 'மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபை' என்னும் பெயரில் சபை தொடங்கப் பெற்றது. அது குருபூசை நாளன்று தொடங்கப் பெற்றதால் அச்சபைக் கட்டடத்தை அவ்வூரார் குருபூசை மடம் என அழைக்கலாயினர். அப்போது பண்டிதமணியவர்கள் அவ்வூர் விநாயகர்மீது பதிற்றுப்பத்தந்தாதி ஒன்று பாடினர். அவர் இளமையில் இயற்றிய பாடல்களில் இவை சிறந்தனவாக மதிக்கப்படுகின்றன. சபையின் முதல் தலைவராகத் திரு. பழனியப்பச் செட்டியார் அவர்கள் ஏற்படுத்தப் பெற்றார்கள்.

பழனியப்பச் செட்டியாரவர்கள் சபைக் கட்டடத்திற்கு 12000 ரூபாய் செலவில் கட்டடம் ஒன்று அமைத்துக் கொடுத்தார். சபையையொட்டிக் 'கணேசர் செந்தமிழ்க் கலாசாலை' என்று ஒரு கல்வி நிலையம் உருவா

னது மேலும் திங்கள் தோறும் சொற்பொழிவுகளும் ஆண்டுதோறும் விழாக்களும் நடக்க ஏற்பாடுகள் செய்யப் பெற்றன.

'நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம்' என்னும் வசனநூலும் வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப் பெற்ற 'மண்ணியல் சிறுதேர்' 'சுக்கிர நீதி,' 'சுலோசனே,' 'மாலதீமாதவம்' முதலிய நூல்களும் வெளியிடப் பெற்றன.

1940 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 7 ஆம் தேதி பண்டித மணியின் உருவப்படம் சபையில் திறந்து வைக்கப் பெற்றது. சபையைச் சேர்ந்த செந்தமிழ்க் கல்லூரி சென்னைப் பல்கலைக் கழத்தைச் சார்ந்த ஒரு கல்லூரியாக மாற்றுவதற்குப் பெருமுயற்சி செய்யப் பெற்று அம் முயற்சியும் கை கூடியது.

**அண்ணுமலைப் பல்கலைக் கழகப்பணி**

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்திய இராஜா ஸர் அண்ணுமலைச் செட்டியாரவர்கள் தம் பல்கலைக் கழகத்தில் பணியாற்றுதற்குத் தக்கவர்களைத் தாமே தேர்ந்தெடுத்து நியமிப்பது வழக்கம் அம் முறையில் அவர்கள் பண்டிதமணியவர்களின் திறமையை அறிந்து 1934ல் தம் பல்கலைக் கழத்தில் ஓர் ஆசிரியராக்கினுர்கள். அவர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும் தமிழ்ப் பேராசிரியராகவும் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராகவும் ஏறக்குறைய பத்து ஆண்டுகள் பணியாற்றினர். பண்டிதமணி ஆங்கிலங் கல்லாதுபோயினும் ஆங்கிலச் சார்பாக இவர் செய்ய வேண்டிய அலுவல்கள் அனைத்தையும் ஆங்கிலங் கற்றவர்களைப் போலவே செவ்வனே செய்து முடித்ததைக் கண்டு வியப்படையாதவர் இல்லை. அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றியிருந்த போது சிதம்பரத்தில் தில்லைத் தமிழ்க் கழகம்

இயங்கியது. அறிஞர் பலர் பண்டிதமணியைத் தலைவ ராகக் கொண்டு இக்கழகத்தின் சார்பாகப் பணிபுரிந்தனர். பண்டிதமணி இதன் சார்பில் ஞாயிறு தோறும் சிலப்பதி காரத்தைப் பாடஞ் சொல்வார். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் சிலரும், மற்றும் பல பெரியோர் களும் இவ்வகையில் பாடங் கேட்டு வந்தனர். பாட முடிவில் இளங்கோவடிகள் விழாச் சிறப்பாகக் கொண் டாடப் பெற்றது. அது காலைப் பட்டுறை அமைந்த சிலப்பதிகாரம் வெள்ளித் தட்டுடன் பண்டிதமணி அவர்களுக்கு மாணுக்கர் குழாத்தின் குரு தக்கிணையாக வழங்கப் பெற்றது.

**கௌடலீயம்**

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழி யில் பெயர்த்தல் வேண்டும்' என்பது பாரதியார் தமிழ் அறிஞர்க்குப் போதித்துள்ள போதனை. இப்போத னையைச் சிர மேற்கொண்டு பண்டிதமணியார் சிறந்த தொண்டாற்றியுள்ளார்கள். அவர்கள் வடமொழியி லிருந்து மொழிபெயர்த்துள்ள நூல்களுள்ளே சிறப்பு வாய்ந்தது கௌடலீயம்.

'கௌடலீயம்' வடமொழியிலுள்ள பொருள் நூல்; அதாவது அரசியல் நெறியின் வழி பொருளீட்டுத் துறைகளை வகுத்துரைக்கும் நூல். தேவ குருவாகிய வியாழன், அசுர குருவாகிய வெள்ளி, மௌரிய சந்திர குப்தருடைய குருவாகிய சாணக்கியர் என்னும் மூவர் சம்ஸ்கிருத அர்த்த சாஸ்திரங்களின் ஆசிரியர்கள். வியாழன் தேவர்களுக்கு ஏற்பத் தம் நூலை வகுத்தார். சுக்கிரன் அசுரர்களுக்கேற்பத் தம் நூலை வகுத்தார். சாணக்கியர் இரண்டையும் பின்பற்றித் தான் வாழ்ந்த காலத்து உலகிற் கேற்பத் தம் நூலை வகுத்தார். கௌடலீயம் மேற்கண்டவாறு சாணக்கியரால் வகுத் தெழுதப் பெற்ற அர்த்த சாஸ்திரமாகும். பண்டிதமணி

வடமொழி தென்மொழி இரண்டையும் ஒருங்கே கற்ற வராதலின், கௌடலீய மொழி பெயர்ப்பை, அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆணையின்படி இனிது நிறைவேற்றிக் கொடுத்தார்.

இந்நூல் தமிழ் மொழிபெயர்ப்பு மூலமும் உரை விளக்கமாகிய அடிக்குறிப்பும் என இரண்டு பகுதிகளாக வெளிவந்துள்ளது. சமஸ்கிருதத்திற்குச் சரியான தமிழ்ச் சொற்கள் இதில் கையாளப்பட்டுள்ளன. கௌடலீயத்தில் காணும் கருத்துக்கள் அடங்கிய தமிழ் நூல்கள் எல்லாம் இந்நூலில் எடுத்துக் காட்டுகளாகக் குறிக்கப்பட்டுள்ளன.

**கதிர்மணி விளக்கவுரை**

பண்டிதமணியவர்கள் தமிழுக்கு ஆற்றியுள்ள பணிகளுள் தலை சிறந்தது 'கதிர்மணி விளக்கவுரை'யை வெளியிட்டதாகும். இது திருவாசகத்தின் ஒரு சில பகுதிகட்கு எழுதிய உரையேயாகும். பண்டிதமணி கதிரேசனார் என்னும் இவ்வாசிரியரது பெயருள் இயற்பெயரின் முதலிலுள்ள 'கதிர்' என்பதும் பட்டப் பெயரின் இறுதியுள்ள 'மணி' என்பதும் ஒன்று சேர்க்கப் பெற்றுப் பண்டிதமணி கதிரேசனரால் இயற்றப் பெற்ற திருவாசக விளக்கவுரை என்னும் பொருளை யுடையதாக இப்பெயர் வழங்கும்.

பண்டிதமணியவர்கள் ஏனைய நூல்கள் எல்லாவற்றினும் மிகுதியாகத் திருவாசகத்தில் ஈடுபட்டவர். சிவ பக்தியும் சிவாநுபூதியும் வாய்ந்தவர்கள். திருச்சிராப் பள்ளி பட்டாபிராம பிள்ளை என்னும் செல்வர், மகாவித்வான் தியாகராயச் செட்டியார் அவர்களைத் திருவாசகத்திற்கு உரை எழுதுமாறு கேட்டு அப்புலவர் தம்மால் இயலாது என்று கூறியதையும் பண்டிதமணி அறிவார். ஆயினும் பற்பல பெரியார்கள் பண்டிதமணியை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதால் அவர்கள் இப்

பணியைச் செய்ய இசைந்தார். பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களின் உரை நுட்பங்களை யெல்லாம் ஒரு சேர உணர்த்துவது இவ்வுரை என்று சைவப் பேரறிஞர் ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் இதனைப் பாராட்டுகின்றார்கள். 'கதிர்மணி விளக்கம் தமிழ்க் கலங்கரை விளக்கமாகப் புலவர்க்குத் துணைபுரியும் பண்பினது' என்பது இதுபற்றித் திரு. வி. க. வின் கருத்து.

**வாழ்க்கைச் சிறப்பும் குண நலன்களும்**

கதிரேசனார் கல்விப் பொருளைத் தேடியது போலவே செல்வப் பொருளையும் தேடினார் முதலில் தம் மரபுக்கேற்ற வணிகத்தை மேற்கொண்டார். பிறகு தம் அறிவைப் பயன்படுத்திப் பொருளீட்டினார். பெருஞ் செல்வர் எனக் கூறுதற்கில்லாவிட்டாலும் இல்வாழ்க்கைச் சிறப்பு அமையும் அளவிற்குச் செல்வம் இருந்தது. 'திருமகளும் கலைமகளும் ஓரிடத்து வாழார்' என்னும் பழமொழி பண்டிதமணியிடத்துப் பொய்யாயிற்று. சீரும் சிறப்பும் பேரும் புகழும் பெற்று வாழ்ந்த பண்டிதமணி தமது 73ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். புலவர் மணியை இழந்த தமிழ் உலகம் முற்றும் அது போது துயர்க்கடலில் ஆழ்ந்தது.

கற்றுக்கொடுக்க ஒரு ஆசிரியரும் அகப்படாத ஒரு குக்கிராமத்தில் பிறந்து வளர்ந்த ஒருவர், பிள்ளைவாதத்தால் முடங்கியிருந்த ஒருவர், தமது சொந்த முயற்சியாலும் பேருழைப்பாலும் பண்டிதமணியாய், முதுபெரும் புலவராய், மகாமகோபாத்தியாயராய் விளங்கினார் என்பது எவ்வளவு அதிசயத்தை விளக்கின்றது. 'மதிநுட்பம் நூலோடுடையார்க்கு அதி நுட்பம் யாவுள முன்னிற்பவை' என்ற திருக்குறளுக்கும் 'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையான் உழை' என்ற திருக்குறளுக்கும் இலக்கியமானவர்


பண்டிதமணியவர்கள்.

கதிரேசனார் எவர்க்கும் அஞ்சுபவரல்லர். இவரது புலமை கண்டு எத்தனையோ புலவர்கள் இவர் தலைமையின் கீழ்ச் சொற்பொழிவாற்றத் தயங்கியதுண்டு. பிறர் குற்றங்களை உடனே எடுத்துக்காட்டிக் கண்டிக்கும் குணமுடையவர். ஆயினும் சிறந்த புலவர்களைப் போற்றுவதும் நன்கு மதிப்பதும் இவர் பண்பாம்.

தம்மாலியன்ற உதவியைப் பிறருக்குச் செய்ய இவர் ஒரு போதும் தயங்கார். ஆயினும் ஏமாற்றிப் பணம் பறிப்பவர்களுக்கு அவர் தக்க பதில் கொடுப்பார். ஒரு கால் போலி பக்தர் ஒருவர் 'முருகா முருகா' என்று சொல்லி இவரை ஏமாற்றிப் பணம் பறிக்க வந்தார். வந்தவர் தாமே ஏமாறிச் செல்ல வகை செய்தார் பண்டிதமணி. இவ்வரலாற்றை பண்டிதமணியின் கட்டுரை யொன்று மிகச் சுவைபட விளக்குகின்றது.

செல்வப் பொருள் பெற்றவர் தம் செல்வத்தைப் பிறர்க்கு வழங்கிப் பயன்பெற வேண்டும். கல்விப் பொருளைப் பெற்றவரும் இவ்வாறே செய்யவேண்டும். இந்த நன்னோக்கங்கொண்டே பல நூல்களை இயற்றினார்; உரை கண்டார்; சொற்பொழிவுகள் ஆற்றினார்; சபைகளையும் நிறுவினார்.

இப் பெரியாரது புகழ் என்றும் ஓங்கி நிற்குமாக.



# ரசிகமணி

## டி. கே. சி.

**ஊரும் பேரும்**

ரசிகமணி டி. கே. சி. அவர்களது ஊர் தென்காசியைச் சேர்ந்த களங்காடு. இவருடைய தந்தையார் பெயர் தீர்த்தாரப்ப முதலியார். இவர் பெயர் க. தீ. சிதம்பரநாத முதலியார் என்பது. வ. உ. சி., எஸ். வி. வி., வ. ரா., என முன்னெழுத்துக்களால் விளங்கும் பெரியார்களைப் போல இவரும் டி. கே. சி. என்னும் மூன்று முன்னெழுத்துக்களால் விளங்குகின்றார். இவருடைய பெயர் வரிசை முறை 'களங்காடு தீர்த்தாரப்பர் (மகன்) சிதம்பரநாதன்' என்பது. ஆங்கில முன்னெழுத்துக்களால் குறிக்கப் பெறும்போது கே. டி. சி. என்று வருதல் வேண்டும். ஆனால் எக்காரணம் பற்றியோ இம்முறை மாறி டி. கே. சி. என்பதே வழக்கில் நிலை பெற்றுவிட்டது.

**தோற்றம்**

குற்றாலத்தில் டி. கே. சி. அவர்கள் வீட்டின் முன் பக்கம் கூடத்தில் அவரது படம் மாட்டப்பட்டிருந்தது. வீட்டின் உள்கட்டில் ஓரிடத்தில் வீணை தனம் அம்மாள் படமும் கவி ரவீந்திரநாத தாகூர் படமும் இருந்தன. ஒருநாள் டி. கே. சி.யின் செயலாளர் உள்கட்டில் இருந்த இரண்டு படங்களையும் முன்பக்கக் கூடத்தில் டி. கே. சி.யின் படத்திற்கு இரு பக்கங்களிலும் மாட்டிவைத்து விட்டார். இப்படி மாட்டும்போது டி. கே. சி. வீட்டில் இல்லை. எங்கோ வெளியில் சென்றிருந்தார். திரும்பி வந்ததும் படங்களைப் பார்த்தார். 'என்னது இது? யார் இப்படிச் செய்தது? நான் எங்கே, சங்கீத ரத்தினம்

தனம் எங்கே? நான் எங்கே, டாக்டர் தாகூர் எங்கே? இவர் அருகில் இருக்க எனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? எடுங்கள் எடுங்கள், என் படத்தை எடுத்து வேறிடத்தில் மாட்டுங்கள், என்று சற்றுச் சினந்து கூறினர்.

செயலாளர் அவர் சொல்லியபடி செய்ய முற்பட்டார். லாகூரிலிருந்து குற்ருல அருவி நீராட வந்திருந்த தமிழன்பரில் ஒருவர் அப்போது அங்கிருந்தார். அவர் டி. கே. சி.யின் கட்டளையையும் செயலாளரின் சங்கட நிலையையும் கண்டு டி. கே. சி.யைப் பார்த்து 'அவ்வளவு எளிதாக அப்படிச் சொல்ல வேண்டாம். தாங்கள்தான் எங்கள் தாகூர்! படம் இருக்குமிடத்திலேயே இருக்கட்டும்,' என்ருர். அவர் கருத்துப்படி படம் அங்கிருந்து எடுக்கப்படவில்லை. அப்படத்தைப் பார்த்த வேறு ஒரு அன்பர் 'இவரைப் பார்த்தால் தாகூரைப் போலவே இருக்கின்றது, தாடியில்லாத தாகூர் இவர்' என்ருர். டி. கே. சி.யின் தோற்றம் தாகூரின் தோற்றம் போன்றதே. உடல் தோற்றத்தால் மட்டும் அன்று; உளப் பண்பாலும் இருவரும் ஒருவரையொருவர் ஒத்தவரே.

**கல்வித்திறன்**

ரசிகமணி ஆங்கிலமும் தமிழும் ஒருங்கே கைவரப் பெற்றவர். பி.ஏ., பி.எல். பட்டம் பெற்று வழக்கறிஞர் தொழில் நடத்தி வந்தார். சென்னைச் சட்ட சபையில் உறுப்பினராக இருந்தார். சென்னை இந்துமத பரிபாலனக் குழுவில் ஆணையர் அலுவலும் பார்த்தார். இவர் இப்படிப்பட்ட பெரும் பதவிகளை வகித்துச் சிறக்க இருந்த காலத்தில் ஆங்கிலம் தெரிந்தால் போதும், தமிழ் தேவையில்லை; தமிழ் பேசவரும் என்று காட்டிக் கொள்வதே இழிவு என்னும் கோட்பாடு தமிழ்நாட்டில் கிளைத்தெழுந்திருந்தது. இப்போக்கிற்கு நமது டி.கே.சி. ஒரு விதி விலக்கு. இவர் தமிழையே தமது உயிராக

மதித்தவர். தமிழ் கற்பதையே தமது தொழிலாகக் கொண்டவர். தமிழ் நூல்களை ஆராய்வதே உள்ளத் திற்குகந்த அலுவலாக அமைத்துக் கொண்டார். தமிழின் பெருமையைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே என்று கருதினர்.

நூல்களை நன்கு ஆய்ந்து அவற்றுள் சிறந்த பகுதி களைத் தொகுத்துச் சேர்த்து, பின் அப்பகுதியிலேயே ஈடுபட்டுத் திளைத்து மகிழ்வது டி. கே. சி.யின் பண்பு. இவர் எங்கே சென்ருலும் இவரது 'இலக்கிய வண்டி' இவரோடு இயங்கிச் செல்லும். கம்பராமாயணம், திருக் குறள், திருவாசகம், முத்தொள்ளாயிரம் முதலியன இவருக்குப் பிடித்தமான நூல்கள். இந்த முக்கியமான நூல்களில் ஆய்ந்தெடுத்த அருங்கவிதைகளின் கோவையை ஒரே புத்தகமாகக் கொண்டிருப்பார். வேறு சில புத்தகங்களின் சாரமான பகுதிகள் சுருங்கிய அள வில் அவரது 'இலக்கிய வண்டி'யில் இடம் பெற்றிருக் கும். காரைக்காலம்மையார், சேரமான், நக்கீரர், பட்டி னத்தார் முதலியோரது பாடல்களும், முதலாழ்வார், பெரியாழ்வார், திருப்பாணழ்வார் முதலியோரது பாடல் களும் இவரது இலக்கியத் தொகுதியுள் இருக்கும். 'ஏன் இப்படி எல்லாவற்றையும் சுருக்கி வைத்திருக் கிறீர்கள்?' என்று யாராவது கேட்டால் 'ஏனைய பகுதிகள் எனக்கு வேண்டாத பகுதிகள்' என்ற மறு மொழி உடனே கிடைக்கும். [கண்ணப்பர் ஊனைத்தீயில் வாட்டி, வாயிலிட்டுச் சுவைத்து நல்ல சுவையுள்ள பகுதிகளை இறைவனுக்கு என்று எடுத்து வைப்பார் எனப் பெரிய புராணம் கூறுகின்றது. சபரி என்னும் கிழவி காட்டினின்று கனிகளைத் தேடிக் கொணர்ந்து அவற்றைக் கடித்துச் சுவைத்துப் பார்த்து நல்லனவற் றைப் பொறுக்கி எடுத்து இராமபிரானுக்கு எனச் சேகரம் செய்து வைத்தாள் என்று இராமயணம் இயம்பு

கின்றது. அதைப் போலவே டி. கே சியும் இலக்கியங் களைச் சுவைத்துப் பார்த்து நல்லனவற்றைத் தேர்ந்து கலை ரசிகர்களுக்கு உரியதாகச் செய்தார்.)

**பேச்சு வன்மை**

ரசிகமணியவர்கள் நல்ல வாக்கு வன்மையுடையவர். பிறரிடம் அன்பாகப் பழகுவார். இனிமையாக அளவளாவுவார். நூல்களின் சுவை தேர்ந்து அவற்றைப் படிப்பார். ரசிகமணி தாம் படித்து ரசித்தவற்றைத் தாம் ரசித்தவாறே பிறரையும் ரசிக்கச் செய்வார். இவரது பேச்சைக் கேட்பவர்கள் இவர் இப்படியே பேசிக்கொண்டிருக்கவேண்டும், நாம் இப்படியே அமர்ந்திருந்து கேட்டவண்ணமாயிருத்தல் வேண்டும், என்று எண்ணி இவர் பேச்சில் அப்படியே மயங்கியிருப்பார்கள்.

**வட்டத் தொட்டி**

வட்டத் தொட்டி என்பது வட்டமான தொட்டி போன்ற முற்றம். திருநெல்வேலியில் வண்ணாரப்பேட்டையில் இருந்த டி. கே. சி. அவர்களின் வீட்டு முற்றமே அது. அம் முற்றம் வட்டமான தொட்டிபோல இருந்ததால் அதற்கு அப் பெயர் வந்தது. அங்கே டி. கே. சி. அவர்களால் இலக்கியச் சங்கம் ஒன்று நிறுவப் பெற்றது. அவரே சங்கத்தின் நிரந்தரத் தலைவர். அவரது கனிந்த இலக்கிய உரை, பாடல் இவற்றை விருப்புடன் கேட்க வந்த நண்பர்கள் யாவரும் அந்த இலக்கியச் சங்கத்தின் உறுப்பினர்கள். அங்கே ரசிகமணியவர்களால் கம்பராமாயண சாரமும் ஏனைய முத்தொள்ளாயிரம், தனிப் பாடல், போன்றவைகளின் தெள்ளமுதத் திரட்டும் உறுப்பினர்க்கு ஊட்டப் பெறும். ஒருவர் சொற்பொழிவாற்றுவது, அவையோர் கேட்டுக் கொண்டிருப்பது என்ற முறை அங்கே நடைமுறையல்ல. அனைவரும் அமர்ந்த நிலையில் இலக்கிய ரசனையில் ஈடுபட்டிருப்பர். தடை விடைகளால் தர்க்க ரீதியில் நடை

பெறும் இலக்கிய ஆய்வுக் கலை அரங்கமே அந்த இலக்கியச் சங்கம். இதன் உறுப்பினர்களில் சிறப்பாகக் குறிப்பிடுதற்குரியார் முதுபெரும் புலவர் வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், பி. ஸ்ரீ. ஆச்சாரியா, அ. சீனிவாச ராகவன், ஜே. சக்கரபாணி நம்பியார், கு. அருணசலக் கவுண்டர், ஆ. முத்துசிவன் ஆகியோர். மேலும் ராஜாஜி, கல்கி, வி. வி. சீனிவாச ஐயங்கார், வையாபுரிப் பிள்ளை முதலியோர் இதன் கௌரவ உறுப்பினர். மேற் கண்ட பெரியார்கள் கூடி உரையாடித் தமிழாராய்ந்த இடம் ஏறக்குறைய இருபது அடி குறுக்களவுள்ள வட்டத் தொட்டி. இந்த வட்டத் தொட்டி அரங்கம் சில காலம் ஒழுங்காக நடந்து வந்தது. பின்னர் டி. கே. சி. சென்னை சென்றதன் விளைவாகச் சிறிது தடைப்பட்டு நின்றது. அப்பால் திருக்குற்றாலத்தில் மீண்டும் தொடங்கப் பெற்று நடந்துவந்தது.

டி. கே. சி. சென்ற இடமெல்லாம் ஓர் இலக்கியச் சங்கம் ஏற்படும். அது கம்பன் புகழ் பரப்பும் கலைச் சங்கமாக இருக்கும். அச்சங்கங்களின் ஆக்க வேலைகளுக்கு இவரே உறுதுணையாக இருப்பார். தியாகராய நகரில் தமிழ்ப் பண்ணையும், கோகலே மன்றத்தில் கம்பன் கழகமும், காரைக்குடியில் கம்பன் கழகமும், இவராலேயே ஏற்பட்டன. இவற்றை எல்லாம் வட்டத் தொட்டியின் கிளை நிறுவனங்கள் என்னலாம்.

குற்றாலத்தில் அருவி நீராடத் தகுந்த காலம் (season) தொடங்கியதும் உறுப்பினர்கள் எல்லாரும் வந்து வட்டத்தொட்டி மாநாடு கூடிவிடுவார்கள். அப்புறம் ரசிகமணியின் ராமாயண உரையாடல்கள், கனிந்த கவிதைப் பேச்சுக்கள், கலைமணங் கமழும் பேச்சுக் கவிதைகள், இவைகளாலேயே பொழுது மிக இனிமையாகக் கழியும். அங்கு வந்துள்ளோர் அனைவரும் உடல் நலத்தோடு உள்ள மகிழ்ச்சியும் பெறுவார்கள்.

விருந்தோம்பல்

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு

என்னும் திருக்குறள் கருத்தை நன்கறிந்த பான்மையோ, தமிழன் என்ற தன்மையில் அவருக்கு இயற்கையாயமைந்த பண்போ, ரசிகமணியவர்கள் விருந்தோம்பலைத் தமது கடப்பாடாகக் கொண்டிருந்தார்கள். விருந்தினரில்லாமல் இவர் ஒருநாளும் உணவருந்தியதில்லை என்று சொல்லலாம். நாள்தோறும் ஐந்தாறு பேர், என் பத்துப் பதினைந்து பேர் கூட, விருந்தினராய் வந்துவிடுவார்கள். காலமல்லாக் காலத்திலும் விருந்தினர் வருவார்கள். எதிர்பார்த்தும் பாராமலும் விருந்தினர்க்கு உணவு அளிக்க வேண்டியிருக்கும். எப்படியோ எல்லாருக்கும் தவருமல் விருந்து நடந்துவிடும். இவர் வீட்டில் அமுதசுரபி இருக்கின்றதோ என்று ஐயம் கொள்ளும்படி இருக்கும். இப்படி நடக்கக் காரணம் என்ன ? விருந்தினர்கள் வருவார்களோ மாட்டார்களோ, எப்போதும் பத்துப் பேருக்கு உணவு சித்தமாயிருப்பது தான்.

இன்னொரு அதிசயம் என்ன வென்ருல் விருந்தோம்பலில் அவருக்கு எவ்வளவு ஊக்கம் இருந்ததோ அவ்வளவு ஊக்கம் அவர் வீட்டுச் சமையல்காரருக்கும் இருந்தது. டி. கே. சி. யின் வாழ்க்கைத் துணைவியார் வரு விருந்தினரைப் பேணுவதைப் பெருங்கலையாகப் பேணி வ்ளர்த்தவர்கள் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இதற்கு மேலே இவரது வளர்ப்பு மகள் ஜானகி; பேரன் நடராஜனும் இப்படியே. இவர்கள் யாவரும் தவசிப் பிள்ளையுடன் போட்டி போட்டுக்கொண்டு பரிமாற வருவார்கள்.

இன்னும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய மற்ருென்றுண்டு. அதுதான் டி. கே. சி. வீட்டுத் தோசை. அது

மிகவும் புகழ் பெற்றது. அதற்காகவே தனியாகத் தயாரித்த குலைவாழை அரிசி. அத்துடன் சரியான அளவில் உளுந்தைக் கலந்து சிரத்தையாக அரைத்து மிகக் கருத்தோடு நான்கு நாழிகை உட்கார்ந்து 'சொய் சொய்' என்று மெல்லிதாக வார்த்து எடுததால் அத் தோசை அமிர்தமாக இருப்பதற்குக் கேட்கவா வேண் டும்? அத்தோசையைப் பக்குவமாகச் சுட்டுத் தருவது யார்? டி. கே சி.யின் மனைவி திருமதி பிச்சம்மாள் அண்ணிதான்! தவசிப்பிள்ளை அந்த வேளையில் மூச்சு விடாமல் வெளியில் போய்விட வேண்டியதுதான்.

**ரசிகமணியின் திருத்தங்கள்**

கவிதைகளைச் சுவைத்துச் சுவைத்து அவற்றில் சார மானவைகளைக் கொண்டு மற்றவைகளைத் தள்ளிவிடுவ தில் டி. கே. சிக்கு நிகர் டி. கே. சி. தான்.

கம்பராமாயணத்தில் பெரிதும் ஈடுபட்டவர் ரசிகமணி. அதனைச் சுவைத்துப் பார்த்த அவர் அதில் பல கவிகள் சாரமற்றிருக்கக் கண்டு அவை கம்பர் பாட்டாக இருக்க முடியாது, செருகு கவிகளாய் இருக்கவேண்டும் என்று அவைகளைத் தள்ளிவிட்டார். 'எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான்' என் னும் பழமொழிக் கிணங்க, ஏடு எழுதியவர் குற்றத் தாலும், கரையான் அரித்துக் குறைபட்ட பாடங்களைச் சரி செய்ய எண்ணித் தமது தொண்டாகச் சிலர் செய்த சேவையாலும் வேறு பல பாடல்கள் பாவம் கெட்டு, சுவை கெட்டு, சீர்கெட்டுப் போயிருந்ததைக் கவனித்த ரசிகமணி அவற்றில் சில திருத்தங்கள் செய்தார்.

இப்படி இவர் திருத்தங்கள் செய்ததைக் கண்டு பல புலவர்கள் இவர்மீது குற்றங்கூறிப் பழித்தார்கள். கண்டனக் கடிதங்கள் பல வரைந்தார்கள். 'தவறாயிருப் பதைத் திருத்துவது தவறா? தவறு தவறாக அப்படியே இருக்க வேண்டியதுதானா? இப்படியும் ஓர் இயல்பு

உண்டா?' இவ்விதம் வருந்திக்கொண்டு தாம் மேற்கொண்ட செயலைத் துணிந்து நிறைவேற்றினர் டி.கே.சி. இவர் கம்பராமாயணத்தில் பல கவிகளைத் தள்ளிவிட்ட காரணத்தால் அது மிகவும் சுருங்கி விட்டது. சுருங்கிய பகுதி இவரது கம்பராமாயணப் பதிப்பு ஆயிற்று. இவர் செய்த திருத்தங்கட்குச் சில உதாரணங்கள் காண்போம்.

கம்பராமாயண மந்திரப் படலத்தில் 'கச்சையங் கடகரி' என்று தொடங்கும் பாடல் டி.கே.சி. அவர்களால் செருகுகவி என்று விலக்கப்பட்ட பாடல்களில் ஒன்று. 'ஆட்சியாவது குடிகளைக் காப்பதாகிய பெரிய தர்மம். அதனை, தான் செய்து வந்ததாகவும் தனக்கு ஓய்வு வேண்டியிருப்பதால் இராமன் 'அதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் அவனைக் கேட்டுக்கொள்ள முற்படுகிறான் தசரதன். இச்சமயத்தில் அரசாளுந் தன்மையைப்பற்றி இகழ்ந்துரைப்பது பொருந்துமா? பொருந்தாதல்லவா? ஆகையால் இப்பாட்டைக் கம்பன் பாடியிருக்க முடியாது. இது செருகு கவி. எனவே, இதனைத் தள்ளிவிட்டேன்' என்று தள்ளியதற்குக் காரணம் கூறுகிறார் டி.கே.சி. அந்தப் பாட்டைப் பார்த்து நீங்களும் உங்கள் தீர்ப்பைக் கூறலாம்.

கச்சையங் கடகரிக் கழுத்தின் கண்ணுறப்
பிச்சமும் கவிதையும் பெய்யும் இன்னிழல்
நிச்சயம் அன்றெனில் நெடிதுநாள் உண்ட
எச்சிலை நுகர்வது இன்பம் ஆகுமோ?

'பட்டத்து யானையின் மீது ஏறிப் பவனி வருதலும் அழகிய வெண்கொற்றக் குடைக்கீழிருந்து நாடாளுதலுமாகிய பெருமையை உடைய இவ்வரசாட்சிச் செல்வம் நிலையற்றது என்றால் அதன் மேலும் நீண்டநாள் உண்ட எச்சிலாகிய இதனை மேலும் உண்ண எண்ணுவது இன்பம் ஆகுமோ?'

மற்றெரு செய்தியைப் பார்ப்போம்.

இராமனுக்குப் பட்டாபிஷேகம் நடைபெறப்போகும் சந்தர்ப்பம். அதை அறிந்த மக்கள் எப்படி யிருந்தார்கள் என்பதை வர்ணிக்கும் பாடல்களில் ஒன்று வருமாறு:

மாதர்கள் கற்பின் மிக்கார்
    கோசலை மனத்தை ஒத்தார்
வேதியர் வசிட்டன் ஒத்தார்
    வேறுள மகளிர் எல்லாம்
சீதையை ஒத்தார் அன்னுள்
    திருவினை ஒத்தாள் அவ்வூர்
சாதுகை மாந்தர் எல்லாம்
    தயரதன் தன்னை ஒத்தார்

டி.கே.சி. இதனைத் திருத்தியமைத்தது வருமாறு:

மாதர்கள் வயதின் மிக்கார்
    கோசலை மனத்தை ஒத்தார்
வேதியர் வசிட்டன் ஒத்தார்
    வேறுள மகளிர் எல்லாம்
சீதையை ஒத்தார் அன்னுள்
    திருவினை ஒத்தாள் அவ்வூர்ச்
சாதன மாந்தர் எல்லாம்
    தயரதன் தன்னை ஒத்தார்

இதில் உள்ள முக்கிய திருத்தம் 'கற்பின்' என்பதை 'வயதின்' என்று திருத்தியதேயாம். 'மாதர்களில் சிலரைத் தனியே பிரித்துக் கற்பின் மிக்கார் என்றுல் பின்னுல் கூறப்பட்டவர்கள் கற்பில்லாதவர்கள் ஆகிருர்கள். இப்படிப் பிரிப்பது சரியா? கம்பன் இப்படிச் செய்திருப்பானு? ஒருபோதும் செய்திருக்க மாட்டான். வயதின் மிக்கார் என்று பாடமிருந்தால் வேறுள மாதர் என்பவர்கள் வயதின் மிகாதவர் ஆவர்: இதுதான் பொருத்தம். இப்படித்தான் கம்பன் செய்திருப்பான். எழுதினவன் தவருக எழுதி ஏட்டைக் கெடுத்திருப்பான்.' இது டி. கே. சி.யின் வாதம்.

சிறந்த கவிதையை டி. கே. சி. ரசிக்கும் விதத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. அவர் மிகவும் ரசித்துப் பேசியுள்ள கவிதை ஒன்று இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

கானுள நிலமகளைக் கைவிட்டுப்
　　போனவனைக் காத்துப் பின்பு
போனனும் ஒருதம்பி ; போனவர்கள்
　　வரும் அவதி போயிற் றென்னு
ஆனுன உயிர்விடவென் றமைவானும்
　　ஒருதம்பி ; அயலே நானு
யானுயிவ் வரசாள்வன் ! என்னேஇவ்
　　வரசாட்சி இனிதே யம்மா !

தன் தாய் இராமனைக் காட்டுக்கு ஓட்டியதை அறிந்து பரதன் மிக வருந்துகிருன். காடு சென்று இராமனை அழைத்துவர முற்பட்டு அச்செயலில் தோல்வியடைகிருன் இராமன் சொற்படி அவனுக்குப் பதில் அவன் பாதுகைகளை வைத்துக்கொண்டு இராமனின் ஆள் போல் இருந்து ஆட்சி நடத்துகிருன். இராமன் தான் மீண்டு வருவதற்குக் கால எல்லையாகக் குறிக்கப் பெற்ற பதினன்கு ஆண்டுகள் அநேகமாய்க் கழிந்து விட்டன. இன்னும் ஏதோ சில நாழிகைகளே எஞ்சியுள்ளன. இந்நிலையில் பரதன் தான் இறந்துபடுதற்கு நெருப்பை வளர்த்து வைத்துக்கொண்டு சத்துருக்கினனை அரசாளும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு கூறுகிருன். இராமாயணத்தில் சத்துருக்கினன் பேச்சு இதுவரையில் கிடையாது. பேசாத தம்பியான இவன் இப்போது பேசப் புகுகின்ருன். இந்த ஒரு சமயத்தில் மட்டும் பேசினலும் அவன் எப்படிப்பட்டவன் என்பதை அவன் பேச்சுப் புலப்படுத்தி விடுகிறது. கம்பன் இப்பாட்டால் சத்துருக்கினனுடைய உத்தம குணத்தை நன்கெடுத்துக் காட்டி விடுகின்ருன். எப்படி என்று பார்ப்போம்.

'அரசைக் கைவிட்டுக் காட்டுக்குப் போனான் அண்ணன். அந்த இராமனைக் காக்க அவன் பின்னே தானும் போனான் ஒரு தம்பி (லக்ஷ்மணன்); போனவர்கள் வருவார்கள் என்று வழிமேல் விழிவைத்து ஏமாந்து உயிர்விட இருக்கின்றான் மற்றொரு தம்பி (பரதன்). இப்படி எல்லாரும் கைவிட்டால் இந்த இராஜ்யத்தை ஆளுவது யார்? மானம், வெட்கம், பாவம், புண்ணியம் எல்லாவற்றையும் விட்டு விடுவதற்காக ஒரு தம்பி வேண்டாமா? அதுதான் நான் (சத்துருக்கினன்),' என்று தன்னை வெறுத்துப் பேசுகின்றான் சத்துருக்கினன். பேசாத தம்பியைப் பேசவைத்து அவன் வாக்காகக் கம்பன் பேசும் பேச்சு நயத்தைப் பாருங்கள்.

கம்பன் தன் ராமாயணத்தைத் தமிழர்க்கு உயில் எழுதி வைத்துவிட்டான். உயில் செப்புப் பட்டயத்தில் அல்ல, தங்கப் பட்டயத்தில் எழுதப்பட்டுள்ளது. அதைப் போற்றிக் காக்க வேண்டியது தமிழர் கடமை.

இதினின்று டி. கே. சி. சாரமானவற்றைப் பாராட்டுவார் என்றும் தம் மனத்தில் உள்ளதை அச்சமின்றி வெளியிடுவார் என்றும் நன்கறியலாம்.

கம்ப ராமாயணத்தில் மட்டுமல்ல; வேறு பல நூல்களிலும் திருத்தங்கள் செய்துள்ளார் டி. கே. சி. இதை ஓர் உதாரணத்தைக் கொண்டு காட்டலாம். ஆண்டாள் பாசுரத்தில் ஒன்று

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவனின் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே

என்பது. இதை டி. கே. சி.

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ

மருப்பொசித்த மாதவன்தன் வாயமுத வாசமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்
[சங்கே

என்று திருத்தியுள்ளார்.

இதில் 'நாற்றம்' என்பது சரியல்ல; 'வாசம்' என்பதே பொருத்தமானது. 'சுவை' என்பதினும் 'அமுது' சிறந்தது, பொருத்தமானது. இது டி. கே. சி.யின் கருத்து. உங்கள் கருத்தை இததேேடு ஒட்டிப் பார்த்து டி. கே. சி.யின் செயல் சரியா தவறுடையதா என்பதை ஓர்ந்து கொள்ளுங்கள்.

**அறிஞரோடு உறவு**

ராஜாஜி முதலான பல பெரியார்கள் ரசிகமணியிடம் மிக்க அன்பும் மதிப்புங் கொண்டிருந்தனர். டி. கே. சி. அவர்கள் அகமகிழ்ந்து கலந்துறவாடியவர்களுள் இருவரைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். ஒருவர் வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார்; மற்றொருவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் வெள்ளக்கால் என்னும் ஊரினர். தமிழில் மிக்க தேர்ச்சி பெற்றவர். பதினறு வயதாயிருக்கும் போதே யமகம், திரிபு, சிலேடை முதலியவைகளைச் சிக்கறுத்து உரைகாண வன்மை பெற்றிருந்தார். இவர் அகலிகை வெண்பா, நெல்லைச் சிலேடை வெண்பா முதலிய நூல்களைச் செய்திருக்கிறார். கம்ப ராமாயணத்தில் சுவை நிரம்பிய பாக்களைத் தேர்ந்து கதைத் தொடர்பு காட்டி கம்ப ராமாயண சாரம் வெளியிட்டிருக்கிறார். மில்டனின் சிறந்த காவிய மொன்றை 'சுவர்க்க நீக்கம்' என்ற தலைப்பில் தமிழில் ஆக்கியுள்ளார். டி. கே. சி. இவரைத் தமிழுக்கு வாய்த்த அரும் புதல்வன் எனப் பாராட்டுவது வழக்கம்.

ரசிகமணி, சுப்பிரமணிய முதலியாரிடம் அன்பு கொண்டிருந்தது போலவே சுப்பிரமணிய முதலியாரும்

ரசிகமணியிடம் அன்பு கொண்டிருந்தார். அவர் ரசிக மணியைப் பற்றிப் புகழ்ந்து கூறியிருப்பதன் சுருக் கத்தை ஈண்டுத் தருகின்றோம்.

'டி. கே. சி. ஒரு அபூர்வ ஜீனியஸ்! எந்தப் பாட்டிலும் விரைந்து சாரத்தைக் கண்டுபிடித்து விடுவார். அதன் சுவையைத் தாம் அனுபவிப்பதோடு பிறரும் சுலபமாக அனுபவிக்குமாறு செய்ய வல்லவர். படித்தவர்களுக்குக் கவிதை நயத்தை எடுத்துக் கூறுவது எளிது. படியாத வர்களுக்கோ அதைக் கூறுவது மிகக் கடினம். இந்த மிகக் கடின வேலையை டி. கே. சி. மிக எளிதாகச் செய்வார்.'

கவிமணியைப் பற்றித் தமிழ் நாட்டில் அறியாதார் இல்லை. டி. கே. சி. இப் பெரியாருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். இருவருடைய தோழமையைக் குறிக்க இங்கே ஒரு சம்பவத்தை எடுத்துரைப்போம்.

திருநெல்வேலியில் சிறிது காலத்திற்கு முன் கலை விழா ஒன்று நிகழ்ந்தது. அதனை நடத்தியவர்கள் அதனை இரு கூறாக்கினர். ஒரு நாள் கலைவிழா; மறு நாள் கம்பன் விழா. கலைவிழாவிற்குக் கவிமணி தலைவர். கம்பன் விழாவிற்கு டி. கே. சி. தலைவர். அப்பொழுது இருவருக்கும் முறையே வரவேற்பு இதழ்கள் வாசித் தளிக்கப்பெற்றன.

டி. கே. சி. க்கு வரவேற்பு அளிக்கப் பெற்றபோது 'திருமணத்திற்கு மாப்பிள்ளை போகிறபோது கூடவே தோழன் ஒருவன் போவான். மாப்பிள்ளை சாதுவாக இருப்பான். தோழன் வாயாடியாயிருப்பான். மாப்பிள் ளைக்குச் செய்யும் உபசாரங்களில் குற்றம் கண்டுபிடிப் பதே தோழன் வேலை. அவன் வாய்க்குப் பயந்து மாப்பிள்ளைக்கு உபசாரம் செய்வது போலவே அத் தோழனுக்கும் உபசாரம் செய்வார்கள் மணமகள் வீட்டார். அதுபோல இருக்கின்றது உங்கள் செய்கை.

சிறந்த கவிஞராகிய தேசிக விநாயகம் பிள்ளையவர்களை வருவித்துத் தலைமைப் பதவி அளித்துப் பெருமைப் படுத்தியது சரியே. அதோடு எனக்கும் இப்பெருமை அளித்தது எப்படிப் பொருந்தும்? இந்தப் பெருமைக்கு என் தகுதி காரணமல்ல. உங்களுக்கு என்மீது உள்ள அன்பே காரணம் என்று உணர்கின்றேன்' என்று கூறினர்.

கவிமணியிடம் ரசிகமணியவர்கள் எத்தகைய மதிப்புக் கொண்டிருந்தார்கள் என்பதற்கு மற்றொரு செய்தி கூறுவோம். 1937ல் வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் அவர்களுடைய எண்பதாம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ந்தது. அப்போது தமிழ்நாட்டு அறிஞர் பலர் அங்கே சென்றிருந்தார்கள். வர இயலாதவர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர். அச்செய்திகளுள் ஒன்று வாழ்த்துக்கவி. அது இன்னரால் அனுப்பப் பட்டது என்று தெரியவில்லை. அக்கவியுடன் வந்த கடிதம் தவறி விட்டதே அதற்குக் காரணம். அக்கவி,

எண்பதாண் டான இளைஞனே இன்னமுதின்
பண்பெலாங் காட்டுதமிழ்ப் பாவலனே—நண்பனே
வெள்ளக்கால் செல்வனே வேள்சுப் பிரமணிய
வள்ளலே வாழ்க மகிழ்ந்து

என்பது. இப்பாட்டை யார் எழுதியதாக எடுத்துச் சொல்வது என்று அறியாமல் விழா நடத்துவோர் மயங்கினர். அங்கிருந்த டி கே.சி. அச்செய்யுளின் இன்சுவை கண்டார். அதன் போக்கை ஆய்ந்தார். அது கவிமணியின் செய்யுள்தான் என்று துணிந்துரைத்தார். 'இத்தகைய அழகிய செய்யுள் கவிமணி வாக்கிலிருந்துதான் வருதற்குரியது' என்று தீர்மானமாக அவர் உரைத்ததே உண்மை என்பது பின் தெரியவந்தது.

டி. கே. சி. யைப்பற்றிக் கவிமணியின் கருத்து யாது எனக் காண்போம்.

கவிமணியவர்கள் ஒருகால் டி. கே. சி. யைப் பற்றிப் குறிப்பிடும்போது ' இவர் நமது ரசிக ரத்தினம். தமிழ் வளர்ச்சியின் பொருட்டு வாழ்கின்றவர்' என்றார். இவ ரது அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவின்போது இவரைக் குறித்துப் புகழ்ந்து பல பாடல்களைப் பாடி யிருக்கிறார். அவற்றுள் ஒன்று வருமாறு.

கன்னித் தமிழேபோல் கம்பன் கவியேபோல்
மன்னும் பொதிகை மலையேபோல்—பன்னரும்
நாடு மகிழச் சிதம்பர நாதநண்பா
நீடுநீ வாழ்க நிலத்து

ரசிகமணியின் ஆழ்ந்த புலமையும் இனிய பண்பும் அன்றோ இத்தகைய பெரியார்கள் அவரைப் புகழச் செய்தன!

**தமிழிசை இயக்கம்**

தமிழர்கள் பண்டைக் காலத்தில் இசைக் கலையை நன்கு வளர்த்திருந்தார்கள். தமிழ்ப்பண்புகளில் பற்பல செய்யுட்கள் இசைக்கப் பெற்றுக் காதிற்கும் கருத்திற் கும் இனிமை தந்துகொண்டிருந்தன. உயிர்க்கொலை யில் மேம்பட்ட பாலைநில மக்களாகிய ஆறலைக் கள்வர், பாணர் இசையைக் கேட்டு மயங்கித் தம் கொலைத் தொழிலைக் கைவிட்டனர் எனத் தமிழ் நூல்களில் அறி கின்றோம். தமிழ் இசை தேவார திருவாசக திவ்விய பிரபந்த காலங்களில் மிக நன்றாக ஓங்கியிருந்தது. பின்னர் எக்காரணத்தாலோ அது வழக்கற்றுக் குறைய லாயிற்று. அல்லது முறைக்கு மாறான வேற்றுருவில் மறைந்து இயங்கலாயிற்று.

இதையறிந்த தமிழறிஞர் அண்மைக் காலத்தில் தமிழிசை மீண்டும் பொலியச் செய்ய வேண்டுமென விழைந்தனர். செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டி யார் அவர்களும் ஸர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களும் இவ்வகையில் தீவிரமாக முயன்றவர்கள்

எனக் கூறலாம். இவர்களுக்கெல்லாம் சிறிதும் சளைக் காத வகையில் பாடுபட்டவர் நம் ரசிகமணி. 1941ஆம் ஆண்டில் நிகழ்ந்த தமிழிசை மாநாட்டிற்கு ரசிகமணி அவர்களைத் தலைமை தாங்குமாறு தமிழிசை இயக்கத் தார் வேண்டிக் கொண்டனர்.

பாட்டைப் பொருளறிந்து பாடுவதுதான் இன்பத்தை அதிகமாக விளக்கும். வேற்று மொழிகளில் பாடல் களைப் பாடும்போது அவற்றின் பொருளை அறிய இயலாததினுல் சுவை குறையவே குறையும். ஆகவே தமிழ்நாட்டில் அயல் மொழிப் பாடல்கள் மிகப் பலவா யும் தமிழ்ப் பாடல்கள் துக்கடா என்னும் பெயரில் மிகக் குறைவாயும் பாடப்படும் வழக்கம் ஒழிய வேண்டும் என்பது டி.கே.சி. அவர்களின் கருத்து. இக்கருத்தை வெளிப்படையாகப் பல இடங்களில் எடுத்துக்கூறி டி. கே. சி. தமிழிசைக்கு ஆதரவு தேடியுள்ளனர்.

தமிழிசை மாநாட்டில் ரசிகமணி தலைமை தாங்கிய போது ராஜாஜி ஆசியுரைத்தார். 'டி.கே.சி. கருத்தே தான் எனது கருத்து. அவர் பேசுவதை நான் பேசுவ தாக வைத்துக்கொள்ள வேண்டும்' என்று அவர் சொன்னுர். அந்த மாநாட்டுக்குப் பின் எங்கும் தமிழி சைச் சங்கங்களும் அரங்குகளும் மாநாடுகளும் தோன் றித் தமிழிசையை முன்னுக்குக் கொண்டுவந்துவிட் டன. 'தமிழிசை அணங்கு தன் மறைவிடத்தினின்று அச்சம் நீங்கி வெளிப்பட்டு அரங்கேறி முழங்கத் தொடங்கி விட்டாள்.

**நாட்டியக் கலைத்தொண்டு**

டி.கே.சி. அவர்களின் கலையார்வம் அவருடன் இயற் கையாகத் தோன்றியது. 1928ஆம் ஆண்டில் அவர் சென்னையில் இந்து மதபோர்டின் ஆணையராக அலுவல் பார்க்கத் தொடங்கினுர். அந்த அலுவலில் அவர் இருந்த போது ஒரு நாள் டி. கே. சி. திருமதி ஹரிஜன்

சாஸ்திரியுடன் நாட்டியக் கலையில் அக்காலத்தில் சிறந்து விளங்கிய பாலசரஸ்வதியைச் சென்று கண்டனர். அப்போது அவள் இவர்கள் முன்னிலையில் சில பதங்களுக்கு அபிநயம் பிடித்துக் காட்டினாள். உடனே டி. கே. சி. யின் உள்ளத்தில் அடங்கியிருந்த பரதநாட்டியக் கலையார்வம் மேலோங்கி வெளிப்பட்டுவிட்டது.

பாலசரஸ்வதியின் பரதநாட்டியத்தைப் புகழத் தொடங்கிவிட்டார் டி.கே.சி. அதை ஒரு பிரசாரம் என்று கூடக் கொள்ளலாம். ஏனெனில் அது காரணமாக, 1935ல் திருநெல்வேலியில் ஒரு திருமண வீட்டில் பாலசரஸ்வதியின் நாட்டியக் கச்சேரி நடக்கலாயிற்று. வட்டத்தொட்டி உறுப்பினர் யாவரும் மற்றும் சில பெரியோரும் அதைப் பார்க்க வந்தனர். அன்று மிக நன்றாக நடனமாடினாள் பாலசரஸ்வதி. அவள் புகழ் ஓங்கிற்று. அதனோடு பரத நாட்டியக் கலையின் புகழும் ஓங்கலாயிற்று. பந்தநல்லூர் திருமதி ஜெயலட்சுமியும் திருமதி ருக்மணி அருண்டேலும் அக்கலையைப் பயின்று கலைவிருந்தைத் தமிழ் உலகிற்களித்தனர். அதற்கு முன் ஏதோ ஒரு குலத்தார் மட்டும் கற்றுக் கொண்டிருந்த அக்கலை அதன்பின் எல்லாக் குலத்தாராலும் கற்கப் பெற்றது.

**தண்ணீர்ச் சிகிச்சை**

டி. கே. சி. யிடம் உள்ள மற்றொரு அருமையான பண்பு அவரது மன உறுதி. காந்தியடிகளின் களிமண் சிகிச்சையைப் போல இவர் குளிர்நீர்ச் சிகிச்சையைக் கையாடிவந்ததை இப்பண்பிற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம். வைசூரியோ பித்தவாத சுரமோ மண்டையிடியோ வயிற்றுவலியோ எல்லாவற்றிற்கும் குளிர் நீர்ச் சிகிச்சைதான். இது வியப்பிற்குரியதாக நமக்குத் தோன்றினும் இவரால் இதைச் சாதிக்க முடிந்தது.

ஒரு சமயம் டி.கே.சி. அவர்கள் பித்தவாத சுரத்தால்

படுத்த படுக்கையாயிருந்தார். அதைக் கேள்வியுற்ற கல்கி அவரைப் பார்க்கச் சென்றிருந்தார். அப்போது அவர் அங்கே ஒரு அதிசயக் காட்சி கண்டார். சோ வென்று கொட்டிக் கொண்டிருந்த மழையில் டி. கே. சி. சுரத்தோடு குளிர்நீரில் குளித்துக் கொண்டிருந்தார். அதைக் கண்ட கல்கி 'சுரம் என்றீர்களே?' என்றார். 'ஆம். அதற்குச் சிகிச்சைதான்' என்றார் நம் ரசிகமணி. அதைக் கேட்ட கல்கி பிரமித்துக் கல்லாய்ச் சமைந்து விட்டார். பின்பு டி.கே.சி. யின் அனுபவம் அவர் மனதைக் கொள்ளைகொண்டது. அதற்குமுன் வெந்நீரில் குளிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்த கல்கி அதன் பின் தண்ணீரில் குளிக்கும் வழக்கத்தை மேற்கொண்டார்.

**புத்தம் புதிய கலைகள்**

புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே, அம்
மேன்மைக் கலைகள் தமிழினின் இல்லை
சொல்லவும் கூடுவதில்லை - அவை
சொல்லும் திறமை தமிழ்மொழிக் கில்லை

என்று ஒரு பேதை உரைத்ததாகப் பாரதியார் வருந்திக் கூறினர். சிறிது காலத்திற்கு முன் தமிழ்நாட்டில் அறிவியற் கலைகளை ஆங்கிலத்தில்தான் போதிக்க வேண்டும், தமிழில் போதிக்க இயலாது, என்னும் கொள்கை நிலவியிருந்தது. தமிழில் அவற்றைக் கற்பிக்கக் கலைச் சொற்களை ஆராய்ந்து கண்டனர் சில அறிஞர். கலை விளங்கினும் அச்சொற்கள் விளங்கா நிலையில் அவை அமைந்தன. இந்நிலைமையில் பல்கலைக் கழகத்தார் ஆய்வுக் குழுவொன்றை நியமித்து விஞ்ஞானத்தைத் தமிழில் கற்பிக்க இயலுமா என்று ஆராயச் செய்தனர்.

நாடெங்கும் போய் இந்தக் குழு தன் தொழிலைச் செய்துவந்த காலத்தில் டி.கே.சி. இதன்முன் தோன்றினுர். புத்தம் புதிய கலைகளைத் தமிழில் சொல்ல முடியும் என்று முழக்கஞ் செய்தார். குழுவினர்க்கும் ரசிகமணிக்கு மிடையே நடந்த உரையாடலின் சாரம் வருமாறு :

**குழுவினர் :** தமிழில் விஞ்ஞானம் சம்பந்தமான சொற்கள் இல்லையல்லவா ?

**டி.கே.சி :** விஞ்ஞானமே இல்லையே? சொற்கள் எப்படி இருக்கமுடியும்?

**குழுவினர் :** ஆகவே விஞ்ஞானத்தைத் தமிழில் கற்பிக்க முடியாதென்று முடிவு கட்ட வேண்டியதுதானே ?

**டி.கே.சி :** நூற்றைம்பது ஆண்டுகளாக நீங்கள் எங்கள் நாட்டை ஆண்டு எங்களை இக்கதிக்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அது போகட்டும், உங்கள் தாய் மொழியாகிய ஆங்கிலத்தில் விஞ்ஞானம் சம்பந்தமான சொற்கள் உண்டா ?

**குழுவினர் :** இல்லாமலா இத்தனைநாள் நாங்கள் விஞ்ஞானம் கற்று வருகிறோம்.

**டி.கே.சி. :** கற்பதென்னமோ உண்மைதான். ஆனல் சொற்கள் ஆங்கிலச் சொற்களா ? கிரேக்க லத்தீன் மொழிச் சொற்களல்லவா ? உங்கள் மொழியே இப்படிக் கடன் வாங்கிப் பிழைக்கும்போது எங்கள் மொழி கடன் வாங்கிப் பிழைக்கக் கூடாதா ?

**குழுவினர் :** இருந்தாலும் கருத்தைத் தமிழில் விளக்குவது கஷ்டந்தான்.

**டி.கே.சி. :** ஏன் முடியாது? நீங்கள் விஞ்ஞானத்தில் கடின மாயிருக்கிற கருத்து எதாவது ஒன்றைச் சொல்லுங்கள். நான் உடனே தமிழாக்கிக் காட்டுகின்றேன்.

இதைக் கேட்டுக் குழுவினர் திகைத்தனர். பேசாதிருந்தனர். டி.கே.சி. தொடர்ந்து பேசினுர் :

‘சரி, நானே ஒன்றைச் சொல்லிக் கருத்தைத் தமிழில் விளக்குகிறேன்.’ என்று ஆங்கிலத்தில் ஒரு வாக்கியத்தைக்* கூறி, பிறகு அதற்கு பின்வருமாறு விளக்கம் கூறினர். “‘ஆண்டோஜனி என்பது பைலோஜனியைப் பிண்ட மாகக் கூறுவது.” இது சரிதானு ?’

குழுவினர் : (சிரித்துக் கொண்டே) ஆண்டோஜனியும் பைலோஜனியும் அப்படியே இருக்கின்றனவே. இவை ஆங்கில மல்லவா ?

டி.கே.சி. : அந்த இரண்டு சொற்களும் உங்கள் ஆங்கில மல்லவே. நீங்கள் அவற்றைக் கொள்ளும்போது நாங்கள் அவற்றைக் கொள்ளலாகாதா ?

குழுவினர் மற்ருெரு வாக்கியத்தைக்† கூறி அதன் கருத்தைத் தமிழில் விளக்க முடியுமா என்று கேட்டனர்.

டி.கே.சி. : ஏன் இயலாது. இதோ பாருங்கள். ஓருயிரின் பிறப்பு வளர்ப்பே ஓரினத்தின் பிறப்பு வளர்ப்பைக் காட்டும் என்பது. ஏன், இது சரியில்லையோ ?

குழுவினர் வாயடைத்துப் போயினர். புத்தம் புதிய கலைகளைத் தமிழில் சொல்ல முடியும் என்பதை டி.கே.சி. நிரூபித்துக் காட்டிவிட்டார்.

டி. கே. சி. ஒரு பெரிய சாதனைக்காரர். ஒரு கழக அமைப்பில் செய்யக் கூடிய பெரும் பெரும் அலுவல்களைத் தாமே தனி நின்று செயலாற்றி நிறைவேற்றியவர்.

பண்புடைமையின் தன்மையும் வடிவமும் நிறமும் பிறவும் எப்படி இருக்கும் என்று அறிந்து கொள்ள ஆசைப்படுவோர் டி.கே.சி. யைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். டி.கே.சி. யை நேரில் காணும் பேறு பெருதவர்கள் அந்தப் பண்பின் பயனை அவருடைய பணிகளைக் கண்டு மகிழ்வர்.

---

* Ontogeny is the recapitulation of phylogeny.
† The history of the individual will reveal the history of the race.

உலகில் பிறரால் செய்ய இயலாத செயல்களைச் சிலர் செய்வர். இத்தகையவர்களைச் 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்று திருக்குறள் பாராட்டும்.

டி.கே.சி. வள்ளுவர் வாக்கிற்கு இலக்கியமான பெரியார்.

## பயிற்சி வினக்கள்

### அழகுமணி திரு. வி. க.

1. கலியாணசுந்தரர் பல்கலைக்குரிசில் ஆனது எவ்வாறு?
2. அழகுமணியின் ஆசிரியப்பணியைப்பற்றி எழுதுக.
3. திரு. வி. க. நடத்திய செய்தித்தாள்கள் யாவை? அவற்றில் ஒன்றைப்பற்றி விவரித்து வரைக.
4. திரு. வி. க. தொழிலாளர்க்குச் செய்த சேவைகளைத் தொகுத்து வரைக.
5. திரு. வி. க. வின் சீர்திருத்தக் கருத்துக்கள் யாவை? எவையேனும் இரண்டினைப்பற்றி எழுதுக.
6. கலியாணசுந்தரரின் நூல்களில் மூன்றினைப்பற்றிச் சுருக்கி வரைக.
7. திரு. வி. க. வின் குணச் சிறப்பு யாது?

### கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

1. நாஞ்சில் நாட்டில் தோன்றிய தமிழ்ப் பெரியார்கள் யாவர்?
2. தேசிக விநாயகர் இளமையிலேயே கவிபாடுந்திறன் பெற்றிருந்தார் என்பதற்குச் சான்று தருக.
3. சிறு குறிப்பு வரைக: மருமக்கள் மான்மியம்; ஆசிய ஜோதி; உமார்கய்யாம்
4. கவிமணியின் கல்வெட்டாராய்ச்சித் திறம் எத்தகையது?
5. கவிமணி பண்டிதமணி நட்புரிமைத் தொடர்பினைப் பற்றி எழுதுக.
6. கவிமணியின் தமிழ்ப்பணிகளைத் தொகுத்தெழுதுக.
7. தேசிக விநாயகரின் குணமேம்பாட்டைத் தெரிவிக்க

## கலைமணி சூரிய நாராயண சாஸ்திரியார்

1. சூரிய நாராயண சாஸ்திரியாரின் இளமைப் பருவம் பற்றி எழுதுக.
2. சாஸ்திரியாரின் கல்லூரிப் படிப்பைப்பற்றி வரைக.
3. மில்லர், சாஸ்திரியாரிடம் கொண்ட தனியன்பிற்குக் காரணமான நிகழ்ச்சி யாது ?
4. சாஸ்திரியாரின் கற்பிக்குந் திறனை ஓர் உதாரணங் கொண்டு விளக்குக.
5. குறும்பாகக் கேள்வி கேட்கும் மாணவரை கலைமணி எவ்வாறு திருத்துவார் ?
6. கலைமணி எவ்வெப் பெரியாரிடம் கூட்டுறவு கொண் டிருந்தார் ? அவர்களில் ஒருவரிடம் இவர் கொண் டிருந்த அன்புத் தொடர்பின் சம்பவம் எழுதுக.
7. சாஸ்திரியார் இயற்றிய நூல்களில் இரண்டினைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
8. கலைமணியின் நாடகப்பணியை விவரிக்க.
9. கலைமணியின் குணநலன்களைக் குறிக்க.

## பண்டிமணி கதிரேசன் செட்டியார்

1. மகிபாலன்பட்டியை கிங்ஸ்பரி எங்ஙனம் பாராட் டினார் ?
2. பண்டிதமணியின் தோற்றம் புலமைப் பெருமை இவற்றில் ஒன்றினை விவரிக்க.
3. பண்டிதமணியின் வடமொழி அறிவினால் தமிழுக் குற்ற ஆக்கம் யாது ?
4. கதிரேசனார் சொல்விற்பன்னத்திற்கு ஓர் உதாரணம் காட்டுக.
5. இளமைக் காலத்தில் இலங்கை சென்ற பண்டிதமணி யைப்பற்றி நீவிர் அறிந்தது யாது ?
6. புலமை மிக்கவராய் இலங்கை சென்ற பண்டிதமணி எவ்வாறு பாராட்டப் பெற்றார் ?

7. பண்டிதமணி சன்மார்க்க சபை நிறுவிய வரலாற்
வரைக.

8. கதிரேசன் செட்டியாரின் வாழ்க்கைச் சிறப்பியல்
களை எழுதுக.

## ரசிகமணி டி. கே. சி

1. ரசிகமணியின் ஊரும் பேரும் பற்றிய விவரங்க
தெரிவிக்க.

2. ரசிகமணிக்கும் தாகூருக்கும் ஒற்றுமையுண்டு எ
பது எதனுல் தெரிகின்றது ?

3. இலக்கியவண்டி, 'வட்டத்தொட்டி' என்பன
எவ்வெவற்றைக் குறிக்கின்றன ?

4. டி.கே.சி. இல்லத்தில் விருந்தோம்பல் முறை
விவரிக்க.

5. கம்பராமாயணத்தில் டி.கே.சி. செய்த திருத்தங்க
யாவை ?

6. கவிமணி ரசிகமணி இவர்களின் நட்புரிமைத் தொ
பிணைப் புலப்படுத்துக.

7. தமிழிசை இயக்கத்தில் டி.கே.சி. யின் பங்குப
யாது ?